இதழ் 208

# மண்

ஜேர்மனி / 2021
ஆடி - ஆவணி / Jul - Aug















32 வது சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் யப்பான் - டோக்கியோ 2020-2021

**International Oliympics Cames 2020 - 2021 Tokyo - Japan (23.07.2021 - 08.08.2021)**

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX

# ஆசிரியர் பக்கம்...

தற்போதைய ஜனாதிபதியுமான கோத்தபாயா ராஜபக்ஷ வின் பொதுமன்னிப்பு அடிப்படையில் நீண்ட காலமாகச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில், அனுராதபுரம் சிறையிலிருந்து 15பேரும், யாழ். சிறையிலிருந்து ஒருவருமாக 16 பேர் 24-06-2021 அன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தற்போது ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. தமிழர் உரிமைப் போராட்டத்தை நசுக்க வேண்டும், பயங்கரவாதத்தை ஒடுக்க வேண்டும் என்ற நோக்கில் 1978ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் கொண்டுவரப்பட்டபயங்கரவாதச் சட்டம் ஒரு ஜனனாயக விரோதச் செயலாகக் கருதப்படுகிறது.

சிறுபான்மையினர் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழக்கூடாது, என்பதே அரசின் எதிர்பார்ப்பாக இருந்தது.இச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தரப்பினர் கூறிவருகின்றனர். இதனை ஜனநாயக விரோதச் செயற்பாடு என ஐரோப்பிய ஒன்றியமும் தெரிவித்துள்ளது.புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுதடுத்து வைக்கப்பட்டவர்களில் வழக்கு விசாரணை முடிவடைந்து தண்டனை அனுபவிப்பவர்களின்எண்ணிக்கை 35ஆகும். இவர்களில் பெரும்பாலானவர்கள், தமக்குக் கிடைக்கப் பெற்றுள்ள தண்டனைக்காலத்தைவிடவும் அதிக வருடங்கள் சிறையில் கழித்துள்ளனர். அத்துடன் மேலும் 38 பேருக்கு மேல்நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பான வழககுக்கள்கூட 20 வருடங்களாக நடைபெற்றுள்ளன.

போசன் பௌர்ணமி தினத்தன்று விடுதலை செய்யப்பட்ட அரசியல் கைதிகளோடு,கொலைக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு மரண தண்டனை வழங்கப்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவரையும் ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார். இந்த விடுதலைக்கு ஐ.நா. அமெரிக்க செயலகங்கள், சட்டத்தரணிகள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அத்துடன் ஜனாதிபதி ஏற்கனவே தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மிருசுவில் பகுதியில்பொதுமக்களைப் படுகொலை செய்தவரை நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியின் அதிகாரத்தில் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

அரசியல் கைதிகள் சிறையில் வாடும் நிலையில் கொலைக் குற்றவாளிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கிய ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட ஏனையவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்படுகிறது.அதேவேளை தொடர்ந்தும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி கைதுகள் மேற்கொள்வது நிறுத்தப்படுவதோடு பயங்கரவாதத் தடைச்சட்டமும் நீக்கப்பட வேண்டும் என்பதையே வலியுறுத்த விரும்புகிறோம்.

**வெறுமையாகிப் போனது வாழ்க்கை என்பதுதான் நிதர்சனமான உண்மை..!....**

-வெறுமையாகிப் போனது வாழ்க்கை என்பதுதான் நிதர்சனமான உண்மை..!...

-என்னதான் ஊரடங்கு என்பது கொஞ்சம் கொஞ்சமாக தளர்த்தப்பட்டாலும்,

-நாம் ஒவ்வொருவரும், மற்றவரிடமிருந்து அன்னியப்படுத்தப் பட்டுவிட்டோம் என்பதே உண்மை..!

-நண்பர்களோடு குலவும் அந்த சுதந்திரம், இனிவரும் காலங்களில் தொடருமா, என்பதும் கேள்விக்குறியே..!

-உறவுகளின் சுபநிகழ்வு கொண்டாட்டங்கள் இனி முன்போல் சாத்தியமா என்பதும் ஐயமே..!

-ஊரடங்கின் காரணமாக வீட்டிலேயே இருந்தவர்களின் பொருளாதார நிலையினைவிட, மன அழுத்தம் மிக பாரம்.

-என்றாவது ஒருநாள், வீட்டிலேயே அமர்ந்து, நினைத்ததையெல்லாம் திருப்தியாக சாப்பிட முடிகிறதா ?, என அன்றொருநாள் அலுத்துக் கொண்டிருந்த நாம்,

-இன்று வீட்டிலேயே இருந்தும், உணவின் பக்கம் மனம் செலுத்த இயலவில்லை என்பதும் நிதர்சனம்.

-நெருங்கிய உறவுகளின் உயிர் இழப்புகள் தந்த அழுத்தம் நீங்குவதற்குள்,

-அடுத்தடுத்து என ஆயிரம் அதிர்ச்சிகள் வரிசைகட்டி காத்திருக்கின்றன, எதிர்காலம் பற்றிய எண்ணத்தில்.

-பள்ளிக்குச் செல்லாமலே தேர்ச்சியடையும் மாணவர்கள் முகத்தில், மகிழ்ச்சியினை தேடவேண்டித்தான் உள்ளது.

-வீட்டிற்குள், வார்த்தைகள் குறைந்துபோய், அலைபேசிகள் ஆக்கிரமித்துக் கொண்டன.
முகம் பார்த்து பேசுவதைக் கூட, முடிந்தவரை தவிர்த்து விடுகிறது.

**ஆசிரியர்**

# சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி....

### அறம் செய விரும்பு..

அறம் என்றால் தருமம் என்பது பொருள். தருமம் என்பது என்ன?..பிறருக்கு உதவி செய்வது, அவர்களுடைய துன்பங்களை அகற்றுவதற்கான நல்ல செயல்களில் ஈடுபடுவதே தருமமாகும். என்ன செயல்கள், எத்தகையவர்களுக்கு?..எழை எளியவர்களின் பசியாற அவர்கள் உண்பதற்கு உணவளிப்பதே தலைசிறந்த தருமமாகும். உடுக்க உடை கொடுப்பதும் தருமம்.. இப்படித் தருமம் செய்வாயானால் ஏழைகளின் துன்பம் நீங்கும். அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி மலரும். உன் உள்ளத்திலும் இன்பம் பெருகும் இந்த மகிழ்ச்சியையும் இன்பத்தையும் நீ அடையவேண்டாமா?.. ஆகவே துன்பப்படுபவர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, உழைத்து வாழமுடியாத உடல் ஊனமுற்றவர்களுக்கு உன்னால் இயன்ற அளவு அறம்செய் என்கிறார் ஔவைப்பாட்டி

### ஆறுவது சினம்..

சினம் என்றால் கோபம். கோபம் நெருப்பைப்போன்றது. நெருப்பு என்ன செய்யும்?.. தன்னிடம் சேரும் எந்தப் பொருளையும் சுட்டு எரித்து அழிக்கும்.. கோபமும் அப்படித்தான் கோபம் அதைக்கொண்டவரைச் சுடும். நாசமாக்கிவிடும். கோபத்தினால் அழிந்த சாம்ராஜ்யங்கள எவ்வளவோ கோபத்தினால் வீடிழந்து, நாடிழந்து வாழ்விழந்து நாசமான மன்னர்களைப்பற்றி வரலாறுகள் கூறுகின்றன. அது மட்டுமா கோபத்தினால் மனிதனின் உடல்நிலை, மனநிலையும் பாதிக்கப்படுகின்றது என்பது ஆராய்ச்சியாளர்களின் முடிவும்கூட. அழகிய தோற்றமுடையவரை கோபத்தின்போது காண எத்தனை வெறுப்பாக இருக்கின்றது. ஆகையால் கோபம் ஏற்பட இடம் தரலாகாது. கோபம் வந்தாலும் அது ஆற வேண்டும். அதைத்தணிய விடவேண்டும். ஆகவே கோபப்படுவது ஒருபோதும் கூடாத விடையமாகும்.

# நட்பு!..




நட்பு என்பது தோழமை, உறவு, செறிவு, சுற்றம், என்று பொருள்படும். சொந்தம் என்பது உறவுகளைச் சொல்லவல்லது. நல்ல நட்பு என்பது நாம் சொல்லாமலே நல்ல உணர்வுகளுடன் கலந்து நிற்பது. ஆம்!..நலல நட்பைத் தேடாதவன் உலகத்தில் பிறந்தும் பயன் தேடாதவன் என்கிறார் திருவள்ளுவர்.

”முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பதே நட்பு”

ஒருவரைப்பார்த்து நாம் புன்னகைப்பது மட்டும் நட்பல்ல. அந்தப்புன்னகை அவன் துன்பத்தைப் போக்கிவிடும் மருந்தாக அமையவேண்டும். ஆபத்தில் உதவுபவன்தான் உண்மையான நண்பன். நாம் நல்ல நட்பைத் தேடுமுன் அவன் நம் நட்புக்குத் தகுதியானவனா?..என்பதை ஆராயவேண்டும். நல்லவரோடு நாம் நட்புக்கொண்டால் அவர்களின் நல்லறிவு நம்மை நல்வழிப்படுத்தும். நல்ல நண்பர்கள் நாம் தவறு செய்யும்போது சுட்டிக்காட்டி நம்மைத் திருத்துவார்கள். நல்ல நட்பால் நம் தமிழ் இலக்கியத்தின் சரித்திரம் படைத்தவர்கள் பலர்.

”அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்” என்பது பழமொழி. நட்பானது வளர்பிறைபோன்று இருக்க வேண்டும். தனி மனிதர்களுக்கிடையே ஏற்படும் இந்த நட்பு ஒரு சமுதாயத்தை மேம்படுத்துகின்றது. இனம், மதம், மொழி, நிறம், நாடு வேறுபாடின்றி உயர்விலும் தாழ்விலும் இன்பத்திலும் துன்பத்திலும் இரண்டறக்கலப்பதே உண்மையான நட்பு. நல்ல நூல்களை நாம் பயிலும்போது மனதுக்கு மகிழ்ச்சியும் நற்பயனும் கிடைப்பதுபோல் நல்ல நண்பர்களுடன் பழகும்போது நம் வாழ்வு சிறக்கும்!..

”நல்ல நட்பைத் தேடிப் பெறுவோம்!..இனிதே வாழ்வோம்!”

**(யேர்மனி-எசன் நகர தமிழ் மொழிச்சேவை கலாச்சார மன்றம் தமிழ்ப்பாடசாலை 2020 ஆண்டுவிழாவில் மாணவர் ஒருவரால் பேச்சுப்போட்டியில் பேசிய விடையம்)**

# தெனாலி ராமன் கதைகள்... (Thenali Raman Stories)



சுமார் நானூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூ ரில் ஓர் ஏழை அந்தணக் குடும்பத்தில் பிறந்தான் தெனாலிராமன். இளமையிலேயே அவன் தன் தந்தையை இழந்தான். அதனால் அவனும் அவனுடைய தாயாரும் தெனாலி என்னும் ஊரில் வசித்து வந்த அவனுடைய தாய் மாமன் ஆதரவில் வாழ்ந்து வந்தனர்.

சிறு வயதிலேயே அவனைப் பள்ளிக்கு அனுப்பியும் பள்ளிப்படிப்பில் அவனுக்கு நாட்டம் செல்லவில்லை. சிறு வயதிலேயே விகடமாகப் பேசுவரில் வல்லமை பெற்றான். அதனால் அவன் பிற்காலத்தில் ”விகடகவி” என்னும் பெயர் பெற்று பெரும் புகழுடன் விளங்கினான்.

காளி மகாதேவியின் அருட்கடாட்சம் பெற்றவன். பின் வரலாற்றுப் புகழ்பெற்ற விஜயநகர சாம்ராஜ்யத்தின் அரசன் கிருஷ்ணதேவராயரின் அரண்மனை ”விகடகவி”யாக இருந்து மன்னரையும் மக்களையும் மகிழ்வித்தான். அவனுடைய நகைச்சுவைக்காக மன்னர் அவ்வப்போது ஏராளமான பரிசுகளை அளித்து ஊக்குவித்தார்.

இவர் ”விகடகவி”, ”குமார பாரதி” என்ற பட்டங்கள் பெற்றவர். இவருடைய வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல கதைகளாக வழங்கப்படுகின்றன. நகைச்சுவையாக இருந்தாலும் பல அறிவியல், சித்தனைக் கதைகளாக அமைந்தபடியால் இன்றும் உலக மக்களால் போற்றப்படுகின்றார்.

# முல்லா கதைகள்....



ஓர் ஊரில் ஒரு பள்ளி வாசல் இருந்தது. அங்கே தொழுகை நடந்து கொண்டிருந்தது. முல்லா அந்த வழிபாட்டை முன்னின்று நடத்திக்கொண்டிருந்தார். கருணையும் இரக்கமும் மிக்க ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரான அல்லாவின் திருப்பெயரால் இந்த சமயத்தில் குரு அங்கு வந்தார் அவர் முகத்தில் புன் முறுவல் முல்லாவுக்கு கோபம் வந்து விட்டது. ஏன் சிரிக்கிறாய்? நண்பா! நீ செய்வது தொழுகை அல்ல...அதனால் சிரிக்கிறேன் என்ன சொல்லுகிறாய்? தொழுகை இல்லையா? ஆமாம் உன்னுள்ளே பிரார்த்தனை என்பதே இல்லை

முல்லாவின் கோபம் இன்னும் அதிகமாயிற்று. நேராக ஒரு நீதிபதியின் முன்னால் போய் நின்றார். நீதிபதி அவர்களே! இந்த ஆள் நாங்கள் தொழுகிற வேளையில் பள்ளிவாசலுக்குள் நுழைந்தார் அதுமட்டுமல்ல வழிபாடு செய்கிற எங்களைப் பார்த்துச் சிரிக்கிறார். இவருக்கு நீங்கள் மரணதண்டனை வழங்க வேண்டும். நீதிபதி குருவின் பக்கம் திரும்பினார். நிங்கள் சிரித்தது உண்மையா? உண்மைதான் ஏன் சிரித்தீர்கள்?அவர் செய்தது பிரார்த்தனை அல்ல...அதனால் சிரித்தேன் அப்படியா ஆமாம்..அவரை நான் சில கேள்விகள் கேட்க தாங்கள் அனுமதிக்க வேண்டும். கேளுங்கள்

முல்லா வந்து முன்னால் நின்றார். அவர் கையில் ஒரு புனித குர் ஆனைக்கொண்டு வந்து கொடுங்கள் என்றார் குரு கொடுத்தார்கள். இப்போது சொல்லுங்கள்... உங்கள் உதடுகள் அல்லாவை உச்சரித்த வேளையில் உங்கள் மனம் வீட்டிலே விட்டு வந்த கோழிகளை நினைத்ததா? இல்லையா? முல்லா கையில் குர் ஆன் இருந்தது. உண்மைதான் என்று முல்லா ஒப்புக் கொண்டார். குரு விடப்பட்டார். குரு முல்லாவை விடவில்லை. நீதிபதி சொன்னார் : முல்லா அவர்களே ! பள்ளி வாசலுக்குப் போய் ஏமாற்றுவதை விட அங்கே போகாமல் இருந்து விடுவது மேல். அங்கே ஒரு வேடதாரியாக இருக்காதீர்கள்.

கருணை மயமான இறைவனது திருநாமத்தைச் சொல்லும்போது கோழியை நினைக்காதீர்கள் உள்ளே இருக்கிற ஒன்றைத் தேடிச்

# குழந்தைகளுக்கு எப்படி வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்துவது?..

(படித்ததில்பிடித்தது)

-Deepa Janakiraman-

என்று சிலர் என்னிடம் கேட்டிருந்தார்கள். சிலர் என்றால் நாலு பேர். அதில் முதலாமவர் வேறு யாருமல்ல, நானே தான். எங்களது குழந்தைகள் புத்தகங்கள் வாசிக்க வேண்டும் என்பது என்னுடைய பெருங்கனவு. அதற்காக சில முயற்சிகள் எடுத்து வருகிறோம். வாசிக்கக் கற்றுக் கொடுக்கும் முன் புத்தகத்தினை எப்படி கையாள வேண்டும் அதற்குரிய மரியாதையை எப்படித் தர வேண்டும் என்பதை கற்றுத் தரலாம். பக்கங்களைத் திருப்புகையில் ஓரம் மடங்காமல், கசங்காமல் திருப்புவதற்கு முதலிலேயே சொல்லித் தந்தால் அவர்கள் மறக்கவே மாட்டார்கள். புத்தகங்களைக் கிழித்து விடுவார்கள் என்று அவர்களிடம் ஒளித்து மறைத்ததேயில்லை.

அவர்கள் கண்படும் இடங்களில் தான் புத்தகங்கள் அடுக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு முறையும் புத்தகங்களை அடுக்கி வைக்கும்போதும் அவர்களை உதவிக்கு வைத்துக் கொள்வது அவர்களை உற்சாகப்படுத்துகிறது. நமக்கான புத்தகங்கள் வாங்கப்போகும்போது அவர்களையும் அழைத்துப் போய் அவர்களுக்கும் வாங்கிக் கொடுத்தால் வாங்கிய சூழலை அவர்கள் மறக்கமாட்டார்கள். அவர்களுக்கென புத்தகங்கள் வைக்க இடம் தந்து அவர்களையே அடுக்கி வைக்க சொல்லலாம். புத்தகங்கள் வைத்து அவர்கள் வீடு கட்டுவார்கள், ரயில் ஓட்டுவார்கள், டீச்சர் விளையாட்டு விளையாடுவார்கள்..இவையெல்லாம் அவர்கள் புத்தகங்களோடு பழகுவதற்கு ஏதுவான சூழல்கள். இந்த நேரங்களில் தான் ஏன் இத்தனை புத்தகங்கள் இருக்கின்றன எதற்காக வாசிக்க வேண்டும் இந்தப் புத்தகத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று விதவிதமான சந்தேகங்கள் வரும். கேட்பார்கள்.

புத்தகங்கள் சார்ந்த புரிதல்களுக்கு இது ஊக்கப்படுத்தும். நாம் எதில் சுவாரஸ்யம் கொள்கிறோமோ குழந்தைகளும் அதில் ஆர்வம் செலுத்துவார்கள் என்பது பொதுவான ஒன்று. குழந்தைகள் முன்பாக வாசிப்பது மிக முக்கியம். அவர்கள் டிவி பார்க்கும்போதோ, விளையாடும்போதோ நாம் வாசிப்பது அவர்களை அறியாமல் மனதில் பதியும். சில நேரங்களில் வாசித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தைத் தேடிக் கொண்டிருக்கும்போது நான் கேட்காமலேயே சரியாய் எடுத்து என்னிடம் தந்திருக்கிறார்கள்.

என்ன வாசிக்கறீங்க? என்ன கதை? என்று கேட்டால் புரியும்படி அந்தக் கதையை சொல்ல வேண்டும். மலையாள எழுத்தாளர் உன்னிகிருஷ்ணன் எழுதிய

"லீலை" கதையை வாசிக்கும்போது என்ன கதை என்று என் சின்ன மகள் கேட்டாள். எனக்கு முதலில் திகைப்பாக இருந்தது. பிறகு ஒருவர் யானை தேடி ஊர் ஊராகப் போகிறார் என்பதாக சொன்னேன். எதற்கு என்று கேட்டதற்கு "ஒரு யானை கூட அவருக்கு பிரெண்ட் ஆகணுமாம்" என்றதும் எங்களுக்குள் நடந்த உரையாடலில் வேறு ஒருகதை பிறந்தது. எதிர்காலத்தில் அவள் அந்தக் கதையை வாசிக்கும்போது என் கற்பனைத்திறனை அவள் பாராட்டலாம் அல்லது "எங்கிட்ட சொல்ற கதையா அது" என்று தலையில் அடித்துக் கொள்ளலாம்.

"எப்படி இதெல்லாம் தெரிஞ்சு வச்சிருக்கீங்க?" என்று எதற்காவது அவர்கள் அபூர்வமாய் நம்மைப் பார்த்து வியப்பார்கள். விடவே கூடாது அந்த வாய்ப்பினை. இவையெல்லாம் புத்தகம் வாசித்து கற்றுக் கொண்டது என்று சொல்லிவிடவேண்டும். இதெல்லாம் செய்தால் குழந்தைகள் புத்தகம் வாசிப்பார்களா என்று என்னிடம் கேட்டால், இன்னும் ஐந்து வருடங்களுக்கு பிறகு உறுதியாய் பதில் சொல்வேன். இப்போது தான் உயிர் மெய் எழுத்துகளை கற்றுக் கொண்டு வருகிறார்கள் என் பிள்ளைகள்.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## பழமொழிகளும் அதன் கருத்துக்களும்...

01-இரக்கப்போனாலும் சிறக்கப்போ..
(வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்)
02-இறைத்த கிணறு ஊறும் இறையாத கிணறு நாறும்..
(தருமம் செய்வது பெருமையான விடையமாகும்)
03-இட்டுக் கெட்டார் யாருமில்லை..
(தர்மம் செய்து யாரும் ஏழையாகவில்லை)
04-கண்டதும் கற்கப் பண்டிதனாவான்..
(முடிந்தபோதெல்லாம் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்)
05-எறும்பு ஊரக் கற்குழியும்..
(தொடர்ந்து முயற்சித்தால் பயன் கிடைக்கும்)
06-எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு..
(வீண் பெருமை பேசுதல்)
07-கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்..
(பிறர் பேச்சைக் கேட்பதால் தீமையே விளையும்)
08-குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்..
(தவறு செய்தால் மனச்சாட்சி உறுத்தும்)
09-குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்..
(பொய்கூறிப் பெருமை கொள்ளக்கூடாது)
10-வீடுக்கு வீடு வாசற்படி...
(ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சனை உண்டு)

## விடுகதைகளும் விடைகளும்...

01-பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து அது என்ன?..
02-எதைக்கொடுத்தாலும் சாப்பிடுவான் தண்ணீர் கொடுத்தால்இறந்துவிடுவான் யார்?..
03-ஊர் முழுக்கச் சுற்றுவேன். வீட்டுக்குள் நுழைய விடமாட்டார்கள்?..
04-உடம்பு முழுவதும் முள் அது என்ன?..
05-கையும் இல்லை காலும் இல்லை ஓடிக்கொண்டே இருப்பேன் இது என்ன?..
06-தொப்பிபோட்ட காவல்க்காரன் உரசிவிட்டால் சாம்பலாவான் அவன் யார்?..
07-மண்ணுக்குள்ளே கிடப்பான் ஆனால் மங்கலகரமானவன் அவன் யார்?..
08-ஏழு குதிரை பூட்டிய தேரில்வரும் மன்னவன் அவன் யார்?..
09-தொட்டுவிட்டால் ஏதும் இல்லை அரைத்துவிட்டால் சிவந்திடுவாள் யார்அவள்?..
10-ஓடுவான் ஒற்றைக்காலில் நிற்று சுழல்வான் அவன் யார்?..

(வெண்டிக்காய், நெருப்பு, செருப்பு, சீப்பு, நேரம், தீக்குச்சி, மஞ்சள், சூரியன், மருதாணி, கதவு)

## ஒருவரித் தத்துவங்கள்...

01-நோயைவிட அச்சமே அதிகம் கொல்லும்..
02-நல்லவர்களோடு நட்பாயிரு நீயும் நல்லவனாவாய்.
03-பொறுமை கசப்பானது முடிவில் சுகமானது.
04-வலிகளைப் பொருட்படுத்தினால் வாழ்வில் முன்னேறமுடியாது.
05-மனிதர்களோடு மனிதன் இணையப் பணம் ஒரு பாலமாகும்.
06-சில சமயங்களில் இழப்புகள்தான் பெரிய ஆதாயமாக இருக்கும்.
07-முழுமூச்சுடன் இறங்கினால் முடியாதது ஒன்றுமில்லை.
08-உண்மையை நீ அழித்தால் அது உன்னையே அழித்துவிடும்.
09-பொறுமையுள்ள மனிதன் நிச்சயம் வெற்றிபெறுவான்.
10-சேமிக்கக் கற்றுக்கொள் சிக்கனம் தானாகவே வரும்.

## இருக்கவேண்டிய இடத்தில்!...

ஆமையை வீதியில்விட்டு அதன் வேகத்தை குறைகூறுவது நமது பழக்கம். அதை நீரில் விட்டால் நம்மால் அதைப் பிடிக்க முடியுமா?.. ஆகவே இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் எவனும் வல்லவனே!..

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 26

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 3 | | 7 | | | | |
| | | | | | | 3 | | 8 |
| | 1 | 4 | | 3 | | 9 | | |
| 4 | | | 6 | | 3 | | 2 | |
| 7 | | | | | 4 | | | |
| | | | | | 2 | | 5 | |
| | | | | | | 8 | | 5 |
| | 3 | | 9 | 5 | | | | 4 |
| | 7 | 9 | 4 | | | | | 1 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 119
## (ஆடி-ஆவணி - 2021)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-03 அநேகமான விளையாட்டுகளில் பயன்படுத்தும் வியைாட்டுப்பொருள்.

10-12 பூ ஒன்று (குளம்பியுள்ளது)

வ-இ

08-06 கூரான ஆயுதம்.

16-13 வட்டத்தின் பாதி.

கீ-மே

08-04 வேகம் ஒத்தசொல்.

11-03 விலை மதிப்புள்ள அழகுசாதனப்பொருள்.

மே-கீ

01-13 மாணவர்கள் கல்வியில் உயர்ச்சிபெற இது பெறவேண்டும்

08-16 தமிழர்கள் இதையும் உயிரென மதிப்பாகள்.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

## அறிந்து கொள்வோம்!...

01-உலகில் மிகவும் பழமையான எழுத்து எது?..
02-கடற்கரை கரபந்தாட்டத்தில் எத்தனைபேர் விளையாடுவார்கள்?..
03-இரண்டு தேசிய கீதங்கள் கொண்ட நாடு எது?..
04-திருமணத்தின்போது தேசியகீதம் பாடும் நாடு எது?..
05-உலகிலேயே மிகவும் வெப்பமான இடம் எது?..

(சுமேரியா எழுத்து, ஒரு பக்கத்தில் 2 பேர், அவுஸ்திரேலியா, நைஜீரியா, லிபியாவிலுள்ள அசீசியா)

## சில பிராணிகளுக்கான ஒலிமரபுச் சொற்கள்...

| | |
|---|---|
| 01- கோழி - கொக்கரிக்கும் | 02- வானம்பாடி - பாடும் |
| 03- புறா - குறுகுறுக்கும் | 04- வாத்து - கத்தும் |
| 05- குரங்கு - அலப்பும் | 06- தேவாங்கு - அழும் |
| 07- ஆடு - கத்தும் | 08- ஆந்தை - அலறும் |
| 09- மயில் - அகவும் | 10- சிங்கம் - கர்ச்சிக்கும் |

## காற்றின் பெயர்கள்...

01-தெற்கிலிருந்து வீசுவது - தென்றல்க்காற்று
02-வடக்கிலிருந்து வீசுவது - வாடைக்காற்று
03-கிழக்கிலிருந்து வீசுவது - கொண்டல்க்காற்று
04-மேற்கிலிருந்து வீசுவது - மேலைக்காற்று

| | | | |
|---|---|---|---|
| 6 கிலோமீடர் | வேகத்தில் | வீசுவது | - மென்காற்று |
| 06 -11 ” | ” | ” | - இளந்தென்றல்க்காற்று |
| 12 -19 ” | ” | ” | - தென்றல்க்காற்று |
| 20 -29 ” | ” | ” | - புழுதிக்காற்று |
| 30 -39 ” | ” | ” | - ஆடிக்காற்று |
| 100 ” | ” | ” | - கடுங்காற்று |
| 101-120 ” | ” | ” | - புயற்காற்று |
| 120 ” மேல் | ” | ” | - சூறாவளிக்காற்று |

# தமிழ் அறிவோம்!..

## ஓரே பொருள் தரும் சொற்கள்...

01-சூரியன், வெயில், நிழல், அனல்
02-கோவில், சிலை, கோபுரம், தெய்வம்
03-உலகம், பூமி, புவி, நிலம்
04-தீ, வெப்பம், நெருப்பு, சாம்பல்
05-நீர், வெள்ளம், மழை, சாரல்

## எதிர்க்கருத்துச் சொற்கள் சில..

01-அகம் - புறம்
02-அகலம் - நீளம்
03-அடி - நுனி, முடி
04-ஈதல் - ஏற்றல்
05-ஈரம் - வறட்சி
06-உண்டு - இல்லை
07-உண்மை - பொய்மை
08-குறை - நிறை
09-நீதி -அநீதி
10-நியாயம் - அநியாயம்

## ஒத்த சொற்கள் சில..

01-கையூட்டு - லஞ்சம்
02-உணவு - ஆகாரம்
03-பரம்பரை - வழிவழியாக
04-சங்கடம் - வருத்தம்
05-ஆனந்தம் - மகிழ்ச்சி
06-ஆலமரம் - விழுதுகளைத் தாங்கிநிற்கும்மரம்
07-புத்தகம் - நூல்
08-வனம் - காடு
09-பாடசாலை - கல்விக்கூடம்
10-அப்பா - தந்தை

## கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள் சில..

01-அறிஞர் - அவை
02-நடிகர் - குழு
03-கள்வர் - கூட்டம்
04-தோழியர் - ஆயம்
05-பறவை - கூட்டம்
06-மான் - கூட்டம்
07-முகில் - கூட்டம்
08-மரம் - பொதும்பல்
09-கல் - குவியல்
10-வைக்கோல் - கற்றை
11-மயில் - குழாம்

## இலைகளின் மரபுப்பெயர்கள்..

01-மா - இலை
02-பலா - இலை
03-வேம்பு - இலை
04-வாழை - இலை
05-தென்னை- ஓலை
06-பனை - ஓலை
07-கமுகு - ஓலை
08-ஈச்சை - ஓலை
09-புல் - தாள்
10-நெல் - தாள்

## 0107.2021 is National Mathematics Day ( I.e. Birth Day of Srinivasa Ramanujam) See This Absolutely Amazing Mathematics Given By Great Mathematician *

தேசிய கணித தினம் (National Mathematics Day) இந்தியாவில், டிசம்பர் 22 ஆம் நாள் தேசிய கணித தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய கணித தினம் 26 பிப்ரவரி 2012 அன்று சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழாக் கலையரங்கத்தில் நடைபெற்ற சீனிவாச ராமானுசனின் 125 வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் தொடக்க விழாவில் இந்தியப் பிரதம மந்திரி டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்தியக் கணித மேதை சிறீனிவாச ராமானுஜன் 1887 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி பிறந்தார். 1920 ஏப்ரல் 26 இல் இறந்தார். இந்தியதேசிய கணிதவியலாளரான கணித மேதை சீனிவாச இராமானுசன் அவர்கள் கணிதத் துறைக்குப் பங்காற்றியமைக்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 22 ஆம் நாள் தேசிய கணித தினமாகக் கொண்டாடப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு தேசிய கணித ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் போட்ட சில கணக்குகளின் விசித்திரங்களை இங்கே காணலாம்

1 x 8 + 1 = 9
12 x 8 + 2 = 98
123 x 8 + 3 = 987
1234 x 8 + 4 = 9876
12345 x 8 + 5 = 98765
123456 x 8 + 6 = 987654
1234567 x 8 + 7 = 9876543
12345678 x 8 + 8 = 98765432
123456789 x 8 + 9 = 987654321

1 x 9 + 2 = 11
12 x 9 + 3 = 111
123 x 9 + 4 = 1111
1234 x 9 + 5 = 11111
12345 x 9 + 6 = 111111
123456 x 9 + 7 = 1111111
1234567 x 9 + 8 = 11111111
12345678 x 9 + 9 = 111111111
123456789 x 9 +10= 1111111111

9 x 9 + 7 = 88
98 x 9 + 6 = 888
987 x 9 + 5 = 8888
9876 x 9 + 4 = 88888
98765 x 9 + 3 = 888888
987654 x 9 + 2 = 8888888
9876543 x 9 + 1 = 88888888
98765432 x 9 + 0 = 888888888

And Look At This Symmetry :
1 x 1 = 1
11 x 11 = 121
111 x 111 = 12321
1111 x 1111 = 1234321
11111 x 11111 = 123454321
111111 x 111111 = 12345654321
1111111 x 1111111 = 1234567654321
11111111 x 11111111 = 123456787654321
111111111 x 111111111 = 12345678987654321

# நல்நெறி பற்றி......

-வி நந்தகுமார்-

## அன்பு.....

அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகிறது.
அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்.
அன்பு இணைத்துக் கொண்டு அணைத்துச் செல்லும்.
அன்பு அதிகமாகும்போது மனிதனாகின்றோம்.
அன்பு சகலதையும் தாங்கும் சகலதையும் சகிக்கும்.
அன்பு இருக்குமிடத்தில் அமைதியைக் காணலாம்.
அன்பு உள்ள இதயம் அனைத்தையும் அடையும்.
அன்பு நீடிய சாந்தமும் சந்தோஷமும் நிறைந்தது.
அன்பு வார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.
அன்பு ஆணவம் அற்றது, அதிகாரம் செய்யாது.
அன்பு உள்ள இடத்தில் இன்பம் சுற்றிச்சுற்றி நிற்கும்.
அன்பு உண்டானால் ஆனந்தமான வாழ்வு பிறக்கிறது.
அன்பு பழிவாங்காது, பாவம்செய்யாது, பண்புள்ளது.
அன்பு ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைக்கிறது.
அன்பு உதவி செய்யும் உபத்திரவம் கொடுக்காது.
அன்பு நீதியானது, நேர்மையானது, நம்பிக்கையுள்ளது.
அன்பு கொடுப்பவரையும் வாங்குபவரையும் பிணைக்கிறது.
அன்பு பாசமுள்ளது, நேசமுள்ளது, மோசம் செய்யாது.
அன்பு இழக்கப்படும்போது அத்தனையும் இழக்கப்படுகிறது.
அன்பு செழிப்பானது, சினம்கொள்ளாது, சந்தேகமற்றது.
அன்பு நுழையும்போது இன்பம் இறுதிவரை இருக்கும்.
அன்பு கலகம் செய்யாது காலம் பூராவும் காப்பாற்றும்.
அன்பு மூர்க்கம் கொள்ளாது, மென்மையானது, மேன்மையுள்ளது.
அன்பு செலுத்துவதால் அன்யோன்யமான குடும்ப வாழ்வு குதூகலம் பெறுகிறது.
அன்பு உள்ள இதயம் இளமை இழக்காது, இன்பம் பெருக்கும்.
அன்பு தன்னைப் புகழாது, தற்பெருமை கொள்ளாது, தயவுள்ளது.
அனபு இதனால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.
அன்பு இரக்கமுள்ளது, இறுமாப்பாய் இராது, இனிது பேசும்.
அன்பு இதை ஆதாரமாகக் கொண்டே அழகிய வாழ்க்கை அமைகிறது.
அன்பு தனில் பிறந்தாய், வளர்ந்தாய், அதன்வழியே வாழ்ந்துகொள்.
அன்பு இதை அறிந்தவர்களுக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.

# குறளும் பொருளும்...

## சுற்றந்தழால்:-

521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

522. விரும்பறாச் சுற்ற மியையி னரும்பறா
வாக்கம் பலவுந் தரும்.

523. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

524. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

525. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

527. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

529. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்த
னிழைத்திருந் தெண்ணிக் கொளல்.

# குறளும் பொருளும்...

## உறவினரைத் தழுவிக்கொள்ளல்...

521. ஒருவன் வறுமை அடைந்த பொழுது அவனது பழைய பெருமையைப் பாராட்டுதல் சுற்றத்தாரிடமே உள்ள குணமாகும்.

522. அன்பு குறையாத சுற்றம் ஒருவனுக்குக் கிடைத்தால் அவனுக்கு மென்மேலும் வளம் குன்றாத செல்வம் பலவற்றையும் தரும்.

523. சுற்றத்தாருடன் மனம் கலந்து பழகாதவன் வாழ்க்கை, கரையற்ற குளம் நீர் நிரம்பியது போலாகும்.

524. ஒருவம் செல்வம் பெற்றதன் பயன் தன் சுற்றத்தாரைச் சூழ்ந்து அவர்களைத் தழுவி நடத்தலே ஆகும்.

525. ஒருவன் சுற்றத்தாருக்குப் பொருள் கொடுத்து இனியவனாக நடப்பானானால் சுற்றத்தார் பலருடன் சூழ்ந்து வாழ்வான்.

526. ஒருவன் கொடையாளியாகவும் கோபமற்றவனாகவும் இருந்தால் அவனைப் போன்ற சுற்றத்தாரை உடையவர் யாரும் இல்லை.

527. காக்கை தன் ஆகாரத்தை மறைக்காமல் தன் இனத்துடன் கூடி உண்ணும் செல்வமும் அத்தன்மை உடையவருக்கே உண்டு.

528. அரசன் எல்லோரையும் ஒரே வகையாகப் பார்க்காமல் அவரவர் தகுதிக்குத் தக்கபடி பார்த்தால் அவனை விரும்பிச் சுற்றமாக வாழ்பவர் பலர் ஆவார்.

529. முன் சுற்றத்தாராக இருந்து பின் ஒரு காரணத்தால் பிரிந்தவரின் உறவு அவர் பிரிந்த காரணம் நீங்கிய பின் தானே வந்து சேரும்.

530. தன்னிடமிருந்து பிரிந்து சென்றவன் ஒரு காரணத்தால் திரும்பிவர அவனுக்கு அரசன் வேண்டிய உதவிகளைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ள வேண்டும்.

## காசிஆனந்தனின்
## சிந்தனைகள்...




### இலக்கு...

மைதானத்தின் இரு பக்கங்களிலும் புல்லும் கொள்ளும் பச்சைப் பசேலென்று செழித்திருந்தன..குதிரை ஓட்டப் போட்டி தொடங்கியது. இந்தக் குதிரைகள் கொள்ளையோ, புல்லையோ கொஞ்சம்கூடத் திரும்பிப் பார்க்காமல் ஓடுகின்றனவே இது உனக்கு வியப்பாக இல்லையா?.. என்று ஓர் ஆடு மற்ற ஆட்டைப் பார்த்துக் கேட்டது. "போட்டிக் குதிரை அப்படித்தான்" என்றது இரண்டாம் ஆடு. பிறகு அது சொன்னது..

**"வெல்லப் பாயும் குதிரை புல்லைப் பார்க்குமா?**
**கொள்ளைப் பார்க்குமா?"**

### அளவை...

அன்றாடம் ஓடிக்கொண்டிருந்த பேருந்தின் சக்கரத்தைப் பார்த்துத் தெரு கேட்டது..."மண் முழுவதும் சுற்றி வருகிறாயே நீ பெற்ற அனுபம்தான் என்ன?".. சக்கரம் அமைதியானது. பின்பு அது தெருவைப் பார்த்துச் சொன்னது.."நான் என்னையே பலமுறை சுற்றி அளந்து கொள்கிறேன். அதனால்தான் உலகத்தையே அளந்து வருகிறேன்". திரும்பவும் தெருவைப் பார்த்து புரிகிறதா?.. என்று கேட்டது சக்கரம். அது சொன்னது...

**"தன்னை அளந்தவன்...மண்ணை அளந்தவன்"**

## அன்பை வளர்ப்போம்!..

01-விட்டில் பூச்சிக்குத் தெரியாது நெருப்பில் இறப்பேனென்று.
02-மீனுக்குத் தெரியாது தூண்டிலில் உயிர் பிரியுமென்று.
03-பூக்களுக்குத் தெரியாது உதிர்ந்து விழுவோமென்று.
04-நிலவுக்குத் தெரியாது தேய்ந்து வளர்கிறோமென்று.
05-மெழுகுவர்த்திக்குத் தெரியாது உருகிவிடுவோமென்று.
06-உளிக்குத் தெரியாது கல்லைக் காயப்படுத்துகிறேனென்று.
07-குயிலுக்குத் தெரியாது தன் பாட்டு இனிமையென்று.
08-பேனாவிக்குத் தெரியாது எழுத்துக்கள் உயிர் என்று.
09-கணனிக்குத் தெரியாது உலகம் என்னிடம் என்று.
10-மனிதா உன் நாக்குக்குத் தெரியாது அடுத்தவன் இதயம் ரணமாகுமென்று!...

ஆகவே யாரிடமும் இனிமையாகப் பேசி அன்பை வளர்த்தால் பகைவர்கூட நண்பராவர் என்று!..

## ஆரோக்கியம் நம் கையில்!...

-ஒரு முறையாவது ஒரு நாளைக்கு உடற்பயிற்சி செய்.
-இரு மணிக்குமேல் தொலைபேசி, தொலைக்காட்சி பாவிக்காதே.
-மூன்று முறை அளவோடு உண்.
-நான்கு முறை சிறிதளவுநேரம் ஓய்வு எடு.
-ஐந்து முறை காய்கறி, பழங்களைச் சாப்பிடு.
-ஆறு முறை தியானம் செய்யுங்கள்.
-ஏழு முறை ஒரு கிளாஸ் தண்ணீர் குடியுங்கள்.
-எட்டு மணித்தியாலங்களுக்கு மேல் தூங்காதீகள்.
-ஒன்பது முறையாவது மூச்சுப் பயிற்சி செய்யுங்கள்.
-பத்து ஆயிரம் அடியாவது ஒரு நாளைக்கு நடவுங்கள்.

## பொன்மொழி!...

முடியாதவர் அடுத்தவரைப்பற்றி விமர்சிப்பார். முடியும் என நினைப்பவர்கள் அடுத்ததை நோக்கிப் பயணிப்பர்!...

# குறுக்கெழுத்துப்போட்டி-182
(ஆடி - ஆவணி -2021)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ

01-07 சிலர் கொலை செய்வதற்கு இதையும் பயன்படுத்துவார்கள்.
29-33 நேரத்தைக் காட்டுவது.
37-40 பரதம் ஆட இது இருந்தால்தான் சிறப்பு.
43-48 இலங்கையில் ஒரு நகரம்.

வ-இ

11-09 சிலர் இதை அடைவதற்கு அலைந்து திரிவார்கள்.
14-11 விருப்பு இதன் எதிர்ச்சொல்.
19-16 இனிப்பான தின்பண்டம்.
27-24 கொடைக்குப் பெயர்போனவன்.
49-48 மீன்பிடி உபகரணம் ஒன்று.

கீ.மே

19-05 வீட்டில் ஒருவர்.
27-13 ஆடு மாடு கட்டிவளர்க்கப் பயன்படுவது.
37-23 வீட்டுப் பாவனைப்பொருள் (குளம்பியுள்ளது)
43-22 நாட்களில் ஒன்று.

மே-கீ

01-22 அண்மையில் இவர்களுக்கு மன்னிப்பளித்து இலங்கை ஜனாதிபதி விடுதலைசெய்தார்.
14-42 பலசரக்குப் பொருள் ஒன்று.
27-41 வள்ளுவர் இது பெறாதவர்களை முகத்தில் இரண்டு புண் உண்டு என்று எடுத்துரைத்துள்ளார்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை

# சமஸ்கிருதசொற்களால் மறந்த தமிழ்ச்சொற்கள்.

பூவை புஷ்பமாக்கி
அழகை சுந்தராக்கி
முடியை கேசமாக்கி
தீயை அக்னியாக்கி
காற்றை வாயுவாக்கி
பிணத்தை சவமாக்கி
கெட்டதை பாவமாக்கி
முகத்தை வதனமாக்கி
அறிவைப் புத்தியாக்கி
அவையை சபையாக்கி
ஆசானைக் குருவாக்கி
இசையை சங்கீதமாக்கி
குண்டத்தை யாகமாக்கி
பெரியதை மஹாவாக்கி
மக்களை ஜனங்களாக்கி
நிலத்தை பூலோகமாக்கி
அமிழ்தை அமிர்தமாக்கி
ஆடையை வஸ்திரமாக்கி
உணர்வற்றதை சடமாக்கி
ஓவியத்தை சித்திரமாக்கி
கலையை சாஸ்திரமாக்கி
விண்ணை ஆகாயமாக்கி
குளியலை ஸ்நானமாக்கி
தொழுதலை பூஜையாக்கி
தண்ணீரைத் தீர்த்தமாக்கி
மாணவனை சிஷ்யனாக்கி
வேண்டுதலை ஜெபமாக்கி
முறைகளை ஆச்சாரமாக்கி
பத்தாம் நாளை தசமியாக்கி
திருவிழாவை உற்சவமாக்கி
பருவமடைதலை ருதுவாக்கி
உறக்கத்தை நித்திரையாக்கி
திருமணத்தை விவாகமாக்கி
பயணத்தை யாத்திரையாக்கி
செருப்பை பாதரட்ஷையாக்கி
படையலை நைவய்தியமாக்கி
பள்ளிகளை வித்யாலயமாக்கி
பிள்ளைப்பேறை பிரசவமாக்கி
வணக்கத்தை நமஸ்காரமாக்கி
அன்பளிப்பை தட்சணையாக்கி
ஒன்பதாம் நாளை நவமியாக்கி
அறிவியலை விஞ்ஞானமாக்கி
படிப்பித்தலை அப்பியாசமாக்கி
கருவறையை கர்ப்பகிரகமாக்கி
வேளாண்மையை விவசாயமாக்கி
குடமுழுக்கை கும்பாபிஷேகமாக்கி

எப்படி எப்படி அழகு தமிழ்ச் சொற்கள்
அழிந்துள்ளன?..

அனைத்து இடங்களிலும்
தமிழ்ச் சொற்களை பயன்படுத்த
உறுதியேற்போம்!..

தாய்மொழி, தமிழ்மொழியைப்
பேணுவோம்!...

# குன்றில் விளக்காய்....

-வசந்தா ஜெகதீசன்-

முதன்மை சுமையின் முதலாளி
முழுமை தாங்கும் தொழிலாளி
அறிவின் தீபம் ஆலயமாய்
அன்பின் காக்கும் தந்தையரே..

உருகும் திரியாய் விளக்கேற்றி
உறவைக் காக்கும் வழிகாட்டி
செம்மை வாழ்வை சீராக்கி
சேய்கள் நிமிர்வின் சுமைதாங்கி..

அல்லும் பகலும் அறிவூட்டி
ஒளிரும் வாழ்வின் காற்றாடி
எங்கும் நிறையுது பேரன்பு
எதிலும் தந்தை முதலெழுத்து..

கண்ணாய் காப்பார் கருத்தோடு
கண்ணியம் காப்பார் வாழ்வோடு
உண்மை அன்பின் உறவாளி
மேன்மை போற்றும் பண்பாளி..

அப்பா என்னும் அன்போடு
என்றும் மெய்ப்பட வாழ்வோம்
பண்போடு
குன்றில் விளக்கே நீங்களப்பா
கூடியே வாழ்ந்த வள்ளலப்பா..

# மறக்கத்தகுமா...

வெட்டவெளி மயானம்
வெறுமையான சுடுகாடு
அவலக்குரல்கள் ஆவிப்பேரொலிகள்
நிஜமான இனஅழிப்பு
நிர்க்கதியான தமிழினம்
பூண்டோடு அழித்திட்ட மே 18
இதயரணம் காயாது
மரணித்த வேதனையில்
மாண்டு துடிக்கிறது
மனிதநேயக்கதவுகள்
இருண்ட பேரவலம்
மயான பூமியாய்
முள்ளிவாய்க்கால்
மறக்கத்தகுமா மே18
ஈழத்தின் வேரிலே
இனஅழிப்புக்கோரம்
குருதி ரணமாய்
குற்றுயிர் வதையாய்
கட்டுண்டு மாண்ட
காயவலிகள்
மறக்கத்தகுமா மே18
மனிதமே எங்கே
மாண்டுபோனாய்....

## சீழ் பிடித்தசிந்தனை...

டண்டனக்கா டண்டனக்கா
ஒரு தண்டச் சோறு இங்கு
புட்டுக்கிட்டு போட்டாரு இன்று
இருந்தும் கெடுத்தான் இறந்தும்
கெடுத்தான்
என்று ஆனதுதான் வாழ்க்கை
இந்த மனித வாழ்க்கை
உட்கார்ந்த இடத்தில் இருந்தாரு
ஓடி ஓடி ஒழிந்தாரு
ஒட்டாண்டியா வாழ்ந்தாரு
காலன் வந்த போது வகையாகதான்
மாட்டிகிட்டாரு

சுடுகாட்டில் பிணம் எரிந்த தீயும்
இன்னும் ஆறலை
கோட்டான் ஒன்று அலறுது
அவல சத்தம் கேட்குது
நாயும் நரியும் ஊளையிட்டு
ஓடி ஓடித் திரியுது
கழுகும் காகமும் அடுத்தவன் சொத்தை
பிச்சுத் தின்ன சுற்றிச் சுற்றிப் பறக்குது

என்டை சொத்து என்டை சொத்து என்று
அடிபடுவோர்தான் எத்தனை
இன்றிருப்போர் நாளை இல்லை
இதுதானே உண்மை
சீழ் வடியும் உடம்புக்குள்ளே
சில மனிதருக்கு எத்தனை
சீழ் பிடித்தசிந்தனை

என்டை என்டை என்று சொன்னவர்கள்
ஒரு பிடி மண்ணை கூட
அள்ளி செல்ல முடிந்ததா?
கண்ணை மூடி விட்டாலே
காட்சி கூடத் தெரியுதா?
இந்த உலகக் காட்சி கூடத்தெரியுதா?

**-கவி மீனா-**

## முன்னேற்றம்...

மொழி வெறியுடன் வாழ்வதல்ல
மொழிப்பற்றுடன் வாழ்வது!
முன்னேற்றம்
மதத்துடன் வாழ்வதல்ல
மனிதநேயத்துடன் வாழ்வது!
முன்னேற்றம்
அழிக்கும் விஞ்ஞானம் அல்ல
ஆக்கும்
விஞ்ஞானமே!
முன்னேற்றம்
பணத்துடன் வாழ்வதல்ல
நேர்மையுடன் வாழ்வதே!
முன்னேற்றம்
பண்பாட்டை பரப்புவதல்ல(ஆரவாரம்)
பண்பாட்டை
கடைப்பிடிப்பதே!(அமைதி)
முன்னேற்றம்
சுயநலத்துடன் வாழ்வதல்ல
பொது நலத்துடன் வாழ்வதே!
முன்னேற்றம்
தலைவனாக உயர்வது அல்ல
மனிதனாக உயர்வதே!
முன்னேற்றம்
கவிதையில் அல்ல
கருத்தோடு கலந்திருப்பது!
முன்னேற்றம்
ஆதரவு வாக்குகளில் அல்ல
ஏற்கின்ற மனங்களிலே!

அனைவர்க்கும் இனிய
வந்தனங்கள்

**-யாரோ ஒருவன்-**

# அணைக்க முடியா நெருப்பு....

தமிழரின் வியர்வையினால்
வானுயர வளர்ந்திருந்த
பொருளாதார விருட்சத்தின்
ஆணிவேரை யறுத்தெறிய
அதிகார வர்க்க மரங்கேற்றியது
நாடகமொன்றை !

நாடகத்தின் திரை விலக
தீச்சுவாலை திசையெங்கும் பரவ
நாதியற்ற தமிழரின் கூக்குரல்
கேட்பாரின்றி காற்றில் கலந்து
காணாமல் போனது . . . .

வகுப்புவாதம் வைத்த தீ
வானளாவியே தமிழர்தம்
வளங்களையும் மேய்ந்தது !
அன்றே அத்தீவின்
நலன்களையும் மேய்ந்தது . . . .

செந்தீயின் செழுஞ்சுடர்
செந்தமிழர் மனைகளையும்
உயிர்களையும் உடைமைகளையும்
உரசித் தின்று தீர்த்தது !

கரும்புகை மேலெழுந்து
ககனந் தொட கைகளை நீட்ட
கதிரவனோ துணுக்குற்று
கடிதென மேகத்திடை மறைந்தான் .

மனைகளில் மங்கலம் நிரப்பிய
துளசிச் செடிகளின்
தூய்மையைப் பறித்து
துயரங்களை யளித்த
துச்சாதனர்களின் கொடுமைகள் !

ஒரு தேசத்தின் புதல்வர்களுள்
இத்தனை முரண்பாடா ?
அத்தனைக்கும் அடிவாங்குவது
இளைய சகோதரனா ?

சோதரர்களைப் பிரித்தாளும்
சூழ்ச்சியாளரைக் கண்டறிந்தால்
வீழ்ச்சியுற்ற பொருளாதாரம்
மேன்மையுறும் !

இனங்களிடையே ஒற்றுமை நிலவ
இனவாதம் துறந்திடுவீர் !
மனங்களுள் மாற்றம் நிகழ
ரணங்களுக்குத் தைலமிடுங்கள் . . . .

ஆடித்திங்களின் கருப்பு
அணைக்க முடியா நெருப்பு
மூட்டிய நெருப்புத் தணிந்திட
காட்டுங்கள் கருணை !

**கவிவாணன் இரா. சம்பந்தன்**
**ராட்டிங்கன்**

## நானில்லாமல் நான்....

-சத்யா பிரான்சிஸ்-

கை கால்களைக் கட்டி
நீச்சல் நீ பழகு
என்கிறார்கள்
புல்லாங்குழலை ஒளித்து வைத்து
இன்னிசை நீ எழுப்பு
என உத்தரவிடுகிறார்கள்.!.

நெல்லிக்காயாய் பல் உதிர்ந்த எனக்கு
ஆட்டு எலும்பைக்
கடித்துத் துப்ப
விருந்து வைக்கிறார்கள்..!
கால் முடமாகி
சக்கர வண்டியில் பயணிக்கும் என்னை
விழுந்து ஓடு
என விரட்டுகிறார்கள்..!

வெற்றிசாவியைத்
தொலைத்து தவித்திருந்த போது
என் கைகளிலிருந்த
அமுதக் கனியைப்
பறித்து ஓடினார்கள்..!

சமதரைப் பாதையில்
நடக்கத் தடுமாறியபோது
கல்லும் முள்ளும் நிறைந்த
பாதையில் நடக்க
பலி ஆடாக
இழுத்துச் செல்கிறார்கள்!

எனக்குத் தெரிந்த மொழியில்
கவிதை எழுதினேன்!
காவியம் எழுது என்றவர்கள்
விரல்களை
முறித்து முறைக்கிறார்கள்..!

நான்
நானாக இருக்க
விரும்புகிறேன்
என்னை அவர்களாக
இருக்கக் கற்பிக்கிறார்கள் ..!

எனது இருப்பை
நான் முடிவு செய்யும் முன்
உடன் இருப்பவர்கள்
என் இறப்புக்கு
விழா எடுக்கிறார்கள்!

## மீண்டெழுவோம்!..

மண்ணில் புதைந்த எம்
உறவுகளை நினைத்து
நாம் துக்கத்தால்
மனம் நிலைகுலைந்து போகாமல்
மன உறுதியுடன்
அவர்கள் இலச்சியங்களை
முயற்சிப்போம்!..

ஆழிந்து போன நம் உறவுகளின்
தியாகங்களை எம் நினைவில்
என்றுமே அழியாதிருக்கும்
அவர்கள் தியாகத்தினை
மனதில் கொண்டு
நாம் மீள் எழுவோம்
நம் இனத்தின் எழுச்சிக்காய்
ஒன்றிணைவோம்!..

வினுஸா கருணாகரன்
எசன் தமிழ் பாடசாலை

# பார தீ.....

-கலைவாணி. ஏகானந்தராஜா-

உள்ளத்தில் உணர்விடும் எண்ணத்தில் எழுச்சியிடும்
எண்ணற்ற கவிகளை வண்ணமாய்த்தர வந்திருக்கும்
கவிக்கரங்களுக்கும் அவை வணக்கம்.
பாடும் தமிழில் பார தீ எனும் தலைப்பில்
என் கவிதையினை தருகின்றேன்
தீயாக எழுந்துநின்று - சுடர்த்தீபமாக ஒளிபரப்புகின்ற
அக்கினிக் குஞ்சின் அழகிய கவிவரிகளில்
அகிலமே விழித்து அன்னைத்தமிழை நுகர்கிறது
சூரியனின் சுடராய் அறியாமைதனைச் சுட்டெரித்திட
கூரிய வார்த்தைகளால் குரலெழுப்பிய பாரதத்தின் தீ.!
பெண்ணடிமையை கொழுத்தியவன் பேதமையை விலக்கியவன்
பாட்டுக்கொரு புலவன் பார தீ -அவன்
எட்டையபுரத்தில் தோன்றி எட்டும் அறிவினில்
ஆணுக்குப் பெண் சமமென்றே அறிவித்தானே -அகிலத்துக்கு..!
வீட்டுக்குள் பெண்ணை பூட்டியவர் இன்று - வேகும் அறியாமையால்
வெட்கித் தலை கவிழ்ந்தார்
பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இத்திரு நாட்டில்
மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே என
தீ யாக கனல்கக்கும் தூய கவிவரிகளை
தீந்தமிழில் எழுதிவைத்தான் பார தீ
சுதந்திர வேட்கைகொண்டு சுதேசமித்திரனிலும்
இந்தியா பத்திரிகையிலும் இலக்கியப் படைப்புகள் முலம்
எழும்தீயாய் இமையம் தொட்டான்
பாரத தேசத்தின் மத பண் பாட்டினை எரித்திட எண்ணி
தேச பக்திப் பாடல்களில் தணலாய் கனன்றான்
சமத்துவக் கொள்கையும் சமரசத்தில் பற்றும்
சமுதாய முன்னேற்றத்தில் சிந்தனை உத்வேகமும்
எத்துறை ஆனாலும் அத்துறையில் எழுச்சித் தீயை
விதைத்திட்டவன் வீரமகா சக்தி படைத்த பாரதீ
பெண்ணடிமைக்கும் மண்ணடிமைக்கும் எதிராய்
பெருந்தீயாய் எழுந்துநின்ற பாரதீ
யாதிப் பிரிவினையால் வெந்தணலாய் கொதித்தெழுந்து- பாடல்களால்
யாகத் தீயினை வளர்த்துப் பொசுக்கினான் பாரதீ!......

# அவமானம் அழுக்காறு!..

வள்ளுவன் தன்னை உலகிற்குத் தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - தமிழன்
கல்வி ஒன்றே வாழ்வெனக்கொண்டு கேள்வி
வேள்வி செய்வது எங்கள் அகக்கூடு...

இங்கு இன்று கல்விச் சோலைகள் சில
பாலியல் வன்கொடுமை அரங்கேறும் அழுக்காறு
பார்க்கும் இடமெல்லாம் நெஞ்சைப்
பதைக்க வைக்கிறது எப்போதும் இல்லாதவாறு...

பள்ளிக்கூடங்கள் மட்டுமா?..காமுகர்களின் பித்தலாட்டம்
தெய்வ சந்நிதிகளிலும் பாலியல் அபிஷேகப் பலிபீடம்
ராஜலீலைகளின் ரசவாதம் ராஜகோபாலுக்கும் களிகூட்டும்
பிரேமானந்தா தொட்டு நித்தியானந்தாவரை நீச வழிகாட்டும்...

ஐந்து பெண்களுடன் கெத்தாக வாழ்ந்தவர்
எம் ஆர் ராதா என்பான் எழுதுகோல் காவாலி
மூன்று மனைவிகளோடு மாண்புகெடாமல் வாழ்ந்தவர்
கண்ணதாசன் என்பான் காசுக்கான துரோகி
கவிப்பேரரசுக்கும் ஆவிபோடும் பாலியல்ப் பரிசு
இதில் ஏழுமுறை தேசியவிருது மனிதகுலக் கிலிசுகேடு...

ஏழைகளைக் கட்டி ஆண்ட பரம்பரை அல்லவா
ஊரைக் காவல் செய்கிறது
இவர்கள் கட்டிலுக்குக் கூப்பிடும் கனவுகளுக்கா பஞ்சம்
யாருக்கடா?..வேண்டும் இந்த நாயும் பிழைக்காத வஞ்சம்
பெண்கள் எழுந்துவிட்டனர் இனித்தானாய் அடங்கும் கொட்டம்
கெட்டவைகளைத் தட்டிக்கேட்காத பேர்வழிகள் எல்லாம்
கொடுமைகளை மேடைகட்டி ஆடவிடும் கோவலர்கள்
இவர்கள் எதற்கும் உதவமுடியாத உதவாக்கரைக் கேவலங்கள்!..

ப.பசுபதிராசா

# ஆடியே ஆனதுயர் போக்கிடு!...

ஆடிவரும் வேளை கோடை வந்திடும்
ஆடிக்காற்றினில் சோலைகள் அசைந்தாடும்
ஆடிப்பாடும் சிறார்க்கு ஆனந்தம் பொங்கிடும்
ஆடியில் ஆலயதிருவிழாக்கள் சிறப்புறும்!...

சிறப்புக்கள் நிறைந்த மாதமாய் ஆடியே
பிறப்புக்கள் துயர்நிறைந்து வாடுவதும் பாராய்
வசிப்பதற்கு வாழ்விடம்தேடி அலைவதாய்
வரையறைகாணா கொடுமைகள் மீதமாய்!...

எண்பத்துமூன்று ஆடியில்வந்த சோகங்கள்
எண்திக்கும் சிதறி ஓடவைத்த அவலங்கள்
எத்தனை ஆடிதான் வந்துமறைந்து போனாலும்
எம்மவரின் துயர் மறையவில்லை இன்னும்!..

ஆடி வந்தாலே ஆறாத் துயரின் நினைவாய்
ஆடிப்போன நம்மினம் மீளவில்லை இன்னுமாய்
கூடிக்கொண்டே செல்லும் கொடுமைகளாய்
தேடிய பிள்ளைகளைக் காணாது
தேம்பியழும் தாய்பாசங்கள்!...

ஆடிமாதமதில் அசைந்தாடும்
இசைக்காற்றாய் நீயும்
வாடிநிற்கும் மக்களுக்கு வசந்தத்தைவீசிவிடு
கூடியே ஒன்றாய் குதுகலித்திட இனிய
பாட்டிசைத்திடு ஆடியே ஆனதுயர் போக்கிட
ஆனந்தப் பூங்காற்றாய் மலரவிடு!..

-இராஜேஸ்வரி சிவராசா-

## முயற்சி!..

விழுவதும் எழுவதும்
பற்றிப்பிடிப்பதும் பறிப்பதும்
குழந்தைகளில் ஏற்படும்
விடாமுயற்சியின் அடையாளம்!..

## உலகவலம்!..

அமைதியான வீடுகள்
மனிதர்களற்ற தெருக்கள்
சத்தமில்லாத பூமி தேசம்
கொரோனாவின் உலக வலம்!..

## நடுத்தெரு!...

மரத்தை வளருங்கள்
கூடு கட்டும் பறவைகள்
மரத்தை வெட்டும் மனிதா
நாளை நடுத்தெருவில்அலைவாய்!..

## சிறை!..

தந்தை மதுப்போத்தலை
திறந்து மகிழ்கையில்
மகன் புத்தகத்தை மூடி
சிறைவாசம் செல்கிறான்!..

## இளமை!..

சிறுமி தலையில் கற்சுமை
சிறுவன் தலையில் மண் சுமை
சிறுவர் கொண்டாட்டம் பிரமாதம்
”இளமையில் கல்” எனும்
வேதவாக்கு!..

-சிவா-

# காலத்தின் காயங்கள்!..

-ஜெயா நடேசன்-

கறைபடிந்த காயங்களாக மே-பதினெட்டு
முள்ளிவாய்க்கால் முடிந்த கால அவலம்
வான்வெளி நச்சுக் குண்டுகளாக
வெளிக்காயங்கள் ஒருபுறமிருக்க
மனக்காயங்களால் வலிதாங்கமுடியல்லையே
பொஸ்பரஸ் நச்சுக்களால் மூச்சு இழந்தனர்
எறிகணை வீச்சினால் எரிந்து சாம்பலாயினர்
கொத்துக் குண்டுகளினால் உடல் சிதறின
தாயதந்தையரை இழந்து பல மரணங்கள்
அவையங்கள் இழந்து காயப்பட்ட வடுக்கள்
மார்பில் பால்குடித்த பாலகன் தாயின்பிரிவு
தண்ணீர்கேட்டு தாகத்தில் உயிர்விட்டோர்
யுவதிகள் பாலியல் வன்முறை அவலங்கள்
இன்பம்கண்டு அனுபவித்து அழித்தவர்கள்
லட்சக்கணக்கான உயிர்களை எடுத்தவர்கள்
சரணடைய வெள்ளைக்கொடிடன் மககள்
வரிசையில் வைத்து சுடப்பட்டுச்சரிந்தவர்கள்
பார்த்த உலகமெல்லாம் பார்வைகளாயினர்
பக்கத்து நாடும் பார்த்துப் பகைத்தனர்
முள்ளிவாய்க்காய் முடிவில்லாக் காயங்கள்
தமிழ் மக்களின் காயாத காலங்கள்!.

## விடியலை நோக்கிப் புறப்படு!..

அந்த யுத்தம் எத்தனை நாட்கள்
நீடித்து நின்றது மனித வாழ்க்கையில்
எத்தனை துன்பங்கள் இன்னல்கள்
அத்தனையும் தாண்டி வாழும்
மனிதரில்
ஒவ்வொரு அங்கமும் இல்லாமல்
போகும் போது எவ்வளவு
வேதனைகளைத் தாங்கியிருப்பார்கள்!..

அப்படி வாழ்வில் இன்றும் எத்தனை
அங்கமுற்றவர்கள் இவ்வுலகில்
அவர்கள் வாழ்க்கை என்னாகும்
மனிதா உன் அகிம்சை வழியில்
இனியாவது சுதந்திரமாக வாழ
விடியலை நோக்கிப் புறப்படு!..

செல்வி கு கோபிகா
"அருளகம்" சிறுவர் இல்லம்
வவுனியா

## உபதேசம்!..


நுனி நாக்கில் ஆங்கிலம்
தனி இனம் என்று பெருமை
தாய்மொழி தமிழ் எனப்பேச்சு
உபதேசம் எனக்கில்லை!..

## சாதனை!..

கொரோனாக் காலத்தில்
அமோ விற்பனையில்
சாதனை படைத்தது
சவப்பெட்டி விற்பனை!..

-சிவா-

# "மண்"சஞ்சிகை 207அட்டைப்படக் கவிதை




இளங்கதிராய் எழில் நிலவாய் எந்நாளும் ஒளிபரப்புகின்ற
இளங்கோவன் என்றொரு இணையிலா இலக்கியவாதியுடன்
பழந்தமிழினைப் பயில்விக்கும் பத்மா இளங்கோவனுமாய்
பணியோடும் கலைகளோடும் படைப்பாளிகளாய் பயணித்து
விளங்குகின்ற வித்துவத்தால் விரிந்திடும் சமூகஅக்கறையில்
விதக்கின்ற சேவையினை வியந்துபோற்றி வாழ்த்திடுவோம்..!


தழுவிடும் கருணையன்புடனும் தாழ்வில்லா மனவுறுதியோடும்
தாய்மண்ணின் பற்றோடும் தனித்துவமாய் மிளிர்ந்துழைக்கும்
களங்கமில்லாக் கல்வியோடும் கலையிலக்கிய நூல்களோடும்
காலத்தைப் பொன்னாக்கி கருத்தொருமித்து களத்திலிறங்கி
துலங்கிடும் மொழித்திறனும் தூயநற்பண்பு நெறியில்விளைந்த
தூரநோக்கில் சேவையாற்றும் துணையிணையை வாழ்த்துவோம்.!

விழுங்கிடும் துன்பியல்களும் வேதனைகளின் படர்வுகளும்
விரிந்திருக்கும் தருக்களை வீழ்த்திவிடாமல் காத்திடவே
தழும்பிடாத உறுதியோடும் தம்மிலூறிய மனிதநேயத்தோடும்
தமிழென்ற ஆயுத்தினைத் தரித்துநிற்கின்ற போராளிகளாய்
நழுவிடாத நம்பிக்கையில் நற்பணிகளை ஆற்றிநிற்கின்ற
நல்லஉள்ளங்களை நாமும் இணைந்து வாழ்த்திடுவோமே..!

விழுமியவேர்களில் வீரியத்தினை விரித்திடும் வண்ணமாய்
விற்பன்னச் செருக்கின்றி வியப்பூட்டும் பெருஆளுமைகளாய்
மழுங்கிடாத மொழியாற்றல் மகிழ்விக்கின்ற கலையாற்றலால்
மருவிடும் மனிதநேயத்தில் மகத்துவமாய்க் கால்பதித்துச்ச
செழுமையோடும் நேர்த்தியோடும் சேர்ந்திலங்கும் தம்பதியர்
சீரோடும் சிறப்போடும் செளிப்புடன் நிலைத்து வாழியவே..!

**அம்பலவன்புவனேந்திரன்..**

# பல்திசையில் உதித்ததோர் பௌர்ணமி....



எங்கள் தேசத்தில் முதன்முதலாக எழுந்துநின்ற பேராசிரியரே
எண்கணிதப் பட்டப்படிப்பினை இங்கிலாந்தில் நிறைத்தீரே
கங்குலில் கதிராய்எழுந்து கலிபோர்ணியாவில் உரையாற்றி
கன்னித்தமிழ் சிறப்பிருந்தும் களிப்பாய் சிறுமையில்வாழ்ந்தீரே
தங்கத்தமிழ்ப் பண்டிதராய் தரணியெங்கும் சுற்றிவந்திடினும்
தாயத்தில் பல கலாசாலைகளைத் தன்னார்வத்தால மைத்தீரே

விந்தையாம் வேதியலினையும் வியப்பூட்டும் பூதவியலினையும்
விடாதமுயற்சியினால் தமிழில் வியாபிக்க மொழிபெயர்த்தீரே
அந்நாளிலே பல்கலைக்கழக அரியாசனத்தினை அலங்கரித்து
அண்ணாமலையில் பாரதியின் கவிதைகளை அரங்கேற்றியவரே
சிந்துகவிபாடும் சிறப்புகள் பல்வகையில் சேர்ந்த உயர்கவியே
சீதளமாய் எமக்கு சேக்ஸ்பியரை மதங்கசூழாமணியா யாக்கினீரே

காந்தவிழிகள் இரண்டினிலும் கருணை மழையாய்ப் பொழியும்
கன்னித்தமிழ் வார்த்தைகள் கருத்துக்களாய் வந்தேசொரியும்
வேந்தராய் வீற்றிருந்த வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள்
வித்துவத்தினைப் பாராட்டி வியந்துவிதைந்து கலைகள்பயிலும்
சங்கத்தமிழின் உரைவீச்சில் சகமெல்லாம் ஆழ்ந்தே நனையும்
சாணக்கியத்தால் முத்தமிழும் தலைசாய்த்து உமைவணங்கும்

மந்தமாருதம் தீண்டும் மயில்வாகனனார் என்றவொரு திருநாமம்
மனிதநேயப்பணி ஈர்க்கும் மகிழ்வில் இராமகிருஷ்ணரை நாடும்
தந்தை சுவாமிநாதன் தான்சூட்டிய தமிழ்க்கடவுளின் ஒருநாமம்
தலைமுடி மழித்துத் தமிழினால் சுவாமி விபுலாநந்தர் என்றாகும்
செஞ்சந்தண நிறக்காவியுடைக்குள் செதுக்கிய சரித்திரம் மாறும்
செழுமையில் எழுந்த கதிரைச் செகமெல்லாம் தலைவணங்கும்

-அம்பலவன்புவனேந்திரன்..

# சுவாமி ஞானப்பிரகாசர்.....

(கலைவாணி.ஏகானந்தராஜா)

30.08. 2021 அன்று சுவாமி ஞானப்பிரகாசரின் 146 ஆவது பிறந்த நாள் ஆகும். இவர் 22.01.1947 இல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார் . சுவாமிகள் எம்மை விட்டுப் பிரிந்து 74 வருடங்கள் ஆனாலும் அவர் தமிழினத்துக்கு செய்த அரும்பெரும் சேவையின் நிமித்தம் அவரை நாம் இன்றும் நினைவு கூறுகின்றோம். உலகில் கடைசித் தமிழன் வாழும்வரை அவர் நினைவு கூறப்படுவார் என்பதில் ஐயமில்லை.

யேர்மன் நாட்டுக்கும் சுவாமிகட்கும் தொடர்பு உண்டு. யேர்மன் நாடு சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களின் ஆழ்ந்த இலக்கிய அறிவையும் ஆராய்ச்சித் திறனையும், சமய அறிவையும் கேள்வியுற்று அவரைக் கௌரவப்படுத்தி 1939 ஆம் ஆண்டு அவரது படத்துடன் முத்திரை ஒன்றை வெளியிட்டது. ஆனால் அவர் பிறந்து வளர்ந்து சேவைகள் செய்த இலங்கை நாடு 1981 ஆம் ஆண்டு சுவாமிகளின் இறப்பின் பின்னரே முத்திரை வெளியீடு செய்து கௌரவப்படுத்தியது. ஆகஸ்ட் மாதம் 22ஆம் திகதி 1981 ல் அவர் பிறந்து வளர்ந்த இடமான யாழ்ப்பாணத்திலே அஞ்சல் அலுவகத்திலேயே முத்திரை வெளியீடு செய்யப்பட்டது.

ஞானப்பிரகாசசுவாமி அவர்களின் தந்தை சுவாமிநாதபிள்ளை தாயார் தங்கமுத்து ஆவர். ஞானப்பிரகாசருக்கு தாய் தந்தை இட்ட பெயர் வைத்திலிங்கம். இவர் சிறு வயதிலேயே தந்தையை இழந்தார். தாயார் மறுமணம் செய்ததன் நிமித்தம் சுவாமிகள் கத்தோலிக்க மதத்தில் சேர்க்கப்பட்டார். அப்போது ஞானஸ்தானம் செய்யப்பட்டபோது ஞானப்பிரகாசர் என்று பெயர் வழங்கப்பட்டது. அச்சுவேலி சூசையப்பர் திண்ணைப்பள்ளியில் ஆரம்ப பாடங்களை கற்று, பின் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். வயலின் வாத்தியம், தாள வாத்தியங்கள் வாசிப்பதிலும் ஆர்வம் காட்டினார். சிறந்த பேச்சாளரும், கவிதை புனைவதிலும் வல்லவராக இருந்தார்.

1895 ல் யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க குருமடத்தில் சேர்ந்து 1901ம் ஆண்டில் குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்டார். 43 ஆண்டுகள் குருத்துவத் திருத்தொண்டை மேற்கொண்டார். சுவாமிகள் 18 மொழிகளை பேச, எழுதக் கற்றுக்கொண்டார். இலக்கியத்தில் ஆழ்ந்த அறிவைப் பெற்றிருந்தார். சுமார் 70 மொழிகள்வரை அறிவை வளர்த்திருந்தார். 50 புத்தகங்கள்வரை எழுதியுள்ளார்.30 புத்தகங்கள்வரை அச்சிட்டுள்ளார். வரலாறு, அரசியல், மானிடவியல், சமூகவியல், எழுத்துமறை சொல் ஒற்றுமை, சமய வரலாறு, சமய வழிபாடுகள், பழக்கவழக்கங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ச்சியை மேற்கொண்டு பல புத்தகங்களை எழுதினார்.

தமிழர் பூர்வீக சரித்திரம், யாழ்ப்பாணத்து அரசர்கள், யாழ்ப்பாண சரித்திரம், இந்திய நாகரீகம், தமிழர் வரலாறு, தமிழரிடையே சாதி பிறந்த

முறை, தமிழ் அமைப்பு வரலாறு, தமிழ் சொற் பிரதி, தமிழ் தாதுக்கள், மொழிக்குடும்பம், தர்க்க சாஸ்திரம் போன்ற ஆராய்ச்சி நூல்களையும் செப நூல்கள், கிறிஸ்தவ சமய அனுசரணை, பிரசங்க நூல்கள், சமய வரலாற்று நூல்கள், நற்சிந்தனை போன்ற அரிய நூல்களையும், பலரது வாழ்க்கைச் சரித்திரங்களையும் எழுதியுள்ளார். தமிழில் ஜெபங்களை மொழிபெயர்த்து அளித்துள்ளார்.

சுவாமிகள் நடமாடும் நூலகமாக திகழ்ந்தார். சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதியை இரண்டு பதிப்புகளாக தமிழருக்கான பெரும் சொத்தாக கொடுத்திருந்தார். தமிழ் மொழிக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் ஈடில்லா சேவை செய்தவர். இத்தொண்டுகளே சுவாமி அவர்களை தமிழரும் மேல்நாட்டவரும் இன்றும்நினைவில் வைத்திருக்க காரணமாக அமைந்தது...

---

## அன்புடன் மண் சஞ்சிகை ஆசிரியருக்கு...

வணக்கம்....

உங்கள் சஞ்சிகையின் பல ஆண்டுகள் வாசகர் நான். உங்களின் அயராத பணியையும், பாடுகளையும் அறிந்தவள் நான். ஆனால் இன்றுதான் வெளிப்படையாக உங்களுக்கு வாழ்த்து தெரிவிக்கவும் நன்றி தெரிவிக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. வாழும்போதே கௌரவிக்கும் உயர்ந்த உள்ளமும் பண்பும் கொண்டவர் நீங்கள். எனது பிறந்தநாளுக்கு முகநூலில் வாழ்த்தி கௌரவித்தமைக்கு என் சிரம் தாழ்த்தி நன்றியை தெரிவிக்கிறேன்.

என்னை மட்டுமின்றி பல எழுத்தாளர்கள் பெரியவர்கள் கலைஞர்கள் என்று எப்பொழுதும் பிறரைக் கௌரவப்படுத்துவதில் முன்னிற்பவர் நீங்கள். தாயகச் சிறார்களின் கல்விக்கு உதவி செய்யும் இளம் சமுதாயத்தினரையும் தாயக மக்களின் வறுமையை போக்கிய குடும்பங்களையும் கௌரவப்படுத்தியிருந்தீர்கள். உங்களின் இந்த நற் பணிக்கும் நல் உள்ளத்திற்கும் இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் குறைவில்லாது காத்தருள வேண்டுகிறேன். உங்கள் பணிகள் சிறக்க வாழ்த்துகிறேன்.
நன்றியுடன்

**கலைவாணி. ஏகானந்தராஜா**
**யேர்மனி.**

# திருமூலர் கூறியது...

01) பாராத பயிரும் கெடும்.
02) பாசத்தினால் பிள்ளை கெடும்.
03) கேளாத கடனும் கெடும்.
04) கேட்கும்போது உறவு கெடும்.
05) தேடாத செல்வம் கெடும்.
06) தெகிட்டினால் விருந்து கெடும்.
07) ஓதாத கல்வி கெடும்.
08) ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
09) சேராத உறவும் கெடும்.
10) சிற்றின்பன் பெயரும் கெடும்.
11) நாடாத நட்பும் கெடும்.
12) நயமில்லா சொல்லும் கெடும்.
13) கண்டிக்காத பிள்ளை கெடும்.
14) கடன்பட்டால் வாழ்வு கெடும்.
15) பிரிவால் இன்பம் கெடும்.
16) பணத்தால் அமைதி கெடும்.
17) சினமிகுந்தால் அறமும் கெடும்.
18) சிந்திக்காத செயலும் கெடும்.
19) சோம்பினால் வளர்ச்சி கெடும்.
20) சுயமில்லா வேலை கெடும்.
21) மோகித்தால் முறைமை கெடும்.
22) முறையற்ற உறவும் கெடும்.
23) அச்சத்தால் வீரம் கெடும்.
24) அறியாமையால் முடிவு கெடும்.
25) உழுவாத நிலமும் கெடும்.
26)உழைக்காத உடலும் கெடும்.
27) இறைக்காத கிணறும் கெடும்.
28) இயற்கையழிக்கும் நாடும் கெடும்.
29) இல்லாலில்லா வம்சம் கெடும்.
30) இரக்கமில்லா மனிதம் கெடும்.
31) தோகையினால் துறவு கெடும்.
32) துணையில்லா வாழ்வு கெடும்.
33) ஓய்வில்லா முதுமை கெடும்.
34) ஒழுக்கமில்லா பெண்டிர் கெடும்.
35) அளவில்லா ஆசை கெடும்.
36) அச்சப்படும் கோழை கெடும்.
37) இலக்கில்லா பயணம் கெடும்.
38) இச்சையினால் உள்ளம் கெடும்.
39) உண்மையில்லா காதல் கெடும்.
40) உணர்வில்லாத இனமும் கெடும்.
41) செல்வம்போனால் சிறப்பு கெடும்.
42) சொல்பிறழ்ந்தால் பெயரும் கெடும்.
43) தூண்டாத திரியும் கெடும்.
44) தூற்றிப்பேசும் உரையும் கெடும்.
45) காய்க்காத மரமும் கெடும்.
46) காடழிந்தால் மழையும் கெடும்.
47) குறிபிறழ்ந்தால் வேட்டை கெடும்.
48) குற்றம்பார்த்தால் சுற்றம் கெடும்.
49) வசிக்காத வீடும் கெடும்.
50) வறுமைவந்தால் எல்லாம் கெடும்.
51) குளிக்காத மேனி கெடும்.
52) குளிர்ந்துபோனால் உணவு கெடும்.
53) பொய்யான அழகும் கெடும்.
54) பொய்யுரைத்தால் புகழும் கெடும்.
55) துடிப்பில்லா இளமை கெடும்.
56) துவண்டிட்டால் வெற்றி கெடும்.
57) தூங்காத இரவு கெடும்.
58) தூங்கினால் பகலும் கெடும்.
59) கவனமில்லா செயலும் கெடும்.
60) கருத்தில்லா எழுத்தும் கெடும்.

கெடாமல் பாதுகாக்க வேண்டியது
அவரவர் பொறுப்பு.

# சுட்டெரிக்கும் வெய்யில் சுடுகாடாகும் பூமி....

## தண்ணீரில்லாமல் தவிக்கப்போகும் மக்கள்....




உலகரீதியில் நிலவிவரும் காலநிலை மாற்றத்தால் குடிநீருக்கே கடும் தட்டுப்பாடு ஏற்படும் என உலக பருவகால பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கின்றது. பொதுவாக நாம்பாவிக்கும் தண்ணீரைக் கட்டுப்படுத்தி, வீண்விரயமாகாமல் பாதுகாத்து பாவிக்காவிடின் குடிதண்ணீருக்கே பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கடும் வறட்சி நிலவும் நாடுகள், போர் அனர்த்தங்கள் நிலவும் நாடுகள், நீர் வளங்கள் குறைந்த நாடுகளில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இதனால் வருடாவருடம் பல்லாயிரம் மக்கள் இறந்துவிடுகிறார்கள்.

சில நாடுகளில் ஒரு வேளை குடிநீரைப் பெறுவதற்குப் பல மைல் தூரம் நடந்துசென்றே தண்ணீரைப் பெற வேண்டியுள்ளது. விவசாயம், பயிர்ச்செய்கை பாதிப்படைய விவசாயிகள் தற்கொலை, பசி பட்டினி, வறுமையை எதிர்கொண்டுவருகிறார்கள். மனிதர்கள் மட்டுமல்ல மிருகங்கள், பறவைகள், ஏனைய உயிரினங்கள்கூட தண்ணீர் இல்லாமல் மடிந்து வருவதை அறிவோம்.

யேர்மனியில் சென்றமாதம் ஒருவாரம் கடும் வெப்பம் நிலவியதால் குடிதண்ணீர் அதுவும் போத்தல் தண்ணீர் வேண்டிக் குடித்துக் களைத்தனர். கடைகளில் தண்ணீர் வியாபாரமும் ஓகோ எனப் பெருகியது. சில கடைகளில் தண்ணீர் தட்டுப்பாடும் நிலவியது. ஓரளவு வசதி படைத்த ஐரோப்பிய நாடுகளில் இந்த நிலை என்றால்... நமது தாயக தேசத்தை இச்சந்தர்ப்பத்தில் யோசித்துப் பார்த்தேன்!.. கிணறுகளில் அள்ளித் தாராளமாகக் குடித்தோம். நீராடினோம். ஏனைய பல தேவைகளுக்குப் பயன்படுத்தினோம். இது எல்லாம் நமது கிராம வாழ்க்கை. நகரங்களில் அடிக்கடி கண்ணீர்த்தட்டுப்பாடு நிலவும்.வன்னி நிலப்பரப்பில் கடும் கோடைகாலத்தில் குடிதண்ணீர் கிடைப்பதோ மகிவும் கஸ்டமான காரியமாகும். பல மைல் தூரம் சென்றுதான் குடிதண்ணீரைப் பெறவேண்டும். குளிக்கவோ, உடை கழுவவோ ஆற்றங்கரைகளுக்குப் பல மைல் தூரம் செல்ல வேண்டும்.

தொடர்ச்சி-37ம் பக்கம்

## பரம்பரை...

-கவி மீனா-

பரம்பரை என்றாலே எல்லாரும் சொல்வது தாங்கள் என்ன பரம்பரையை சேர்ந்தவர்கள் என்பதே! நாங்க செட்டிய பரம்பரை என்று சிலர் நாங்கள் முதலியார் பரம்பரை என்று சிலர். சிலரது குடும்பத்தில் யாராச்சும் ஒருவர் நல்லாகப் படித்து நல்ல வேலை செய்திருந்தால் அவர் பேரைச் சோல்லி நாங்கள் அவரது பரம்பரை என்று சொல்லுவார்கள் இப்படியாகப் பரம்பரை போகுது ஆனால் நான் சொல்ல வந்தது பரம்பரை நோய்களைப் பற்றி நமது பெற்றோர்களிடம் இருந்து கடைசிவரை போராடினாலும் சில பொருளோ சொத்தோ வழிகாட்டலோ கிடைப்பதில்லை ஆனால் நாம கேட்காமலே விரும்பாமலே அவர்கள் விரும்பித் தந்துவிடுவது தங்களிடம் உள்ள பரம்பரை நோய்களையும் குணங்களையும் தானுங்க! இந்த சலரோகம், பிறசர், புற்று நோய் இன்னும் சில மூளை வளர்ச்சி குன்றிய நோய்கள் உட்பட அவர்களிடம் இருந்து சில குணங்கள் அது நல்லதாக இருந்தால் பரவாயில்லை

ஆனால் சிலருக்கு தாய் தந்தையரிடம் இருந்து சில தீய குணங்களும் கடத்தப்படுகின்றன அது தொடர்ச்சியாகப் பரம்பரை பரம்பரையாக இந்த நோய்களும் தீய குணங்களும் போய்க் கொண்டே இருக்கின்றன. சில பிள்ளைகள் தாங்கள் படிக்கிற பாதையை மாற்றி வேறு ஏதாவது படிக்க ஆசை பட்டிருப்பார்கள் ஆனால் பெற்றோர் சம்மதிக்காமலே வேறு பாதையில் போயிருக்கக்கூடும் சிலர் தாம் விரும்பிய வாழ்வை அமைக்கப் பெற்றவர் சம்மதம் கிடைக்காத போது விரும்பாத வாழ்வை அமைத்து மனம் நொந்து போயிருக்கலாம் சில பெண் குழந்தைகள் தாம் வாழ்ந்த வீட்டைக் கேட்டு கடைசிவரை போராடியும் கிடைக்காமல் அதனாலே வாழ்வு சீர் குலைந்தும் போயிருக்கும் ஆனால் பிள்ளைகள் விரும்பாமலே கேட்காமலே பெற்றவர்கள் கொடுத்து விடும் இந்தப் பரம்பரை நோய்கள் பாருங்க அது தீராத தண்டனையாக அமைந்து விடுகிறது!

இந்த சலரோகம், பிறசர் என்ற பரம்பரை நோய்கள் சில குடும்பங்களில் வழி வழியாக வருகிறன என்னதான் கவனமாக வாழ்ந்தாலும் வயது ஏற ஏற எடையும் ரென்ஸனும் கூடக் கூட இந்த இரண்டு நோய்களும் வெளிக் கிழம்பி விடுகிறன. உடலில் அவைக்கு என்னதான் மருந்து மாத்திரை போட்டாலும் அவை நம்ம உடலை விட்டுப் போகவே மாட்டுது அம்மட்டுப் பிரியம் நம் மேலே! கட்டுப்பாடாய் உணவிலை இருக்கலாம் ஆனால் வாழ்கையில் வருகிற ரென்ஸ்சன் ஏறுகிற வயது இரண்டையும் எம்மாலே கட்டுபடுத்த முடியாத போது இந்த நோய்களின் தீவிரத்தையும் குறைப்பது கடினமே! சில வீடுகளில் மூளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகள் பிறப்பதுண்டு நீங்கள்

நல்லாக விசாரித்துப் பார்த்தால் தெரியும் அவர்களது குடும்பத்தில் வேறு யாராவது இப்படி இருந்திருக்க வாய்ப்புண்டு இதுவும் கூடுதலாகப் பரம்பரை நோயே! சிலருக்கு அதிக கோபம், தேவை இல்லாமல் கத்துவது, சந்தேகப் படுவது சில ஆண்களுக்கு ஆண்மை இல்லாமல் அதனால் அந்தரப்படுவது யாவும் நரம்புத் தளர்ச்சி போன்ற பரம்பரை நோய்களால்தான் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது

இப்படிப்பட்ட பரம்பரையை யார்தான் அறிந்து கொள்வார்கள்? சம்பந்தம் பேசப்போற இடத்திலை சாதி, மதம், சாதகம், அந்தஸ்து பாரக்கிறார்கள் ஆனால் அந்தச் சந்ததியிலை இப்படிப்பட்ட நோய்கள் இருக்குதா என யாரும் பாரப்பதில்லை இதைக்கண்டு பிடிப்பதும் கடினம் கல்யாணம் முடிந்து வாழும் காலத்தேதான் இந்தப்பரம்பரைக் குணங்களும் பரம்பரை நோய்களும் வெளிப்படுகின்றன அப்பதானே வருகுது நீயா நானா? எனப் போராட்டம் வாழ்வில் இந்தப்பரம்பரை நோய்கள் இவர்களோடு நின்று விடுவதில்லை இவர்கள் பிள்ளைகளுக்கும் அவர்கள் விரும்பாமலே கடத்தபடுகின்றது தேவையா நமக்கு இந்த பரம்பரை பெருமை?..

---

**35ம் பக்கத் தொடர்ச்சி...**

ஆற்றங்கரைக்குச் சென்றாலும் அங்கே எருமை மாடுகள் சூடுதாங்கமுடியாமால் தண்ணீரில் கிடக்க, அந்தத் தண்ணீரில்தான் நாமும் குளிப்பதும் ,குடிப்பதும், உடைகழுவுதலும் நடைபெறும். இது அங்கு யதார்த்தமான விடையமாகும். புலம்பெயர் வாழ்க்கை முறையில் பலர் தண்ணீரை வீண் விரயமாக்குதலை நேரடியாகக் காண்கின்றோம். வீடுகளில் பல் துலக்கும்போது அல்லது முகச்சவரம் செய்யும்போது குளாய்த் தண்ணீரைத் திறந்து ஓடவிட்டிட்டு வேற தேவைகளைச் செய்வார்கள். இன்னும்பலர் மணித்தியாலக் கணக்காக குளிப்பார்கள். அன்னும் பலர் சுடுநீரையும் குளிர்நீரையும் ஒருமித்துத் திறந்துவிட்டிட்டு வேறு அலுவலில் ஈடுபடுவார்கள். இதனால் தண்ணீர் வீண்விரயமாகுவதுடன் மின்சாரக்கட்டணமும் கூடுதலாகக் கட்டுகிறார்கள்.

இன்னும் சிலர் போத்தல் குடிதண்ணீரைக் காசு செலவழித்து வேண்டிவந்து குடித்துவிட்டு அரைவாசியை வெளியே ஊற்றுவார்கள். அப்படிச் சோம்பேறித்தனமும் கவலையீனமும் குடிகொண்டுவிட்டன. இவர்களையெல்லாம் நமது வன்னி நிலப்பரப்பில் ஆடி, ஆவணி மாதங்களில் கொண்டுபோய் விட்டால்தான் தண்ணீரின் அருமை விளங்கும் என எண்ணுகிறேன். எனவே தண்ணீர்ப் பாவனையில் நாம் மிகவும் சிக்கனமாகவும் அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டும். தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வை நாம் நமது சந்ததிகளுக்குச் சிறுவயதிலிருந்தே ஏற்படுத்த வேண்டும். தண்ணீர் இல்லாவிடின் இந்த உலகமே அழிந்துவிடும். உடலாரோக்கியம் தரும் தண்ணீரைப் பாதுகாப்போம்!..தண்ணீரை உயிரென மதிப்போம்!.. **ஆசிரியர் "மண்" சஞ்சிகை**

# மனித உடலின் உறுப்புக்களில் அறிந்துகொள்ள வேண்டியவை!..

01-மனித உடலின் இரத்தவகை - A, B, AB, O
02-மனித உடலின் மூளைக்கு முக்கிய தொடர்புடைய உறுப்பு - பெருவிரல்
03-மனித உடலின் வியர்வைத் துவாரங்கள் - 20 லட்சம்
04-மனித உடலியிலுள்ள தசைகள் - 639
05-மனித உடலின் பெரிய உறுப்பு - கல்லீரல்
06-மனித உடலின் மிக நீளமான உறுப்பு - தொடை எலும்பு
07-மனித உடலிலுள்ள நரம்புகளின் தொகை - 7.200
08-மனித உடலிலுள்ள எலும்புகளின் தொகை - 206
09-மனித உடலில் மிகச்சிறிய எலும்பு - காதிலுள்ள எலும்பு (3 மி.மீ)
10-மனித உடலின் சராசரி இரத்தத்தின் அளவு - 5 லீற்றர்
11-மனித உடலின் சராசரி நாடித்துடிப்பு - 60 - 80 (72)
12-மனித இருதயத்தின் நிறை - 220 - 260 கிறாம்
13-மனித உடலின் வலுவுள்ள தசை - நாக்கு
14-மனித இருதயத்தில வெளியேறும் இரத்தம் - 3 அவுன்ஸ்
15-மனிதன் பிறக்கும்போது உடலிலுள்ள எலும்புகளின் தொகை - 330
16-மனித உடலின் பெரிய அங்கம் - தோல்
17-மனித உடலின் மூட்டுக்களின் எண்ணிக்கை - 230
18-மனித உடலின் உபயோகமில்லாத உறுப்புக்கள் - 180
19-மனித உடலின் வேகமாக வளரக்கூடிய விரல் - நடுவிரல்
20-மனித மூளையின் சிந்தனை வேகம் - 170 கி.மீ

**-திருமதி ஜெயா நடேசன்-**

---

## தகவல்கள்!..

-இலங்கையில் தமிழ்ப் பண்டிதமணி என்று அழைக்கப்படுபவர்..
சி கணபதிப்பிள்ளை.
-இலங்கையின் முதல் தமிழ்ப் பேராசிரியர்..
சுவாமி விபுலானந்தர்
-இலங்கையின் தேசபிதா என்று அழைக்கப்படுபவர்..
டி எஸ் சேனநாயக்கா

## சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| ப | ந் | து | தி |
| ட் | தி | த் | க |
| ட | லை | மு | ல் |
| ம் | ட | ட் | வி |

## குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கை | த் | து | ப் | பா | க் | கி |
| தி | ழ் | க | பு | ப் | று | வெ |
| க | ம் | ப | ப் | அ | யி | ந் |
| ள் | ட் | ன் | ண | ர் | க | த |
| க | டி | கா | ர | ம் | ல் | ய |
| ங் | ச | ல | ங் | கை | வி | ம் |
| தி | ரு | கோ | ண | ம | லை | வ |

## சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 8 | 3 | 1 | 7 | 9 | 5 | 4 | 2 |
| 9 | 5 | 7 | 2 | 4 | 6 | 3 | 1 | 8 |
| 2 | 1 | 4 | 8 | 3 | 5 | 9 | 7 | 6 |
| 4 | 9 | 5 | 6 | 8 | 3 | 1 | 2 | 7 |
| 7 | 2 | 1 | 5 | 9 | 4 | 6 | 8 | 3 |
| 3 | 6 | 8 | 7 | 1 | 2 | 4 | 5 | 9 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 7 | 8 | 9 | 5 |
| 8 | 3 | 2 | 9 | 5 | 1 | 7 | 6 | 4 |
| 5 | 7 | 9 | 4 | 6 | 8 | 2 | 3 | 1 |

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி.. மாதம்மாதம் அஞ்சலி செய்யவேண்டிக்கிடக்குது பாருங்கோஅதுசரி சினிமா படம் போல 1, 2, 3,4 வெளியீடு மாதிரியல்லோ கொரோனாவும் 1, 2, 3,4எனத்தொடருது. இதைக் கட்டுப்படுத்துவதும் எங்கட கையில்தான் இருக்குது பாருங்கோ!.

இல்லை?.. இல்லை!.. நாங்கள் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்க மாட்டோம்?..கொண்டாட்டங்கள் வைப்போம்?..கோவில் திருவிழாக்கள் நடத்துவம்?.. கண்டபடி எல்லா இடமும் பாதுகாப்பு இல்லாமல் திரிவம் என்று நடந்தால் எப்படி இந்தக் கிருமித்தொற்றிலிருந்து விடுபடமுடியும். எல்லாரும் கொஞ்சம் யோசியுங்கோ.. தவறினால் கண் மூடவேண்டியதுதான்... நீங்கள் கண்மூடுவதுடன் மற்றவர்களின் கதையையும் முடிக்கப் போகிறீர்கள் என்பதைக் கொஞ்சம் கவனியுங்கோ ராசாக்கள்!.. ராசாத்திகள்!..

இப்ப வெய்யிலும் அடிக்கடி வந்து சுட்டெரித்து தன்ர விளையாட்டைக்காட்டுது பாருங்கோ..இந்த குட்டிக் கிருமிகளின் திருவிளையாடலால். கிழமையில ஒரு நாள் எல்லாப் பொருட்களையும் கடைகளில் வேண்டிக்கொண்டுவந்து குளிர்ப்பெட்டிகள் எல்லாத்தையும் நிறைத்துப்போட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக இழுத்தெடுத்து பொரித்து, அவித்துத் தின்று உடம்பும் பத்துக்கிலோவுக்கு மேல கூடி இருக்க, நிமிர, நடக்கமுடியாத நிலைதான். இது கனபேருக்குக் கண்டியளோ. ஆனால் ஒருவரும் வெளியில சொல்ல மாட்டினம் பாருங்கோ..

இனி இந்தக் கோடை விடுமுறைக்கு ஊருக்குப்போகப் பலர் திட்டம்போட்டிருக்க.. இந்த நாசமாய்போன கொரோனா ஒழியிதில்லை என்று பல ஆயிரம்பேருக்குக் கவலை பெருகிவிட்டுது பாருங்கோ.. ஊருக்குப்போய் கண்டதெல்லாத்தையும் ஆசையோடு வேண்டி உண்ணலாம்,

ஊரெல்லாம் சுற்றித்திரியலாம், கோயில் குளம் எல்லாம் பார்க்கலாம், கடற்கரையில தண்ணியடித்து, விளையாடிப் படுத்துறங்கிப் பொழுதைப் போக்கலாம், பலவிதமாகப் போட்டோ எடுத்துப் பேஸ்புக்கில் போட்டு லைக் வாங்கலாம் என்றெல்லாம் ஆசை.. எல்லா ஆசையும் நாசமாகிப்போச்சுது என்று கவலை.. இனி என்ன செய்ய.. பழையபடி செற்றியில கிடந்து ஒரு நாளைக்குப் பத்துப் பதினைந்து நாடகம் பார்க்க வேண்டியதுதான் பாருங்கோ!..

இது பாருங்கோ தொடர் நாடகம்போல இந்த நோயும் தொடரப்போகுது போலத்தான் கிடக்குது. இனி இந்த நோயுடன் பழக்கப்பட்டு ஒன்றித்துப் பாதுகாப்பாக வாழவேண்டிய கட்டாயம்தான் ஒன்றும் செய்யமுடியாது. ஊரோடு உலகத்தோட ஒத்து ஓடவேண்டும். இல்லையேல் மண்டையைப் போடவேண்டியதுதான் பாருங்கோ..

சரி...சரி.. இனி ஒரு விசயத்தை அலசலாம் என்று இந்த மயிலன் எண்ணுகிறான். இது புதிதல்ல..இன்று உலகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் அதுவும் தமிழர் மத்தியில் இந்த (Zoom) சூம் இணையவழிக் கூட்டங்கள், கருத்தாடல்கள், சொற்பொழிவுகள், அது, இது என்று களைகட்டி ஓகோ என்று ஓடிக்கொண்டிருக்கின்றது. இது என்ன நடக்குது என்று இந்த மயிலனின் நண்பன் ஒருவனின் வீட்டபோனபொழுது அவன்ர கணனியில் நடந்த இந்த "சூம் மீற்றிங்" தான் இதை எழுத வைத்தது பாருங்கோ..இது பாருங்கோ ஒவ்வொருநாளும் நூற்றுக்கணக்கான நிகழ்வுகள் நடைபெற்றாலும் வார நாட்களில் எக்கச்சக்கமான நிகழ்வுகள்தான்.

எல்லாம் ஓசிதானே...அப்ப யார்தான் விடுவினம் நடத்துறவேயும், அதில் வந்து பேசுறவே, சொற்பொழிவு நிகழ்த்துபவர்கள், பொன்மொழிகள் அது இது என வியாக்கியானம் செய்கிறவை, புத்திமதி சொல்லுகிறவை, தங்கட விலாசத்தைக் காட்டுறவை, தங்கட பெயர் புகழை வளர்க்கிறவை எல்லாரும் ஓசிதான். அப்ப யார் பின்நிற்பினம். இவர்கள் எல்லோரையும் காசு கட்டித்தான் இதில் பங்குகொள்ளலாம் என்றால் யாரைக் காணமுடியும் ஒருவரும் வரமாட்டார்கள். இது தான் தமிழன்ர புத்திபாருங்கோ..

இதைப்பற்றி நிறையவே எழுதலாம்... ஆனால் இந்த வித்துவ சிரோன்மணிகளின் பேச்சுக்களும் கருத்தாடல்களும் மக்களைக் குழப்பிற விடையங்களும் நடைபெறுகின்றன. தமிழன் சாதிக்கு ஒரு கோவில் வைத்திருப்பது போல புலம்பெயர் நாடுகளிலும் இந்தச் சூம் காரார் தமக்கு என ஒரு வட்டத்தை வைத்துக்கொண்டு கிழமைக்குக் கிழமை அலம்புவதும் தம் புகழை வளர்க்க அலட்டுவதும் பந்தாகாட்டுவதும் தான் நடக்குது. சமூக மேம்பாட்டுக்கோ, சமூக அக்கறைக்கோ, சமூக மாற்றத்துக்கோ எந்தவிதக் கருத்துக்களும் கிடையாது. அவரவர் வித்துவத்தையும் புகழையும் வளர்க்கும் இடம்தான் இது பாருங்கோ..

இன்னும் சில பெருங்கவிக் கூட்டம் அப்படியே மக்களைக் கவி வெள்ளத்தில் மூழ்கடிக்கிறார்கள். நாட்டிலும் உலகத்திலும் எத்தனையோ அவலங்களும், கொடுமைகளும், பசிபட்டினியும், பாலியல் கொடுமைகளும், கொலைவெறிகளும் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டிருக்க எங்கட கவிப்பேரரசுகள் அவைகளை விட்டுவிட்டு கண்ணகியா?..மாதவியா?..கர்ப்பில் சிறந்தவர் என்ற விவாதம்.

கவிகள் கொட்டப்படுகின்றன. உண்மையில் இந்த கவி வள்ளல்கள் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கக் கவிபாடுகிறார்களா?..எல்லாம் போலியும் புரளியும்தான்.

சரி எல்லாத்தையும் ஓசியில் செய்து பெயரும் புகழும் சம்பாதித்து வருபவர்கள் பலருக்குப் பட்டங்களோ அள்ளிக் கொட்டப்படுகின்றது. நல்ல விடையம்தான். அவர்களின் எழுத்துலகம் வளரும். ஆனபடியால் பட்டங்கள் தேவைதான். ஆனால் எழுதிப் பட்டங்கள் பெறுவதுபோல செயலிலும் காட்ட வேண்டும். இரக்கப்படுபவர்களுக்கு ஒரு சதமும் கொடுக்காத பலர் ஈரேழு பட்டங்கள், புகழுடன் திரிவதுதான் வேடிக்கை. இதை நமது சமூகமும் அங்கீகரித்து வடிவு பார்ப்பதுதான் அதிலும் பெரிய வேடிக்கை பாருங்கோ..

ஒருசில சூம் நிகழ்வுகள் அருமைதான்..அவை கட்டாயம் தேவைதான். மானிட விடுதலை நோக்கியும் யதார்த்த உலக வலத்தையும் நம் தேச மக்களின் முன்னேற்றத்திற்காகவும், இன்றைய கொரோனா அவலத்திலிருந்து மக்களைப் பாதுகாத்து நல்ல செய்திகளையும் கருத்துக்களையும் எதிர்காலச்சந்ததிகளின் முன்னேற்றத்திற்காகவும் நல்ல கருத்துப் பகிர்வுகள் இடம்பெறுவது நல்ல விடையம் பாருங்கோ..இந்தப்புத்திஜீவிகளை இந்த மயிலன் பாராட்டியே வாழ்த்துகிறான்.

சூம் மீற்றிங் முடிய எனது நண்பனிடம் நாட்டில கொரோனா அவலம் கூடிவிட்டுது, பசி பட்டினி போக்க ஏதாவது உதவட என்று கேட்க.. அவன் சொன்னான்..எனக்கு வெளிநாட்டுச் சிற்றிசென்..ஏன் நான் உன்ர நாட்டுக்கு உதவவேண்டும் என்றான். இந்தப் பரதேசி எந்த நாட்டிலிருந்து அகதியாக வந்து இங்கு வசதி வாய்ப்புடன் வாழுகிறான் என்று யோசித்தானா?..அல்லது தன்ர தொப்பிள்கொடி உறவுகள படும்பாடு என்ன என்று சிந்தித்தானா?..இது இவன் மட்டுமல்ல இன்னும் பல ஆயிரம்பேர் இப்படித்தான் பாருங்கோ!..எல்லாம் விலாசம், பெயர், புகழுக்கும் மேடைப் பேச்சுக்கும்தான் செயலளவில் பூச்சியம்தான். அப்பதான் யோசித்தேன் இந்த சூம், வட்சப், வைபர் அது இது எல்லாவற்றிற்கும் காசு அறவிட்டாங்கள் என்றால் நல்லாயிருக்கும். அப்படியானால் ஒரு சூம் கூட்டமும் நடைபெறாது என்று எண்ணியபடி அவன் வீட்டிலிருந்து விடைபெற்றேன் அப்ப உங்களிடமிருந்தும் விடைபெற்று அடுத்தமுறை இன்னொரு

# வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிடுவதால் இவ்வளவு நன்மைகளா?..

எல்லோர் வீட்டிலும் இருக்கும் மிக மிக வெந்தயம் சமையலில் மட்டுமல்ல, ஆயுர்வேத மருத்துவத்திலும் மிகவும் சிறப்பு தன்மைகள் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

நம் உடலுக்குத் தேவையான பல ஊட்டச்சத்துக்கள் இந்த வெந்தயத்தில் உள்ளது. அது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் வயிறு சம்பந்தமான பிரச்சினைகளையும் குணப்படுத்த வல்லது. இதனால் நம் உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கும்.

காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில், கொஞ்சம் வெந்தயத்தை வாயில் போட்டுக்கொண்டு தண்ணீர் குடிக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்வதால் உடல் உஷ்ணம் குறைந்து நாள் முழுவதும் குளு குளு வென இருக்கலாம். வெந்தயம் உடலில் கெட்ட கொழுப்பைக் நீக்கும் தன்மைக்கொண்டது. எனவே உணவில் வெந்தயம் சேர்த்துக்கொள்வதால் உடல் கெட்ட கொழுப்புகள் சேராமல் இருக்கும். உடல் எடையைக் குறைக்க விரும்புவோர் வெந்தயத்தைப் பொடி செய்து வைத்துக்கொண்டு தினமும் காலையில் வெறும் வயிற்றில் நீரில் இந்த பொடியைக் கலந்து குடித்தால், நல்ல பலன் கிடைக்கும்.

வெந்தயத்தில் பொட்டாசியம் சத்து அதிகமாக உள்ளதால் இதய நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்கிறது. மேலும் வெந்தயம் கொழுப்பைக் குறைப்பதால், இதய பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பும் குறைவு. வெந்தயத்தில் உள்ள அமினோ அமிலம் இன்சுலின் உற்பத்தியைத் தூ ண்டச் செய்கிறது. எனவே நீரிழிவு நோயாளிகள் தினமும் காலையில் வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிட்டால் விரைவில் குணமடையலாம். கரையக்கூடிய நார்ச்சத்து வெந்தயத்தில் இருப்பதால், மலச்சிக்கலில் இருந்து விடுபட காலையில் வெறும் வயிற்றில் வெந்தயம் சாப்பிடுவது நல்லது.

ஃபைபர், கால்சியம், இரும்பு, கார்போஹைட்ரேட், புரதம் மற்றும் தாதுக்கள் இருப்பதால் செரிமான பிரச்சினைகள் மற்றும் வயிறு சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்து நிவாரணம் பெற வெந்தயம் சாப்பிடுவது நல்லது. அத்துடன் உடலின் இரத்த ஓட்டத்தை வெந்தயம் மேம்படுத்தும். இது கல்லீரலைச் சுத்தப்படுத்துவதுடன் உடல் முழுவதும் இரத்தம் சீராகவும் ஓட வெந்தயம் உதவுகிறது.

# உடல் ரத்த ஓட்டம், ஆக்சிஜன் அளவு அதிகரிக்கும் உணவுகள்... இந்த 5 உணவினை மிஸ் பண்ணிடாதீங்க..

கொரோனாவின் இரண்டாவது அலை பல உயிர்களை பறித்துக்கொண்டிருக்கும் நிலையில், மக்கள் ஒருபுறம் ஆக்ஸிஜன் இல்லாமல் தவித்து வருகின்றனர். கொரோனாவினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இரத்தத்தில் ஆக்ஸிஜன் அளவு குறைவதால், மூச்சுத்திணறல் ஏற்பட்டு இறுதியில் உயிரிழக்கும் நிலைக்குச் செல்கின்றனர். உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கவும், ரத்தத்தில் ஆக்ஸிஜன் அதிகரிக்கவும் சில இயற்கை உணவுகள் குறித்து இந்த பதிவில் காணலாம்.

**பீட்ரூட்....**

இந்த ஆழமான சிவப்பு காய்கறி ஆக்ஸிஜனேற்றிகளின் முக்கிய அங்கம். அதன் அழகான சிகப்பு நிறத்திற்கு காரணமான நிறமிகள் உங்கள் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்திற்கும் பயனளிக்கும். பச்சையாக சாப்பிடும்போது, பீட்ரூட் சுழற்சியை மேம்படுத்துவதற்கும், இரத்தத்தை சுத்திகரிப்பதற்கும், கல்லீரலை வலுப்படுத்துவதற்கும் உதவுகிறது. இரும்பு மற்றும் ஆக்ஸிஜனேற்றிகளின் கலவை இரத்தத்தில் ஆக்ஸிஜனை அதிகரிப்பதை ஊக்குவிப்பதற்கும், இரத்தத்தை சுத்திகரிப்பதற்கும் பயன்படுகிறது.

**பெர்ரி...**

அவுரிநெல்லிகள், ஸ்ட்ராபெர்ரி, மல்பெர்ரி, ராஸ்பெர்ரி- சீசன் இனிப்பு மற்றும் புளிப்பு பெர்ரிகளால் நிரம்பியுள்ளது. இந்த பெர்ரி இயற்கையாகவே இரத்த ஓட்டத்தை அதிகரிக்கும் மற்றும் உங்கள் இதய ஆரோக்கியத்திற்கு சிறப்பான நன்மைகளை கொடுக்கும்.

**மாதுளை..**

ஜூஸ், இனிப்பு பழம் பாலிபீனால் ஆக்ஸிஜனேற்றிகள் மற்றும் நைட்ரேட்டுகளின் மிகவும் சக்திவாய்ந்த ஆதாரமாக இருப்பது மாதுளை. அவை நம்பமுடியாத வாசோடைலேட்டர்களாக கருதப்படுகின்றன. மென்மையான இரத்த ஓட்டத்திற்கு இரத்த நாளங்களை சீராக இயங்கவும் உதவுகிறது. நீங்கள் மாதுளை விதைகளை சாலட்களில் டாஸ் செய்யலாம் அல்லது அவற்றை ஜூஸ் செய்து அருந்தலாம்.

**பூண்டு..**

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கு பூண்டு, உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்க உதவுகிறது. பூண்டு மனித உடலில் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் நன்மைகளுக்காக உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. உடலில் சுற்றோட்ட மற்றும் செரிமான அமைப்புகளுக்கு உதவுதல், இரத்த அழுத்தத்தைக் குறைத்தல் மற்றும் இதய நோய்களை எதிர்த்துப் போராடுவது பூண்டின் தலைசிறந்த பண்புகளாகும்.

**இலவங்கப்பட்டை**
பல விலங்கு ஆய்வுகளில் இலவங்கப்பட்டை அதன் செயல்திறனை வெப்பமயமாக்கும் மசாலாவாகக் காட்டியுள்ளது, ஆனால் இந்த இலவங்கப்பட்டை இரத்த நாளங்களின் விரிவாக்கத்தை மேம்படுத்துவதன் மூலம் இரத்த ஓட்டத்திற்கு உதவுகிறது.

---

# நீரிழிவு நோயாளிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உண்டாகும் போது என்ன மாதிரியான அறிகுறிகள் இருக்கும்...

முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அறிகுறிகள் என்னென்ன என்பதை பார்க்கலாம்.

**நீரிழிவு நோயாளிகள்**
இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும் போது உடலில் இன்சுலின் உற்பத்தி சமரசம் செய்து நோய் எதிர்ப்பு சக்தியை அடக்குகிறது.
நீரிழிவு கொண்டுள்ள ஒரு நபர் ஊட்டச்சத்தை பயன்படுத்துவது கடினமானது. மோசமான இரத்த ஓட்டம் உடலில் நீண்டகால பிரச்சனைகளை உண்டாக்கலாம். கொரோனாவை போன்றே நீரிழிவு கொண்டிருப்பவர்களும் வைரஸ் எதிர்த்து போராடுவது கடினமாக்கும்.
அதோடு இது பிற நோய்களையும் வரவழைக்க கூடும். மருத்துவமனையில் அனுமதிக்கப்படாத நீரிழிவு நோயாளிகளுக்கு வாஸ்குலர் பிரச்சனைகள் உள்ளன. இது அவர்களது இதய குறைபாடுகள், சுவாசக் குறைவு, நாள்பட்ட நுரையீரல் போன்றவற்றால் பாதிக்கப்படுவார்கள்.
இதனோடு கொரோனா அறிகுறிகளும் இருக்கலாம். இதனால் நீரிழிவு நோயாளிகள் கூடுதல் கவனமாக இருக்க வேண்டும்.
கொரோனா வைரஸின் இரண்டாவது அலைகளில் முக்கியமான அறிகுறிகள் தோல் வெடிப்பு, வீக்கம் மற்றும் ஒவ்வாமை அறிகுறிகள் போன்றவை. இந்த அசாதாரண அறிகுறிகள் மக்களை பாதிக்கின்றன.
கொரோனா கால்விரல்கள், நகங்கள், படை நோய், சிவப்பு புள்ளிகள், SARS-COV - வைரஸின் சருமத்தில் ஏற்படும் அனைத்து அறிகுறிகளும் கட்டுப்பாடற்ற இரத்த சர்க்கரை அளவால் பாதிக்கப்படுபவர்களால் அனுபவிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.
நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களும் தோல் அறிகுறிகள், வெட்டுகள் மற்றும் காயங்களிலிருந்து மெதுவாக குணமடைய வாய்ப்புண்டு. உயர் இரத்த சர்க்கரை சருமத்தை வறட்சியாக்கி, வீக்கம், சிவப்பு திட்டுகள், கொப்புளங்கள் போன்றவற்றை அதிகரிக்கும். இவை அனைத்தும் கொரோனா நோய்த்தொற்றுடன் இணைந்து அதிகரிக்க செய்யும்.
நீரிழிவு நோயாளிகள் தங்கள் சரும ஆரோக்கியத்தை கவனித்துகொள்வதிலும் கொரோனா வைரஸின் இந்த ஆரம்ப அறிகுறிகளை கவனிப்பதிலும் மிகுந்த முனைப்புடன் இருக்க வேண்டும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு கொரோனா- இந்த அறிகுறிகள் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம்! எச்சரிக்கை

**ஆக்ஸிஜன் பற்றாக்குறை..**

கொரோனா தொற்று இருப்பவர்கள் எதிர்கொள்ளகூடிய மிகப்பெரிய சிக்கல்களில் ஆக்ஸிஜன் செறிவு அளவை குறைப்பதும் ஒரு அறிகுறியாகும். நோய் எதிர்ப்பு செயல்பாட்டை அடக்கும் நீரிழிவு போன்ற அழற்சி நிலையில் சர்க்கரை நோயாளிகள் பலவீனமான ஆரோக்கியத்தை கொண்டிருப்பார்கள். இவர்கள் ஆக்ஸிஜன் பற்றாக்குறை மற்றும் அது தொடர்புடைய அறிகுறிகளால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாக ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளது. மூச்சுத்திணறல், மார்பு வலி, நுரையீரல் பிரச்சனைகள் மற்ற அறிகுறிகள் காணாமல் ஆக்ஸிஜன் அளவு விரைவாக குறையக்கூடும். ஹைபோக்ஸியா நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட கொரோனா நோயாளிகளிடம் பொதுவாக காணப்படுகிறது.

**கொரோனா நோயாளிகளுக்கு கருப்பு பூஞ்சை..**

கொரோனா பாதிப்பு அறிகுறிகளில் முகத்தின் குறைபாடு, வீக்கம், தலைவலி மற்றும் எரிச்சலை உண்டாக்கும்.

தற்போது கருப்பு பூஞ்சை தொற்று நீரிழிவு நோய் பாதிப்பு மற்றும் ஸ்டீராய்டு சிகிச்சையில் இருக்கும் கொரோனா நோயாளிகளுக்கு அதிக தொல்லை தரக்கூடியதாக உள்ளது. மருத்துவர்களின் கூற்றுப்படி நீரிழிவு போன்ற ஒரு அழற்சி நிலை நோய் எதிர்ப்பு மண்டலத்தின் செயல்பாட்டை அடக்க செய்கிறது. மேலும் இது நோய்த்தொற்றுகளின் பிடியை மேலும் அதிகரிக்க செய்யும். உயர் இரத்த சர்க்கரை அளவுகள் வைரஸை போன்றே பூஞ்சைகளை இனப்பெருக்கம் செய்வதையும் அதிகரிக்கின்றன. அதோடு ஸ்டீராய்டும் இந்த ஆபத்தை அதிகரிக்க செய்யும்.

## இஞ்சி சாப்பிடுவதன் மூலம் உடலில் ஏற்படும் அற்புத பயன்கள்!

இஞ்சியின் மேல் தோலை நீக்கி விட்டு சிறு சிறு துண்டுகளாக நறுக்கி கொண்டு இதை ஒரு கண்ணாடி பாட்டிலில் போட்டு இஞ்சி மூழ்கும்படி சுத்தமான தேனை ஊற்றி நன்றாக கிளறிவிட்டு இதை பத்து நாட்கள் சூரிய ஒளியில் வைத்து வரவேண்டும். பத்து நாட்களும் இஞ்சி தேன் கலவையை நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து முறை கிளறி விட வேண்டும். பத்து நாட்கள் கழித்து இதை சாப்பிடுவதற்கு பயன்படுத்தலாம் வெயிலில் வைக்க தேவையில்லை இதுவே இஞ்சி கற்பத்தின் செய் முறையாகும் சாப்பிட வேண்டிய முறை தினமும் அதிகாலை ஆறு மணி அளவில் இஞ்சி கற்பத்தில் இரண்டு ஸ்பூன் எடுத்து வெறும் வயிற்றில் முதல் உணவாக இதை உண்ண வேண்டும்.

**இதனால் கிடைக்கின்ற பயன்கள்..**

நோய்கள் அனைத்தும் தோன்றுவதற்கு மூல காரணமான இருக்கின்ற மலச்சிக்கல் முழுமையாக நீங்கிவிடும்

மலச்சிக்கல் நீங்கி விட்டால் இதன் மூலம் ரத்தம் சுத்தமடையும் வாதம் பித்தம் சிலேத்துமம் சமநிலையில் இருக்கும்

ரத்தம் சுத்தமாவதால் உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும் இதன் மூலம் சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் கிடைக்கும்

மேலும் வாத பித்த சிலேத்துமம் சமநிலை படுவதால் உடலில் நோய்கள் எதுவும் தோன்றாது

நோய்கள் தோன்றாமல் இருப்பதால் இதன் மூலம் இளமையும் ஆரோக்கியமும் மிக எளிதாக கிடைத்துவிடும்

மேலும் இஞ்சி கற்பத்தை சாப்பிட்டு வந்தால் வாத குணத்தின் செயல்பாடு எப்பொழுதும் சமநிலையில் இருக்கும்

வாத குணம் சமநிலையாய் இருப்பதால் வாழ்நாள் முழுவதும் கை கால் முடக்கம் எனும் வாதநோய் எப்பொழுதும் நம் உடலில் தோன்றாது

இதற்கு காரணம்

இஞ்சி கற்பத்தை சாப்பிட்டு வந்தால் ரத்த நாளங்களில் கொழுப்பு படியாது ரத்தக்குழாயில் அடைப்பு ஏற்படாது ரத்த ஓட்டத்தில் அடைப்பு ஏற்படாமல் இருப்பதால் வாத நோய் நமது உடலில் வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகின்றது

மேலும் இஞ்சி கற்பத்தை சாப்பிட்டால் மாரடைப்பு வராது பெண்களுக்கு ஏற்படும் மாதவிலக்கு வலி குணமாகும்

இஞ்சியின் முக்கிய பயன்கள்

ஒரு ஸ்பூன் இஞ்சி சாறுடன் அதே அளவு சின்ன வெங்காயச் சாற்றைக் கலந்து தினந்தோறும் காலை வேளையில் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் இளமையும் அழகும் முதுமை வரை பாதுகாக்கப்படும்.

உரித்த பூண்டு இதழ் ஆறு அதே அளவு தோல் சீவிய இஞ்சி இவை இரண்டையும் விழுதாக அரைத்து நீரில் கலந்து கொதிக்க வைத்து சிறிது பனங்கற்கண்டு சேர்த்து காலை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும் உடலுக்கு கேடு விளைவிக்கும் நோய்கள் எதுவும் உடலில் தோன்றாத வண்ணம் நம்மை காக்கும் முதுமை வரை நோயின்றி ஆரோக்கியமாய் வாழலாம்.

இஞ்சி சாறும் எலுமிச்சை சாறும் வகைக்கு ஒரு ஸ்பூன் அளவு கலந்து இதை காலை வேளையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் வயிற்றில் தோன்றும் நோய்கள் எதுவும் நமது உடலில் தோன்றாது எப்போதும் சுறுசுறுப்பாக உடலின் இயக்கங்கள் இருக்கும்.





# இலங்கையில் மலையகத் தமிழர்கள்

இலங்கையில் பிரித்தானியரின் ஆட்சியின் போது 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், தேயிலை, இறப்பர், கோப்பி முதலிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளுக்காக தமிழ்நாட்டில் இருந்து அழைத்துவரப்பட்ட மக்களை குறிக்கும். இருப்பினும் இந்த "மலையகத் தமிழர்" எனும் பதத்திற்குள் தமிழரல்லாத தெலுங்கர், மலையாளியினரும் அடங்குவர். மலையகப் பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் தமிழ்நாட்டு தமிழரே பெரும்பான்மையாக இருப்பதனால் அவர்களுடன் ஒன்றி வாழ்ந்த தெலுங்கரும் மலையாளிகளும் தமிழ் பேசுவோராக மாறிவிட்டனர்.

ஆங்கிலேயர் இவர்களை ஒரு அடிமை போன்ற நிலையில் வைத்திருந்த தனாலும், அதன் பின்னர் தொடரும் ஒடுக்குமுறைகளினாலும் இம்மக்களின் வாழ்வு இலங்கையின் ஏனைய சமுதாயத்தினருடன் ஒப்பிட முடியாத அளவில் பின் தள்ளப்பட்ட வகையிலேயே உள்ளது. இந்த பின்னடைவு, விதிவிலக்காக ஒருசிலரை தவிர, கிட்டத்தட்ட அனைவரும் இந்தியாவில் உள்ள தமது உறவுகளுடனான உறவு துண்டிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்தியாவில் தமக்கு சொந்தமாக இருந்த நிலம் மற்றும் சொத்துக்களும் இழந்தவர்களாகிப் போயினர்.

இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் குடியேற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும், அப்பிரதேசங்கள் சார்ந்து ஏனைய தொழில் நிலைகளில் உள்ளோரும், அவர் தம் வம்சாவழியினரும் "மலையகத் தமிழர்" என்றே அழைக்கப்பட்டப் போதும். இவர்கள் இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்பதால் "இந்தியத் தமிழர்"என்றும் "இந்திய வம்சாவளித் தமிழர்" எனும் பகுப்புக்குள்ளும் உள்ளடங்குவர். இலங்கையின் புள்ளிவிபர அறிக்கைகளில், அடையாள அட்டை வழங்கல் முறையில், மற்றும் ஏனைய பதிவுகளில் இந்தியத் தமிழர் எனக் குறிப் பிடப்படுவதும் நடைமுறையில் உள்ளது என்றபோதும்,"மலையகத் தமிழர்" எனும் பகுப்புக்குள் உள்ளடங்கமாட்டார்கள்

1844 ஆம் ஆண்டு முதன் முதலாக இந்தியாவிலிருந்து இலங்கையின் கோப்பி தோட்டங்களில் வேலைச் செய்வதற்காக, லுதினன் கேர்னல் என்றி சீ. பேர்ட் என்பவர் 14 பேரைச் சேர்த்துக்கொண்டார். இதுவே இந்தியாவிலிருந்து உத்தியோகப்பட்சமாக வேலையாட்கள் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பமாக இருந்தபோதும், 1840 களின் தொடக்கத்தில் கோப்பி தோட்டங்கள் நிறுவப்படும் போது தோட்டங்களுக்கு அருகில் இந்திய வேலையாட்கள் காணப்பட்டனர். மேலும் 1818 ஆண்டு மன்னார் அரச அதிபர் கூறுகையில், பெருமளவிலான இந்திய கூலியாட்கள் கொழும்பு நோக்கிச் செல்வதைக் கண்டதாக குறித்துள்ளார். இதன் படி 1844 ஆண்டுக்கு முன்னரும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வேலைத் தேடி தமிழர்கள் வந்தனர் எனலாம்.

இவர்கள் நாட்டின் மத்திய மலைப் பகுதிகளில் அமைந்திருந்த பெருந்தோட்டங்களிற் குடியேற்றப்பட்டனர். பிரித்தானிய முதலாளிகளின் கீழ் சுமார் 150 ஆண்டுகள் வரை கடுமையான சூழ்நிலைகளின் கீழ் உழைத்து இலங்கையின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களாக தேயிலை, இறப்பர் முதலியவற்றை உருவாக்கிக் கொடுத்தது இவர்களேயாவர். எனினும் 1948ல் இலங்கையிலிருந்து பிரித்தானியர் வெளியேறியதும், பல தமிழ்ப் பிரதிநிதிகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கொண்டுவரப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டத்துக்கு அமைவாக தங்களது குடியுரிமையை நிரூபிக்க முடியாமல் போனமையால் இவர்களில் மிகப்பெரும்பாலோர் இலங்கை அரசாங்கத்தால் நாடற்றவர் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் காரணமாக அவர்களது வாக்குரிமை அற்றுப்போனது.

பின்னர் இந்திய அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் பெருமளவு மலையகத் தமிழரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப இலங்கை அரசு முயற்சித்தது. இவ்வாறான ஒப்பந்தங்களில் ஒன்றான சிறீமா - சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் மேற்படி தமிழர்களில் அரைப் பகுதியினருக்கு இலங்கைப் குடியரிமை வழங்குவதெனவும், ஏனையோரை இந்தியா ஏற்றுக்கொள்வதெனவும் முடிவானது, பல காரணங்களால் இது திட்டமிட்டபடி நடைபெறாது போனது. மேலும் 1983 இல் இலங்கையில் ஏற்பட்ட பாதுகாப்பற்ற சூழ்நிலைக்காரணமாகவும் பலர் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தனர். 1979 புதிய யாப்பின் மூலம் அனைத்து இந்தியத் தமிழருக்கும் குடியரிமை கிடைத்தபோதும் பல நடைமுறை சிக்கல்களால் இவர்கள் தொடர்ந்தும் பெரும்பாலோர் நாடற்றவர்களாகவே இருக்கவேண்டியேற்பட்டது

இன்று கல்வி, பொருளாதாரம், அரசியல் என முன்னேறினாலும் 90 வீதமான மக்கள் வறுமையில் சிக்குண்டு ஏழைகளாகவே காணப்படுகிறார்கள். மாறி..மாறிவரும் அரசுகளும் அந்த மக்களின் முன்னேற்றத்துக்கு பெரிதும் உதவ வில்லை என்பது உண்மையான விடையமாகும்.!..

# கியூப புரட்சியின் தந்தையும், கியூபாவின் முன்னாள் அதிபருமான ஃபிடல் காஸ்ட்ரோவின் 96 வது பிறந்தநாள்



1-ஃபிடல் அலெஜாண்ட்ரோ காஸ்ட்ரோ ரஸ் ஆகஸ்டு 13, 1926 அன்று கியூபாவில் உள்ள பிரான் எனும் கிராமத்தில் பிறந்தார். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த முன்னாள் ராணுவ வீரரான அவரது தந்தை ஏன்ஜல் மரியா படிஸ்டா காஸ்ட்ரோ ஒய் அர்கிஸ் ஸ்பெயினில் இருந்து கியூபா குடிபெயர்ந்த ஒரு பெரு விவசாயி ஆவார்.

2- பல்லாயிரம் ஏக்கர் நிலங்களில் கரும்பு விவசாயம் செய்து வந்த ஏன்ஜல் மரியாவின் முதல் மனைவி இறந்தபின், தனது வீட்டின் பணியாளாக இருந்த கியூப பெண் லினா ரஸ் கொன்சலஸ் உடன் அவர் வாழத் தொடங்கினார்.

3- இந்த தம்பதிக்கு பிறந்த ஏழு குழந்தைகளில் முதல் குழந்தை ஃபிடல். ஏன்ஜல் மரியா மற்றும் லினா ஒரே வீட்டில் வாழ்ந்தபோதும் ஃபிடல் காஸ்ட்ரோ பிறந்தபின்தான் திருமணம் செய்து கொண்டனர். இரண்டாவதாக பிறந்த குழந்தை ராவுல் காஸ்ட்ரோ. அடுத்த ஐவரும் பெண் குழந்தைகள்.

4- பள்ளிக் காலங்களில் படிப்பைவிட விளையாட்டில் அதிக கவனம் செலுத்திய ஃபிடல் காஸ்ட்ரோ, 1940களில் ஹவானா பல்கலைகழகத்தில் படித்தபோது அரசியலில் ஈடுபடத் தொடங்கியதுடன் தனது பேச்சுத் திறனையும் வளர்த்துக்கொண்டார்.

5. பல்கலைக்கழக மாணவரான ஃபிடல் காஸ்ட்ரோ 1946இல் அப்போதைய கியூபா அதிபர் ராமோன் கராவ் சான் மார்ட்டின் அரசின் ஊழலுக்கு எதிராக நிகழ்த்திய உரை அப்போது மிகவும் பிரபலமானது.

6. 1947,ல் டோமினிக்க குடியரசின், அமெரிக்க ஆதரவு பெற்ற சர்வாதிகாரி ர.ஃபேல் டிரோஜிலோவின் அரசைக் கலைக்கும் முயற்சியில், கியூபாவில் இருந்த டோமினிக்க குடியரசு மாணவர்களுடன் கடல் வழியாகக் கிளம்பினார். இம்முயற்சி அமெரிக்க ஆதரவுடன் தடுத்து நிறுத்தப்பட்டது.

7. காஸ்ட்ரோ மிர்தா டையாஸ் பாலார்ட் திருமணம் 1948,ல் நடந்தது. இரு குடும்பங்களின் எதிர்ப்பை மீறி நடந்த காதல் திருமணம் இது.

8. அதிபர் கார்லஸ் ப்ரியோவின் அரசுக்கு எதிராக ராணுவப் புரட்சி மூலம் 1952,ல் கியூபா அதிபரானார் ஜெனரல் ஃபுல்ஜென்சியோ பாடிஸ்டா. அவரது ராணுவ சர்வாதிகாரத்துக்கு எதிராக ஜூலை 1953,ல் மான்கடாவில் இருந்த ஆயுதக் கிடங்கைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்ட காஸ்ட்ரோ உள்ளிட்ட ஏராளமானோர் கைதாகினர்.

9. காஸ்ட்ரோவுக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டாலும்,பொது மன்னிப்பு வழங்கப்பட்டு 19 மாதங்களுக்கு பிறகு மே 1955,ல் விடுதலை செய்யப்பட்டார்.

10. அதே ஆண்டு மெக்சிகோ சென்ற காஸ்ட்ரோ, அங்கு தனது வருங்கால சக போராளி மற்றும் நண்பரான எர்னஸ்டோ சே குவேராவை சந்திக்கிறார்.

11. நவம்பர் 1956,ல் ஃபிடல், ராவுல், சே உள்ளிட்ட 81 போராளிகள், 12 பேர் மட்டுமே பயணிக்க உகந்த கிரான்மா எனும் சிறிய படகில் புரட்சியில் ஈடுபட மெக்சிகோவில் இருந்து கியூபா திரும்பினர். 1959,ல் கியூப புரட்சி வெற்றிபெறும் வரை, மலைப் பகுதிகளில் பதுங்கியிருந்து இந்தக் குழு கொரில்லா போரில் ஈடுபட்டது.

12. கியூபப் புரட்சி 1959 ஜனவரியில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மனுவேல் உருசியா லியோ கியூப அதிபரானார். அவரது அரசில் ஜோஸ் மிரோ கார்தோனா பிரதமரானார். கருத்து வேறுபாடு காரணமாக அவர் ஆறு வாரங்களில் பதவி விலகியதால், காஸ்ட்ரோ 1959 பிப்ரவரி மாதம் பிரதமர் பொறுப்பேற்றார்.

13. அதே ஆண்டு ஜூலை மாதம், கருத்து வேறுபாடு காரணமாக மனுவேல் பதவி விலகியும் ஃபிடல் பிரதமராகவே தொடர்ந்தார். ஒஸ்வால்டோ டோர்டிகோ தொராடோ அப்போது புதிய அதிபரானார். ஆனால், அதிபர் பதவி, பிரதமரைவிட அதிகாரம் குறைந்த ஒரு சம்பிரதாய பதவியாகவே இருந்தது. 1976 டிசம்பரில் அரசியலமைப்பு மாற்றப்படும் வரை அவர் அதிபர் பதவியில் நீடித்தார்.


14. அதன் பின் பிரதமராக இருந்த காஸ்ட்ரோ, அதிபர் பதவியேற்றார். அப்பதவியில் பிப்ரவரி 2008 வரை காஸ்ட்ரோ நீடித்தார். காஸ்ட்ரோ கியூபாவின் பிரதமர் மற்றும் அதிபராக இருந்து ஆட்சி செய்த ஆண்டுகளில் அமெரிக்காவுக்கு 10 பேர் அதிபராக இருந்தனர்.

உலகப்புரட்சிக்கு வித்திட்ட மாபெரும் வீரனான இவர் இன்றும் உலகத்தினரால் போற்றப்படும் தலைவாகக் காணப்படுகின்றார். கியூபா மக்கள் மட்டுமல்ல விடுதலையை வேண்டிப் போராடும் மக்களின் விடிவெள்ளியாகவும் வழிகாட்டியாகவும் என்றும் பிரகாசித்துக்கொண்டே இருப்பார்!..வாழ்க அவர் நாமம்!..

# யேர்மனியில் பெண் எழுத்தளர்கள்!...



திருமதி தவமலர் கல்விராசன்



அமரர் கல்விராசன்

யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல் இதுவரை எவராலும் தயாரிக்கப்படவில்லை. ஆவணப்படுத்தப்படவில்லை என்பது துர்ரதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள், கல்விப்பணிகள், முத்தமிழ்ப் பணிகள், சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயாகும்.

எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப் பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில், ஆவணப்பதிவு ஒன்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம். ஆகவே நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். முதலாவது பதிவாக இந்த ”மண்” இதழில் யேர்மனி Gelsenkirchen நகரில் வசிக்கும். திருமதி தவமலர் கல்விராசன் அவர்களும் 2வது பதிவாக யேர்மனி - Brühl நகரில் வசிக்கும் திருமதி சர்வேஸ்வரி கதிரித்தம்பி அவர்களின் பதிவு என இரண்டுபேரின் பதிவுகள் இடம்பெறுகின்றன. தொடர்ச்சியாகப் பெண் எழுத்தாளர்களின் பதிவுகள் இடம்பெறும்

நன்றி!.. **திருமதி சாந்தினி துரையரங்கன்.**

**மின்னஞ்சல்** niruthiyam@hotmail.de

**"மண்" சஞ்சிகை** v.sivarajah@arcor.de

# யேர்மனியப் பெண் எழுத்தாளர் - 1

பெயர் திருமதி தவமலர் கல்விராஜன்
பிறந்த திகதி 19.12.1958
பிறந்த இடம் உக்குளாம்குளம் (பண்டாரிக்குளம்) வவுனியா.
தந்தை - நாகலிங்கம் தாய் - பர்வதம்
கல்வி 1.பண்டாரிக்குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை
2.வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்
3.ரம்பைக்குளம் மகளீர் மகாவித்தியாலயம்.

தொழில் ஈழத்தில் வவுனியா-நெளுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆசிரியர். (ஆரம்பப்பாடசாலை) பாடசாலைக்காலங்களில் சங்கீதம், நாடகம், வில்லுப்பாட்டு என்பவற்றில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தவர். அரசியல் கூட்ட மேடைகளில் தன் குரல் வளத்திறமையால் பாட்டுகள் பாடி மக்களை கவர்ந்தவர். சாயிபாபா பாலவிகாஷ் வகுப்புகளில் கற்பித்து வந்தவர். 1989 இல் யேர்மன் நாட்டிற்கு புலம் பெயர்ந்து திரு. கல்விராஜன் என்பவரை திருமணம் செய்து கஜன் என்ற மகனை பெற்றெடுத்தார்.

யேர்மனியில் கோ்ன (Herne)-1987களிலும், கெல்சென்கீசன் (Gelsenkirchen )- 1991 களிலும் தன் கணவருடன் சேர்ந்து தமிழ் பாடசாலைகள் நடாத்தி வந்தவர். அத்துடன் எசன் நகரில் கடந்த 32 வருடங்களாக இயங்கிவரும் தமிழ்மொழிச் சேவை பாடசாலையின் ஆசிரியராகவும் பல ஆண்டுகள் பணியாற்றிப் பாராட்டையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும். இவரது துணைவர் திரு கல்விராஜன் அவர்கள் சிறுவர்களுக்கான பாட்டு, கதைகள், நொடிகள் எனப்பல விடயங்களை உள்ளடக்கி "பாப்பா" என்ற சஞ்சிகையை கையெழுத்துப்பிரதியாகவும், அச்சுப்பிரதியாகவும் ஆரம்பகாலங்களில் வெளியிட்டிருந்தார்.

பாடல்கள், கவிதைகள், நாடகங்கள் எழுதி பிள்ளைகளுக்கு பழக்கி பல விழாக்களை நடாத்தி வந்தார். பொன்மாலைபொழுது விழாக்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.லண்டன் தமிழ் வானொலி பாமுகத்தில் பல பாடல்கள், இலக்கியங்கள்,கவிதைகள் என்பவற்றினை படைத்துக்கொண்டிருப்பவர்.இவரது 300 பாடல்கள் செல்வி கல்யாணி கமலநாதன் என்பவரால் இசையமைத்துப் பாடப்பட்டு காற்றலையில் வெளிவந்துள்ளன. "என்னையே நான் அறியேன்" என்ற நூலில் இவர் London Firstaudio வானொலியின் இலக்கிய நேரக்கதைகள் திருமதி கௌரி சிவபாலன் அவர்களால் எழுதி தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது. திருமதி தவமலர் கல்விராஜன் அவர்கள் இன்னும் பல படைப்புகளை படைத்து ஆரோக்கியமாக வாழ வேண்டும் என வாழ்த்தி மகிழ்கின்றோம்.

## யேர்மனியப் பெண் எழுத்தாளர் - 2

## திருமதி சர்வேஸ்வரி கதிரித்தம்பி.






| | |
|---|---|
| பெயர் | - செல்வி சர்வேஸ்வரி கதிரித்தம்பி |
| தற்போதைய விலாசம் | - Georg Sandmann Str -04 ,50321 Brühl |
| பிறந்த ஆண்டு | - 05.03.1950 |
| ஈழத்தில் | - இருபாலை |
| அப்பா | - கதிரித்தம்பி |
| அம்மா | - மகேஸ்வரி |
| கல்வி | - 1.இருபாலை சைவப்பிரகாச வித்தியாலம், |
| | - 2.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி |
| யேர்மனி | - 1989ம் ஆண்டு |
| எழுதிய கவிதை நூல் | - "கனவுக்கதவுகள்" |
| எழுத்துப்பணி | - பாடல், கவிதைகள் |

தனக்கென ஒரு மொழிநடையினால் மற்றவர்களை பாராட்டி, உற்சாகப்படுத்தும் ஒரு அன்பானவர்.தற்பொதும் தம் முகநூல் உறவுகளுக்கு தம் மொழிநடையால் மகிழ்வித்துக்கொண்டிருப்பவர். உங்களால் எழுத முடியும் என ஒரு சிலர் தூண்டியமையால் 2007இல் எழுத ஆரம்பித்ததாக தூண்டியவர்களுக்கு நன்றி கூறி தன் கருத்துக்களை மிகுந்த அடக்கத்துடன் வெளிப்படுத்தினார். லண்டன் தமிழ் வானொலியில் பல பாடல்கள், கவிதைகள் எழுதி வெளிப்படுத்திக்கொண்டு வருகின்றார். இவரது பாடல்களையும் செல்வி கல்யாணி கமலநாதன் அவர்கள் இசையமைத்து பாடி காற்றலையில் பரவச்செய்துகொண்டு வருகின்றார்.

2007இல் இவர் எழுதிய 47 கவிதைகளை தொகுத்து "கனவுக்கதவுகள்" என்ற தலைப்பில் கவிதைத்துளிகள் என்ற நூல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெளியிட்டார். Firstaudio-London தமிழ்வானொலி பொன்மாலைப்பொழுது -114 யேர்மனி ஹஜிலிங்கேசனில் நடைபெற்ற போது பாமுகப்பந்தில் 08.06.2013இல் இக்கவிதை நூல் அறிமுகப்படுத்தப்பட்டது.

தனது பிரதேசமக்களை ஒன்றிணைத்து பல பொன்மாலைபொழுது நிகழ்வுகளை வெளியிடங்களில் செய்துள்ளார்.யேர்மனியில் 24வருடங்கள் முதியோர் இல்லத்தில் முதியோர்களை பராமரித்து வரும் பணியில் ஈடுபட்டவர். இவர் இன்னும் பல காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மென்மேலும் பல இலக்கியப் படைப்புக்களை தரவேண்டும் என அன்பாக வேண்டி, வாழ்த்துகின்றோம். வாழ்க பல்லாண்டு.

**(யேர்மனி வாழ் பெண் எழுத்தாளர்களின் விபரத்திரட்டு அடுத்த இதழில் தொடரும்)**

---

## வணக்கம் அன்பான யேர்மன் பெண் எழுத்தாளர்களே!

உங்கள் பற்றிய பதிவுகளை ஒரு புத்தக ஆவணமாக்க முயற்சி மேற்கொள்கின்றோம். அதற்கு உங்கள் ஒத்துழைப்புக்களை வேண்டிநிற்கின்றோம். கீழ்வரும் விடயங்களுக்கு ஏற்ப உங்கள் பற்றிய தரவுகளை தந்துதவுங்கள்.

1. பிறப்பு:- (காலம், ஊர், பெற்றோர்)
2. கல்வி:- பாடசாலை, பல்கலைகழகம்
3. பணி - ஈழத்தில் , புலத்தில்
4. வாழ்க்கை குறிப்பு:- குடும்பம்
5. எழுத்துத்துறை சார்ந்த படைப்புக்கள்.
6. சமூக, சமய, கல்வி போன்ற பொதுப்பணிகள்

இது உங்களைப் பற்றிய ஒரு பதிவு என்பதால் வேறுவிடயங்களை இணைக்க விரும்பினால் அறியத்தாருங்கள்.
உங்களுடைய சிறிய படம், நீங்கள் எழுதிய புத்தகங்களின் முன், பின் அட்டைப்படங்களையும் அனுப்பி வையுங்கள்.

நன்றி!..வணக்கம்!..
இப்படிக்கு,
அன்புடன் உங்கள்
**சாந்தினி துரையரங்கன்**. niruthiyam@hotmail.de




**நினைவுதினம் - 19.07.1947**

-கொங்கா ஸ்ரான்லி-

விபுலானந்த அடிகள் (29.03.1892) மட்டக்களப்பிலுள்ள காரைதீவிலே,பிறந்தார்.அவரது தாயார் கண்ணம்மா,தந்தையார் சாமித்தம்பி. அவருடைய இயற்பெயர் மயில்வாகனன். இவர் இளமையிலேயே தமிழ்,வடமொழி,ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார்.

தமிழீழம் தோற்றுவித்த சான்றோருள் ஈடிணையற்ற பேரறிஞர். இவர் ஈழத்தவராயினும் தமிழுலகம் கண்ட பேரறிஞர்.உலகம் போற்றும் முத்தமிழ் வித்தகராகவும் புகழ் பெற்றவர்.இவர் உயர் கல்வி கற்று ஆசிரியராகப் பணி புரிந்தார். பின் கொழும்பில் ஆசிரியர் பயிற்சி பெற்று,பயிற்றப்பட்ட ஆசிரியரானார். இவர் தனது 25 வது அகவையில் அறிவியல் ஆசிரியராகப் பணி புரியும் பொழுது. இலண்டன் பல்கலைக் கழக அறிவியற் பட்டமும் பெற்றார்.ஆயிரத்து தொளாயிரத்து இருபதாம் (1920) ஆண்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முதல்வராக அளப்பரிய தொண்டாற்றினார்..

இளமையில் அவரது மனம் துறவை நாடியதால் தனது முப்பத்திரண்டாவது அகவையில் துறவறம் மேற்கொண்டார்.அன்று முதல் அவரது பெயர் விபுலாந்த அடிகள் என்று வழங்கலாயிற்று. அடிகளான பின்பு துறவறத்தின்பால் கொண்ட ஆர்வம் இறைநெறித் தத்துவங்களைக் கற்றார்.அத்துடன் இறைநெறியையும், தமிழ்மொழியையும் வளர்க்கப் பள்ளிகளை அமைத்தார். ஏழை,எளிய மாணவர் படிப்பதற்கு பள்ளிகள் அமைத்தது மட்டுமல்ல அவர்கள் தங்க இடமும் கொடுத்து உணவும் கொடுத்து அவர்களுக்கு கல்வி கற்பித்தார்.

அவர் மேலும் இறைநெறி,மொழி,தமிழிசை,கீழைத்தேய,மேலைத் தேய நாடகங்கள்.அத்துடன் பழந்தமிழ் நூல்கள் எல்லாம் தேடித்தேடி ஆராய்ந்தார். அந்த ஆய்வுகளின் பயனாக ஆங்கிலவாணி,மதங்க சூலாமணி, யாழ் நூல் முதலிய நூல்களை எழுதினார்.அடிகள் தமிழுக்கு செய்த தொண்டுகள் யாவற்றிலும் சாலச் சிறந்ததும் காலத்தால் அழியாததும் அவர் எழுதிய யாழ்நூலாகும்.

இந்த யாழ் நூலை எழுதுவதற்கு அடிகளாரின் ஆழ்ந்த தமிழ் அறிவும், பன்மொழி அறிவும், முறையான ,இசை அறிவுமே உதவியது.,இவர் யாழின் நரம்பின் கணக்கை கண்டறிந்து அதைத் திரும்ப அமைப்பதற்கு வேண்டிய குறிப்புகளையும் யாழ் நூலில் எழுதியுள்ளார்.,இந்நூல் தமிழருக்கு கிடைத்த அரும் பெரும் செல்வமாகும். ஆனாலும் அவர் கஷ்டப்பட்டு கண்டு பிடித்த ,இந்தக் குறிப்புகளை யாரும் பெரிதாக எம்மவர் பயன் படுத்துவதாக தெரியவில்லை. அதைப் பற்றி பேசுபவர்களும் பெரிதாக கேள்விப்படவில்லை. ,இது எனது தனிப்பட்ட கருத்து.

அடிகளாரின் கல்வித்திறனும் அறிவுத் தெளிவும்,யாழ் நூலகமே அவரது புகழுக்கு காரணம்.அத்துடன் அவர் ஆற்றிய ஆசிரியர் பணி,சமூகப் பணி அவருக்கு மேலும் புகழைத் தந்தது.,இன்னும் பெருமை தமிழருக்கு யாதெனில் விபுலானந்த அடிகள் தன் பேரறிவால் தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் முதலாவது தமிழ்ப் பேராசிரியர் ஆனார்.,இது ஈழத்தமிழருக்குக் கிடைத்த பெரும் கொடை. ,இப்பொழுது ஆயிரம் பேராசிரியர்கள் ,இருக்கின்றார்கள். ஆனால் முதன் முதல் ஒரு ஈழத் தமிழன் பேராசிரியராக ,இருந்தது தமிழுக்கு சிறப்பு.

அவர் தன்னுடைய ,இறுதி மூச்சுவரை ,இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணி புரிந்தார். காரைதீவிலுள்ள சாரதா வித்தியாலயம்,திருகோணமலையில் உள்ள ,இந்துக் கல்லூரி போன்ற பள்ளிகளை நிறுவினார். அவை ,இன்னும் அவருடைய பெயரை அடையாளப் படுத்துகின்றன.

அவர் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் யூலை மாதம் பத்தொன்பதாம் நாள் (19.97.1947) ,இயற்கை எய்தினார்.அவரது நினைவாக் அவரது பெயரில் மட்டக்களப்பில் ஒரு பாடசாலை கட்டப்பட்டது.அவர் எழுதிய பாவில் எல்லோருக்கும் பிடித்தமான பா.ஈசன் உவக்கும் ,இன் மலர் மூன்று என்ற பா.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியினைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்த்த தாமரையோ கழுநீர் மலர்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது.

பாட்டாளி சேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாடமுறா தவர்க்கு வாய்த்த மலரெதுவோ
பாட்டாளிசேர் கொன்றையல்ல பாரிலில்லாப் பூவுமல்ல.
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்வது.

என்ற அருமையான பாடல் எல்லோர் மனங்களையும் கவர்ந்தது.தமிழ் மகனான விபுலானந்த அடிகளாரை நாம் பெற்றமை எமக்கு பெருமையே.இவர் இயற்கை எய்திய இந் நாட்களில் அவரை நினைவு கூறுவோம். அழியாத அவர் புகழ் பாடுவோம். (பி.கு.உதவி :-பாடசாலை புத்தகம்)

---

## ஈழமும் தமிழும்...........

1-

17ஆம் நூறற்ாண்டிலே ஐரோப்பா தேசத்தில் தமிழ் எழுத்துக்கள்உருவாக்கப்பட்டு அத்தேசத்தில் தமிழ் அச்சேறியுள்ளது. ஐரோப்பாவில் தமிழ் அச்சு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் ஈழத்தில் பணிபுரிந்தபிலிப்பஸ் பல்தேயுஸ் (Philippus Baldaeus) என்பவராவார். இத்தகவல் பற்றிய விபரத்தை கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் தமது யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2-

வில்லியம் நெவினஸ் , 1850ஆம் ஆண்டு நியாய இலக்கணம் (Elements of Logic) என்னும் தமிழ் நூலினை எழுதியுள்ளார். தமிழிலும் ஆங்கிலத்திலுமுள்ள நியாய நெறிகளின் அரிய விதிகளை இந்நூலிலே தொகுத்து விளக்கியுள்ளார். யாழ்ப்பாணத்தில் சங்குவேலி கிராமத்தில் 1820ஆம் ஆண்டு பிறந்த வில்லியம் நெவின்ஸின் இயற்பெயர் முத்துக்குமாரர் சிதம்பரப்பிள்ளை என்பதாகும்.

3-

கி.பி. 1800களில் கிழக்கிலங்கையில் சின்ன ஆலிம் அப்பா என்கிற புலவர் வரகவியாக திகழ்ந்துள்ளார். இவருடைய இயற்பெயர், மீரா லெவ்வை ஆலிம் எனத் தெரியவருகின்றது. இவர், ஞானரை வென்றான் என்கிற இஸ்லாமிய ஞான நூலொன்றினை விருத்தப் பாவினால் இயற்றியுள்ளார். ஞானரை வென்றான் நூலினது சிதைந்த ஏட்டுப் பிரதியொன்றை மூலமாகக்கொண்டு அச்சுவாகனம் ஏற்றியவர் ஆ ஷரிபுதீன்புலவர்ஆவர்

# யேர்மனியில் மழைவெள்ளப் பேரழிவு!..

ஜேர்மனியில் கடந்த 14.07.2021 புதன்கிழமை முதல் மூன்றுநாட்கள் பெய்த கனமழை காரணமாக, திமீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் ஜேர்மனியின் அண்டை நாடுகளான பெல்ஜியம், நெதர்லாந்து, சுவீஸ் உள்ளிட்ட நாடுகளும் இந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. திமீர் வெள்ளம் காரணமாக, வீடுகள், அடுக்குமாடி கட்டடங்கள், பாலங்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதால், ஏராளமான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

20.7.21 வரை கிடைத்துள்ள தகவலின் 180 பேர் உயிரிழந்திருப்பதாகவும், 1300 பேரின் நிலை என்னவென்றே தெரிவில்லை என கூறப்பட்டுள்ளது. மேலும் மீட்பு பணி தொடர்ந்து நடைபெற்று வருவதால், மண்ணுக்குள் மக்கள் இன்னும் சிக்கியிருக்கலாம் என்பதால், பலி எண்ணிக்கை உயர வாய்ப்பிருப்பதாக தகவல்கள் தெரிவித்தன. குறிப்பாக, இந்த வெள்ளப் பெருக்கு காரணமாக, ஜேர்மனியில் இருக்கும் Rhineland- மாநிலத்தில் சுமார் 110 பேர் உயிரிழந்துள்ளனர். நாட்டில் அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலமாக கருதப்படும் North Rhine-Westphalia- மாநிலத்தில் 47 தீயணைப்பு வீரர்கள் உயிரிழந்துள்ளனர். மழை வெள்ளம் ஓரிடத்திற்கு வந்துசேர்ந்து நிரம்பியதால் தண்ணீர் தங்கி நின்ற பகுதிகளில் அணைக்கட்டுகள் உடைப்பெடுக்கலாம் என்று அஞ்சியும், மண்சரிவு அபாயமும் நிகழும் என பெருந்தொகையான மக்கள் பயத்தால் இடம்பெயர்ந்துள்ளனர்.

மக்கள் உயிர் பயத்தில் வெளியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ள பேரழிவுகரமான பகுதிகளில் பொலிசார் ரோந்து பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். பெருவெள்ளப் பேரழிவால் ஜேர்மனி தத்தளிக்கும் நிலையில், கைவிடப்பட்ட கடைகள் மற்றும் வீடுகள் கொள்ளையடிக்கப்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.North Rhine-Westphalia மாகாணத்தின் Stolberg பகுதியில் பல்வேறு கொள்ளை சம்பவங்கள் நடந்துள்ளதாக கூறப்படுகிறது. வீடு புகுந்து உடைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களை கொள்ளையிட்டு செல்வதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனிடையே, நகைக்கடை ஒன்றில் கொள்ளையிட்டதாக கூறி பொலிசார் ஒருவரை கைது செய்துள்ளனர். Stolberg பகுதியில் மட்டும் தற்போது நூற்றுக்கணக்கான பொலிசார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, கொள்ளை சம்பவங்களை தடுக்கும் நோக்கில் பெல்ஜியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரவு நேர ஊரடங்கு அறிவித்துள்ளனர். பெல்ஜியமில் இதுவரை 27 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாறு காணாத வெள்ளத்திற்கு ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியத்தில் மட்டும் இதுவரை 180 பேர் மரணமடைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 1,300கும் மேற்பட்டவர்கள் மாயமாகியுள்ளனர். மேலும் அணைகள் உடையலாம் என்ற பீதியும் ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுப் பேரழிவை சந்தித்த இரு மாகாணங்களிலும் மழை விட்டாலும் வெள்ளம் வழிந்தோடுகின்றன. பெருந்தொகை வீடுகள், கட்டிடங்கள், கடைகள் இடியுண்டு அழிந்துள்ளன. வாகனங்கள் சேற்றில் புதையுண்டுள்ளன. அவற்றைத் துப்பரவுசெய்தல், மீட்டெடுத்தல், மக்களைப் பாதுகாப்பாக இன்னோர் இடத்தில் வைத்து உணவு, உடை, சுகாதாரம், கல்வி, சிறுவர்முதியோர் நலன்களில்அரசும் பொதுமக்களும் பேருதவி புரிந்து வருகிறார்கள்.

எப்படியாயினும் மீள் வாழ்வுக்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லும் என்பது நிஜமாகும்.தற்போது கிழக்கு ஐரோப்பா நாடுகளில் கடும் மழை பெய்வதால் அங்குள்ள குளங்கள், ஆறுகள் நிரம்பி வழிந்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் அந்த நாடுகளிலிருந்து ஜேர்மனிக்குள் தண்ணீர் பெருக்கெடுத்து வருவதால்ஜேர்மனியின் நிலப்பரப்பில் பெரிய மாகாணமான பவேரியா என்று அழைக்கப்படும் பயான் (Bayern) மாநிலத்திலும வெள்ள அபாயம் ஏற்பட்டிருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவித்துள்ளன.கிழக்கு ஐரோப்பி நாடுகளில் இடைவிடாது மழை வெள்ளம் ஏற்படுமாயின்ஜேர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், சுவீஸ் நாடுகளில் வெள்ள அபாயம் மேலும் ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

## கொரோனாத்தகவல்கள்!..

1-கொரோனா வைரசுக்கு கோவிட்-19 என்று பெயரிட்ட அமைப்பின் பெயர்..
உலக சுகாதரா தாபனம் (WHO)

2-கொரோனா காரணமாக உலகில் சுமார் 4 மில்லியன் குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள் பாடசாலை செல்லமுடியாமல் வாழ்கிறார்கள் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

3-உலக கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அறிவித்ததைவிட மூன்று மடங்கு அதிகமாக இருக்கும் என உலக சுகாதார தாபன அறிக்கை தெரிவித்துள்ளது.

4-உலக கொரோனா தொற்றுப்பரவலைத் தடுக்க 100 கோடி தடுப்பு ஊசிகளை வறிய நாடுகளுக்கு வழங்க ஜி-7 உச்சிமாநாட்டுத் தலைவர்கள் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

5-கொரோனா தாக்கத்தால் இந்தியாவில் 1 கோடிபேர் வேலை இழந்துள்ளனர்.
அமெரிக்காவில் 43.000 குழந்தைகள் பெற்றோரை இழந்துள்ளனர்.
சீனாவில் 31.5.21வரை 68 கோடி பேருக்குத் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.
இந்தியாவில் 1வது அலையில் 736, 2வது அலையில் 594 மருத்துவர்கள் இறந்துள்ளனர்.

# உலகச் செய்திகள் சில...

-சீனாவின் சனத்தொகை 140 கோடியாக உயர்ந்துள்ளது. இவ்வளவுகாலமும் 2 பிள்ளைகள்தான் பெற்றுக்கொள்ளலாம் என்ற சட்டம் நீக்கப்பட்டு 3 பிள்ளைகள் பெற்றுக் கொள்ளலாம் என அரசு அறிவித்துள்ளது.
-பாக்கிஸ்தானில் குண்டுவெடிப்பு 90 பள்ளிமாணவர்கள் பலி. 150 பேர்வரை காயம்.
-பலஸ்தீனம் - இஸ்ரேல் மே மாதம் இடம்பெற்ற மோதல்களில் 65 குழந்தைகள் உட்பட 215 பலஸ்தீனர்கள் இறப்பு. 1லட்சம்பேர் இடம்பெயர்வு.450 கட்டிடங்கள் சேதம்
-ஆபிரிக்க நாடான மடகஸ்காரில் பசி, பட்டினி, வறட்சி 10.லட்சம் மக்கள் பாதிப்பு.
-மியன்மாரின் தொடரும் இராணுவ ஆச்சி அடக்குமுறையால் இதுவரை 1.200 பேர் பலி. இராணுவ அரசால் 1.25.000 ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.. 35 லட்சம் பேர் பசி, பட்டினியை எதிர்கொண்டிருக்கிறார்கள் எனத் தெரியவந்துள்ளது
-பாக்கிஸ்தானில் கடந்த 6 ஆண்டுகளில சுமார் 22.000 பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.
-மொறோக்கா - துனிசியா-ஐரோப்பா கடல்வழி கப்பல் பயணத்தில் 57 அகதிகள் பலி.
-ஆண்டுதோறும் சுமார் 13லட்சம் பேர் வீதிவிபத்துக்களில் இறக்கிறார்கள்.
-உலகில் சுமார் 300 கோடி மக்கள் தங்கள் வீடுகளில் கை கழுவவே தண்ணீர் இல்லாமல் இன்னலுறுகிறார்கள் என உலக சுகாதார தாபன அறிக்கை கூறியுள்ளது.
-காற்று மாசுபடுவதால் உலகில் வருடாவருடம் சுமார் 70 லட்சம் பேர் உயிரிழக்கிறார்கள்.
-இந்தியாவில் 18 -35 வயதினர் தொகையில் உலகில் 1வது இடத்தைப் பிடித்துள்ளது.
-உலகிலுள்ள 5 வயதிற்குட்பட்ட சிறுவர்களில் 4.7 கோடி குழந்தைகள் இருக்க வேண்டிய உயரத்தைவிடக் குறைவான உயரத்தை உடையவர்களாகவும் 3.85 கோடி குழந்தைகள் அதீத எடை கொண்டவர்களாகவும் காணப்படுகிறார்கள் என ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் அறிவித்துள்ளது
-உலக பருவகால மாற்றத்தால் பாதிக்கப்படும் நாடுகளுக்கு 10.000 கோடி டொலர்களை வழங்க ஜி-7 நாடுகளின் தலைவர்கள் முடிவுசெய்துள்ளனர்.
-ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளராக மீண்டும் அன்டோனியோ கட்டெரஸ் தெரிவாகியுள்ளார். இவரின் பதவிக்காலம் 31.12.2026 வரையாகும்
-1970 - 2020 ஆண்டு சுமார் 50 ஆண்டுகளில் இந்தியாவில் 117 புயல்கள் தாக்கி 1.41.000 பேர் இறந்திருக்கிறார்கள் என புள்ளிவிபரதிணைக்களம் அறிவித்தது.
-சிரியாவில் கடந்த 10 வருடங்களாக உள்நாட்டு யுத்தம் தொடரும் வேளையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. 95 வீத வாக்குகளைப் பெற்று மீண்டும் அஸாட் வெற்றிபெற்றார்.
-120 இடங்களில் 87 இடங்களைப் பெற்று இஸ்ரேல்நாட்டின் புதிய பிரதமராக ஈஸாக் கோர் ஷோக் என்பவர் தெரிவானார். நெத்தியன்கோவின் 12 ஆண்டுகள் ஆட்சி முடிவுக்கு வந்தது.
-கொங்கொங் நாட்டு மலை ஏறும் வீரர் 44வயது - தஸாங் யின் என்பவர். கடந்த 23.5.2021ல் உலகின் உயரமான (29.031 அடி) மலையான எவெரெஸ்டை 25 மணி 50 நிமிடங்களில் ஏறிப் புதிய சாதனை படைத்துள்ளார்..




# ஐரோப்பா வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி 2020 - 2021

UEAF European Champion ship - 2021

(Union of European Football Associations)

24 ஐரோப்பிய நாடுகள் பங்குகொண்ட போட்டி முதன்முறையாக 11 நாடுகளில் நடைபெற்றது 11.06.2021 வெள்ளிக்கிழமை குதூகலமாக ஆரம்பித்து 11.07.2021 அன்று லண்டனில் முடிவடைந்தது. முதல் போட்டி துருக்கி எதிர் இத்தாலி மோதுகின.. நான்கு ஆண்டுகளுக்கு ஒருதடவை நடைபெறும் ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டியானது 1960ம் ஆண்டு ஆரம்பித்து 16 தடவையாக இந்த வருடம் நடைபெற்றது. ஒரு குழுவில் 4 நாடுகள் என 6 குழுக்களாக மொத்தம் 24 நாடுகள் பங்குகொண்டன.
.

இப்போட்டியானது 2020ம் ஆண்டு நடைபெறவேண்டிய போட்டியாகும். உலகை அச்சுறுத்தி உயிர்ப்பலி எடுத்துவரும் கோரோனா-கோவிட்-19 நுண்கிருமித் தாக்கத்தால் 2020ல் நடைபெறவில்லை. அப்போட்டிதான் 11.06.2011 ஆரம்பமாகி நடைபெற்றது. 24 நாடுகள் பங்குகொள்ளும் இப்போட்டியில் மொத்தம் 51 போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியானது இந்தவருடம் சற்று வித்தியாசமான முறையில் 11 நாடுகளில் நடைபெற்றது. நடைபெற்ற நாடுகள்...

1)அஸர்பச்ஸான் 2)டென்மார்க் 3)இங்கிலாந்து 4)யேர்மனி 5)கங்கேரி 6)நெதர்லாந்து 7)இத்தாலி 8)ரஷ்ஷியா 9)ஸ்கொட்லாந்து10)ஸ்பெயின் 11)ருமேனியா
-இறுதிப்போட்டி இங்கிலாந்து - விம்பிளி விளையாட்டரங்கில் 11.07.2021 அன்று நடைபெற்றது. இந்த அரங்குதான் அதிகூடிய பார்வையாளர்ககளைக் கொண்டுள்ளது.

**அரங்குகளையும் பார்வையாளர் தொகையையும் பார்ப்போம்...**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-London | - 90.000 | 2-Rome | - 70.634 | 3-Münich | - 70.000 |
| 4-Baku | - 68.700 | 5-Sant Petersburg | -68.134 | 6-Budapest | - 67.215 |
| 7-Seville | - 60.000 | 8-Bucharest | - 55.600 | 9-Amsterdam | - 54.990 |
| 10-Glasgow | - 51.866 | 11-Copenhagen | - 38.065 | | |

**-வெற்றி பெற்ற நாட்டு அணிக்கு பரிசுப்பணமாக 10 மில்லியன் யூரோ கிடைத்தது..**

| | | | | |
|---|---|---|---|---|
| 1வது | வெற்றிஅணி - 10 மில்.யூரோ | 2வது | வெற்றிஅணி | - 07 மில்.யூரோ |
| 3வது | ” - 05 ” | 4வது | ” | - 03.2 ” |
| 5 - 16 | ” - 02 ” | 17 - 24 | ” | - 01.5 ” |

**-ஐரோப்பாக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாகப் பங்குபற்றிய நாடுகள் வரிசையில்.**

| | | | |
|---|---|---|---|
| 1-யேர்மனி | 14 தடவைகள் | 6-பிரான்ஸ் | -11 தடவைகள் |
| 2-ரஷ்ஷியா | 13 ” | 7-இங்கிலாந்து | -11 ” |
| 3-ஸ்பெயின் | 12 ” | 8-செக்குடியரசு | -11 ” |
| 4-இத்தாலி | 11 ” | 9-உக்ரைன் | -10 ” |
| 5-நெதர்லாந்து | 11 ” | 10-டென்மார்க் | -10 ” |

**-ஐரோப்பாகிண்ண வரலாற்றில் வெற்றிபெற்ற நாடுகள் விபரம்..**

| ஆண்டு-நடைபெற்றநாடு- | வெற்றி - | 2வது | -கோல் |
|---|---|---|---|
| 1960- பிரான்ஸ் | -ரஷ்ஷியா - | -யூகோஸ்லாவியா | -2 - 1 |
| 1964- ஸ்பெயின் | -ஸ்பெயின் | -ரஷ்ஷியா | -2 - 1 |
| 1968- இத்தாலி | -இத்தாலி | -யூகோஸ்லாவியா | -2 - 0 |
| 1972- பெல்ஜியம் | -யேர்மனி | -ரஷ்ஷியா | -3 - 0 |
| 1976- யூகோஸ்லாவியா | -செக்கோஸ்லாவியா | -யேர்மனி | -5 - 3 |
| 1980- இத்தாலி | -யேர்மனி | -பெல்ஜியம் | -2 - 1 |
| 1984- பிரான்ஸ் | -பிரான்ஸ் | -ஸ்பெயின் | -2 - 0 |
| 1988- யேர்மனி | -நெதர்லாந்து | -ரஷ்ஷியா | -2 - 0 |
| 1992- சுவீடன் | -டென்மார்க் | -யேர்மனி | -2 - 0 |
| 1996- இங்கிலாந்து | -யேர்மனி | -செக்குடியரசு | -2 - 1 |
| 2000- பெல்ஜியம் நெதர்லாந்து | -பிரான்ஸ் | -இத்தாலி | -2 - 1 |
| 2004- போத்துக்கல் | -கிறீஸ்லாந்து | -போத்துக்கல் | -1 - 0 |
| 2008- ஒஸ்திரியா சுவீஸ்லாந்து | -ஸ்பெயின் | -யேர்மனி | -1 - 0<br>-1 - 0 |
| 2012-போத்துக்கல் உக்ரைன் | -ஸ்பெயின் | -இத்தாலி | -4 - 0 |
| 2016- பிரான்ஸ் | -போத்துகல் | -பிரான்ஸ் | -1 - 0 |

2020-2021 (11) பதினொரு நாடுகளில் நடைபெற்றது

-அடுத்த ஐரோப்பாக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2024 கோடைகாலத்தில் யேர்மனியில் நடைபெறும்.

-உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் 21.11.2022 தொடக்கம்18.12.2022வரை மத்திய கிழக்கு நாடான கட்டாரில் நடைபெறும். இதில் உலகளாவிய 32 நாடுகள் பங்குகொள்கின்றன.

**ஐரோப்பாக்கிண்ண வரலாற்றில் ஆகக்கூடுதலாக வெற்றிபெற்ற நாடுகள்..**

| | | | |
|---|---|---|---|
| யேர்மனி | 3 | தடவைகள் | 1972, 1980, 1996 |
| ஸ்பெயின் | 3 | ” | 1964, 2008, 2012 |
| பிரான்ஸ் | 2 | ” | 1984, 2000 |

போத்துக்கல்-2016 கிறீஸ்லாந்து-2004 டென்மார்க்-1992 நெதர்லாந்து-1988 செக்கோஸ்லாவியா-1976 இத்தாலி-1968 சோவித்யூனியன்-1960 என ஒவ்வொரு தடவையும் வெற்றி பெற்றிருக்கின்றன.

---

போட்டிமுடிவுகள்.. 11.06.2021 - 23.06.2021

குறூப் தெரிவுப் போட்டிகள்..

பிரிவு-A

| | |
|---|---|
| 1-இத்தாலி - துருக்கி | 3 - 0 |
| 2-வேல்ஸ் - சுவீஸ்லாந்து | 1 - 1 |
| 3-துருக்கி - வேல்ஸ் | 0 - 2 |
| 4-இத்தாலி - சுவீஸ்லாந்து | 3 - 0 |
| 5-சுவீஸ்லாந்து - துருக்கி | 3 - 1 |
| 6-இத்தாலி - வேல்ஸ் | 1 - 0 |

பிரிவு-B

| | |
|---|---|
| 7-டென்மார்க் - பின்லாந்து | 0 - 1 |
| 8-ரஷ்ஷியா - பெல்ஜியம் | 0 - 3 |
| 9-ரஷ்ஷியா - பின்லாந்து | 1 - 0 |
| 10-டென்மார்க் - பெல்ஜியம் | 1 - 2 |
| 11-டென்மார்க் - ரஷ்ஷியா | 4 - 1 |
| 12-பின்லாந்து - பெல்ஜியம் | 0 - 2 |

பிரிவு-C

| | |
|---|---|
| 13-ஒஸ்திரியா -மஸடோனியா | 3 - 1 |
| 14-நெதர்லாந்து - உக்ரைன் | 3 - 2 |
| 15-உக்ரைன் - மஸடோனியா | 2 - 1 |
| 16-நெதர்லாந்து - ஒஸ்திரியா | 2 - 0 |
| 17-நெதர்லாந்து-மஸடோனியா | 3 - 0 |
| 18-உக்ரைன் - ஒஸ்திரியா | 0 - 1 |

பிரிவு - D

| | |
|---|---|
| 19-இங்கிலாந்து-குறோசியா | 1 - 0 |
| 20-ஸ்கொட்லாந்து-செக்குடியரசு | 0 - 2 |
| 21-குறோசியா - செக்குடியரசு | 1 - 1 |
| 22-இங்கிலாந்து-ஸ்கொட்லாந்து | 0 - 0 |
| 23-இங்கிலாந்து -செக்குடியரசு | 1 - 0 |
| 24-ஸ்கொட்லாந்து -குறோசியா | 1 - 3 |

பிரிவு - E

| | |
|---|---|
| 25-போலந்து-ஸ்லோவாக்கியா | 1 - 2 |
| 26-ஸ்பெயின் - சுவீடன் | 0 - 0 |
| 27-சுவீடன் - ஸ்லோவாக்கியா | 1 - 1 |
| 28-ஸ்பெயின் - போலந்து | 1 - 1 |
| 29-ஸ்பெயின்-ஸ்லோவாக்கியா | 5 - 0 |
| 30-சுவீடன் - போலந்து | 3 - 2 |

பிரிவு - F

| | |
|---|---|
| 31-கங்கேரி - போத்துக்கல் | 0 - 3 |
| 32-யேர்மனி - பிரான்ஸ் | 0 - 1 |
| 33-கங்கேரி - பிரான்ஸ் | 1 - 1 |
| 34-யேர்மனி - போத்துக்கல் | 4 - 2 |
| 35-யேர்மனி - கங்கேரி | 2 - 2 |
| 36-போத்துக்கல் - பிரான்ஸ் | 2 - 2 |

16 வது சுற்றுத்தெரிவுப் போட்டி - **Achtel Finale - (Round of 16)**

(26.6.2021 - 29.6.2021)

37-வேல்ஸ் - டென்மார்க் - 0 - 4
38-இத்தாலி - ஒஸ்திரியா -2 - 1
39-நெதர்லாந்து-செக்குடியரசு- 0 - 2
40-பெல்ஜியம்- போத்துக்கல்-1 - 0
41-குரோசியா- ஸ்பெயின் - 3 - 5
42-பிரான்ஸ் -சுவீஸ்லாந்து -7 - 8
43-இங்கிலாந்து -யேர்மனி - 2 - 0
44-சுவீடன் - உக்ரைன் - 1 - 2

கால் இறுதிப்போட்டி - **Viertel Finale - (Quarter Finals)**

(2.07.2021 - 3.07.2021)

45-சுவீஸ்லாந்து - ஸ்பெயின் - 2 - 4
46-பெல்ஜியம் - இத்தாலி- 1 - 2
47-செக்குடியரசு - டென்மார்க் - 1 - 2
48-உக்ரைன் -இங்கிலாந்து 0 - 4

அரை இறுதிப்போட்டி - **Halb Finale - (Semi Finals)**

(6.07.2021 - 7.07.2021)

49-ஸ்பெயின் - இத்தாலி - 2 - 4
50-டென்மார்க் - இங்கிலாந்து 1 - 2

இறுதிப்போட்டி - **Finale - Final**

(11.07.2021)

51- இத்தாலி - இங்கிலாந்து - 3 - 2

2021 வெற்றிபெற்ற நாடு - இத்தாலி

**இத்தாலி உதைபந்தாட்ட அணி...**

உலகில் தலைசிறந்த உதைபந்தாட்ட அணிகளில் இத்தாலி நாட்டு அணி பிரபலம்மிக்கதாகும்.

-40 வருடகால ஐரோப்பா வெற்றிக் கிண்ண வரலாற்றில் 16 தடவைகள் இப்போட்டி நடைபெற்றது. தற்போது இரண்டாவது தடவையாக இந்தநாடு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றது. 1968 முதல்தடவை. தற்போது 2021ல் இரண்டாவது தடவை.

-உலக வெற்றிக் கிண்ணத்தை 4 தடவைகள் பெற்றது.

(1934, 1938, 1982, 2006)

-ஐரோப்பா வெற்றிக் கிண்ணத்தை 2 தடவைகள் பெற்றது.

(1968, 2021)

(52 ஆண்டுகளின் பின்பு 2021ல் வெற்றி பெற்றுள்ளது.

-முதலாவது சர்வதேச வெற்றி 1918 இத்தாலி - பிரான்ஸ் - 6 - 2

-மிகப்பெரும் சர்வதேச வெற்றி 1948 இத்தாலி - அமெரிக்கா - 9 - 0

-மிகப்பெரிய சர்வதேச தோல்வி 1924 இத்தாலி - கங்கேரி - 1 - 7

# 32வது சர்வதேச ஒலிம்பிக்போட்டிகள் -2021 -யப்பான்

## Intenational Oliympics Game - 2020/2021-Tokyo - Japan




வரலாற்றுப்புகழ்மிக்க ஒலிம்பிக் போட்டிகள் 4 வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுவது வழக்கமாகும். அதன்படி சென்றவரும் 2020 ம் ஆண்டு நடைபெறவேண்டிய போட்டிகள், உலக கொரோனா தொற்றின் தாக்கத்தால் ரத்துச் செய்யப்பட்டு இவ்வருடம் 2021 கோடைகாலத்தில் 23 யூலை ஆரம்பமாகி 08.08.2021 அன்று முடிவடையவுள்ளது.

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படும்இப்போட்டியானது மாறி..மாறி ஒவ்வொரு கண்டத்திலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தாலும் ஆபிரிக்காக் கண்டத்தில் இன்னும் நடைபெறவில்லை என்பது வரலாறாகும். இந்த வருடம் ஆசியாக்கண்டத்தில் நடைபெறுவதால் அடுத்த 2024 ஒலிம்பிக் ஐரோப்பாக கண்டத்திலுள்ள பிரான்ஸ் - பாரிஸ் நகரில் நடைபெறவுள்ளது. இனி யப்பான் நாட்டைப்பற்றியும் சிறிது பார்ப்போம். ஆசியாவில் பணக்கார நாடு. தலைநகர் டோக்கியோ. பரப்பளவு 3.77.975 ச.கி.மீ, 127 மில்லியன் சனத்தொகை (12கோடி 70 லட்சம்) பணப்பெறுமதி 100 Yen =0.76 யூரோ.அரசதலைவர் Yoshishide Sugu

மன்னராட்சிக்குட்பட்டிருந்த யப்பான் 1947ல் சுதந்திரம் பெற்றது. மீன்பிடி, வர்த்தகம், ஏற்றுமதி-இறக்குமதி, விவசாயம், கைத்தொழில், இயந்திர சாதனங்கள், விஞ்ஞானம் தொழில்நுட்பத் துறைகளில் ஆசியாவில் முதலாவதாக இருப்பதுடன் உலகில் முன்னணி நாடகத் திகழ்கின்றது. முற்றுமுழுதாகக் கடலால் சூழப்பட்ட நாடாக இருப்பதால் இந்தநாட்டில் அடிக்கடி "சுனாமி" பேரலை வந்து பேரழிவுகளை ஏற்படுத்தினாலும் மக்களின் கடின உழைப்பால் மிகச்சிறந்த நாடாக விளங்குகின்றது. உலகத்திலே ஆயுள்கூடிய மக்கள் அதாவது 100 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாழுத் நாடுகளில் முதலிடம் பிடிப்பதும் யப்பான்தான்

**ஒலிம்பிக்போட்டிகள்...**

1896ம் ஆண்டு முதலாவது ஒலிம்பிக்போட்டி கிறீஸ்லாந்து நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது 14 நாடுகளைச் சேர்ந்த 280 போட்டியாளர்கள்தான் பங்குகொண்டனர். ஆக 43 விளையாட்டுகள் நடைபெற்றதாம். தொடர்ச்சியாக நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை 5 கண்டங்களிலும் மாறிமாறி இடம்பெற்றுவந்தன. கண்டங்கள் ரீதியாகப் பார்க்கும்போது...

ஐரோப்பாவில் - 17 தடவைகள் நடைபெற்றது
வட ∴ தென் அமெரிக்கா - 08 " "
ஆசியா - 04 " "
அவுஸ்த்திரேலியா - 02 " "
ஆபிரிக்கா - 00 இதுவரை நடைபெறவில்லை

இறுதியாக 2014ம் ஆண்டு பிறேசில் நாட்டில் நடைபெற்றது இதில் 270 நாடுகளைச்சேர்ந்த 6179 ஆண்களும் 5059 பெண்களுமென 11.238 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். 306 விளையாட்டுக்கள் இடம்பெற்றன.

**யப்பான் - டோக்கியோ 32வது ஒலிம்பிக் போட்டிகள்** 2020 - 2021...

2020ல் நடைபெறவேண்டிய ஒலிம்பிக்போட்டிகள் கொரோனா அச்சுறுத்தலால் பின்போடப்பட்டு இவ்வருடம் கோடைகாலத்தில் 23.07.2021 தொடக்கம் 08.08.2021 வரை நடைபெறும். டோக்கியோ நகரில் மட்டும் 1கோடியே 40 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். உலகில் சனத்தொகை கூடிய நகரங்களில் டோக்கியோ நகரம் முதன்மையானது என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

சென்றமுறையைவிட இந்தமுறை கலந்துகொள்ளும் நாடுகளும் வீரர்களும் எண்ணிக்கையில் குறைவடைந்துள்ளன. காரணம் கொரோனாத்தாக்கம். ஆகவே 205 நாடுகள்தான் பங்குகொள்கின்றன. இந்த ஒலிம்பிக்கில் 339 விளையாட்டுகள் இடம்பெறும். கொரோனாப் பரிசோதனைகள்,போதைப்பொருள் பாவனைப் பரிசோதனைகள் இறுக்கமான கட்டுப்பாடுகள் அமுலாக்கப்பட்டிருப்பதுடன் வெளிநாடுகளின் பார்வையாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. உள்நாட்டு பார்வையாளர்கள், ரசிகர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டாலும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வருவோருக்கே அனுமதி கிடைக்கும். ஒவ்வொரு அரங்கும் மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவர். வீரர்களுக்கான சுகாதாரப் பரிசோதனைகள், பாதுகாப்பு அரசால் வழங்கப்படும். டோக்கியோவிலுள்ள விளையாட்டு அரங்குகளைப் பார்த்தால்....

-யப்பான் தேசிய வியைளாட்டரங்கு - 68.000 பார்வையாளர்கள்
ஏனைய 5 பெரிய அரங்குகள் - 15.000 பேர்வரை
சாதாரண 12 அரங்குகள் - 5.000 - 12.000 பேர்வரை

**உலகின் மிகப்பெரிய விளையாட்டு தொடரான ஒலிம்பிக், எதிர்வரும் ஜூலை மாதம் 23ஆம் திகதியும் பாரா ஒலிம்பிக், ஓகஸ்ட் மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. சில புள்ளி விபரங்கள்...**

A - அட்டவணை - 2014 ஒலிம்பில் முதல் பத்து இடங்களைப் பெற்ற நாடுகளின் பதக்கங்களின் விபரம்...

Rio 2016 Olympics Medal Table

| Rank | NOC | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | United States (USA) | 46 | 37 | 38 | 121 |
| 2 | Great Britain (GBR) | 27 | 23 | 17 | 67 |
| 3 | China (CHN) | 26 | 18 | 26 | 70 |
| 4 | Russia (RUS) | 19 | 17 | 20 | 56 |
| 5 | Germany (GER) | 17 | 10 | 15 | 42 |
| 6 | Japan (JPN) | 12 | 8 | 21 | 41 |
| 7 | France (FRA) | 10 | 18 | 14 | 42 |
| 8 | South Korea (KOR) | 9 | 3 | 9 | 21 |
| 9 | Italy (ITA) | 8 | 12 | 8 | 28 |
| 10 | Australia (AUS) | 8 | 11 | 10 | 29 |

B - அட்டவணை - கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் அதிகூடிய பதக்கங்களைப் பெற்ற முதல் பத்து நாடுகளின் விபரம்...

Summer Olympics

| No. | Nation | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | USA | 1022 | 795 | 706 | 2523 |
| 2 | Russia (RUS) | 590 | 486 | 480 | 1556 |
| 3 | Germany (GER) | 428 | 444 | 474 | 1346 |
| 4 | Great Britain (GBR) | 263 | 295 | 293 | 851 |
| 5 | China (CHN) | 224 | 167 | 155 | 546 |
| 6 | France (FRA) | 212 | 241 | 263 | 716 |
| 7 | Italy (ITA) | 206 | 178 | 193 | 577 |
| 8 | Hungary (HUN) | 175 | 147 | 169 | 491 |
| 9 | Australia (AUS) | 147 | 163 | 187 | 497 |
| 10 | Sweden (SWE) | 145 | 170 | 179 | 494 |

C - அட்டவணை - பனிக்கால (குளிர்) ஒலிம்பிக் போட்டிகளில் அதிகூடிய பதக்கங்களைப் பெற்ற முதல் பத்து நாடுகளின் விபரம்...

Winter Olympics

| No. | Nation | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Germany (GER) | 150 | 145 | 113 | 408 |
| 2 | Russia (RUS) | 136 | 108 | 111 | 355 |
| 3 | Norway (NOR) | 132 | 125 | 111 | 368 |
| 4 | USA | 105 | 112 | 88 | 305 |
| 5 | Canada (CAN) | 73 | 64 | 62 | 199 |
| 6 | Austria (AUT) | 64 | 81 | 87 | 232 |
| 7 | Sweden (SWE) | 57 | 46 | 55 | 158 |
| 8 | Switzerland (SUI) | 55 | 46 | 52 | 153 |
| 9 | Netherlands (NED) | 45 | 44 | 41 | 130 |
| 10 | Finland (FIN) | 43 | 63 | 61 | 167 |

D - அட்டவணை - இதுவரை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் மொத்தமாக அதிகூடிய பதக்கங்களைப் பெற்ற முதல் பத்து நாடுகளின் விபரம்...

Combined total

| No. | Nation | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | USA | 1127 | 907 | 794 | 2828 |
| 2 | Russia (RUS) | 726 | 593 | 591 | 1910 |
| 3 | Germany (GER) | 578 | 589 | 587 | 1754 |
| 4 | Great Britain (GBR) | 274 | 299 | 310 | 883 |
| 5 | France (FRA) | 248 | 276 | 316 | 840 |
| 6 | Italy (ITA) 246 | 214 | 241 | 701 | |
| 7 | China (CHN) | 237 | 195 | 176 | 608 |
| 8 | Sweden (SWE) | 202 | 216 | 234 | 652 |
| 9 | Norway (NOR) | 188 | 174 | 158 | 520 |
| 10 | Hungary (HUN) | 176 | 149 | 173 | 498 |

Host cities for Summer and Winter Olympic Games - இதுவரை நடைபெற்ற நாடுகள்

| City | Country | Year | Continent | Summer | |
|---|---|---|---|---|---|
| Athens | Greece | 1896 | Europe | 1 | |
| Paris | France | 1900 | | 2 | |
| St. Louis | United States | 1904 | | 3 | |
| London | United Kingdom | 1908 | | 4 | |
| Stockholm | Sweden | 1912 | | 5 | |
| Berlin | Germany | 1916 | | 6 | Cancelled due to World War-1 |
| Antwerp | Belgium | 1920 | | 7 | |
| Paris | France | 1924 | | 8 | |
| Amsterdam | Netherlands | 1928 | | 9 | |
| Los Angeles | United States | 1932 | | 10 | |
| Berlin | Germany | 1936 | | 11 | |
| Helsinki | Finland | 1940 | | 12 | Cancelled due to World War-2 |
| London | United Kingdom | 1944 | | 13 | Cancelled due to World War-2 |
| London | United Kingdom | 1948 | | 14 | |
| Helsinki | Finland | 1952 | | 15 | |
| Stockholm | Sweden | 1956 | | 16 | |
| Rome | Italy | 1960 | | 17 | |
| Tokyo | Japan | 1964 | | 18 | |
| Mexico City | Mexico | 1968 | | 19 | |
| Munich | West Germany | 1972 | | 20 | |
| Montreal | Canada | 1976 | | 21 | |
| Moscow | Soviet Union | 1980 | | 22 | |
| Los Angele | United States | 1984 | | 23 | |
| Seoul | South Korea | 1988 | | 24 | |
| Barcelona | Spain | 1992 | | 25 | |
| Atlanta | United States | 1996 | | 26 | |
| Sydney | Australia | 2000 | | 27 | |
| Athens | Greece | 2004 | | 28 | |
| Beijing | China | 2008 | | 29 | |
| London | United Kingdom | 2012 | | 30 | |
| Rio de Janeiro | Brazil | 2016 | | 31 | |
| Tokyo | Japan | 2020-2021 | | 32 | |

..........................................................................................

| | | | | |
|---|---|---|---|---|
| Paris | France | 2024 | | 33 |
| Los Angeles | United States | 2028 | | 34 |

1916- 1வது உலக மகா யுத்தம்
1940,1944 -2வது " "
காரணமாக நடைபெறவில்லை.

இந்தவருடம் எந்த... எந்த நாடுகள் பதக்கங்களைப் பெற்றுக்கொள்ளும் எனப் பொறுத்திருந்து பார்ப்போம்...

போட்டிகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்களுக்குபாராட்டுகள்!.. உலகம்வாழ் ரசிகப் பெருமக்களுக்கு வாழ்த்துகள்!...

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை - 480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் - 480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00

07. திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

09. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி - 200-00

10. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

11. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00

## ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-05-2021 (மேலதிகச் செலவு) - 207-08

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

## கொரோனா-கோவிட்-19 நிதி உதவிகள்...

07. திரு திருமதி இரகுநாதன் - Mülheim-Ruhr + 300-00
08. திரு திருமதி ரூபராணி பாலமோகன் -Koln + 150-00
09. திரு திருமதி கலைவாணி ஏகானந்தராசா-Weeze +100-00
10. திரு திருமதி வரதவாணி விவேகானந்தன்-Canada + 100-00
11. செல்வி பவீனா திருநாவுக்கரசு Canada + 66-91
12. திரு திருமதி மேரி சிவஞானம் -London + 100-00
13. திரு திருமதி பசுபதிராசா -Wupperal + 100-00
14. திரு திருமதி கிரேஸல்லா சிவகாந்த்
சிவராசா - Düsseldorf +100-00
15. திரு திருமதி இராஜேஸ்வரி சிவராசா - Duisburg + 100-00
16. திரு சு விக்னேஸ்வரன் - Essen + 50-00
17. பெயர் குறிப்பிடவிரும்பாத அன்பர் - Oberhausen + 80-00

-------------

+ 1246-91 + 1246-91

-------------------------

+ 1519-83

முற்பக்க மீதி + 1519-83

அனுப்பியது:-

1-தமிழர் பண்பாட்டு அமைப்பு + ஐக்கிய சிந்தனை அமைப்பு
இரத்தினபுரி (மலையகம்) கொரோ நிதி உதவி -1000-00

2-"அருளகம்" அகிலாண்டேஸ்வரி சிறுவர் இல்லம்- வவுனியா- 480-00

மண் சஞ்சிகை கணக்கு வங்கிவரி:--

| | | |
|---|---|---|
| 01.05.2021 - 31.05.2021 - 13.78 | | |
| 01.06.2021 - 30.06.2021 - 11.86 | 25-64 | |
| | - 1505-64 | - 1505-64 |
| 30.06.2021 மீதி கையிருப்பு- | | - 14-19 |




## நன்றிப் பெருக்கு!.. திருமதி கலைவாணிக்கு!..

தாயகத்திலுள்ள ஆதரவற்ற பிள்ளைகள், மாற்றுத்திறனாளிகள் போன்றோருக்கு மண் சஞ்சிகையின் வாசகர்கள் உதவும் பணியைப் பலஆண்டு களாக மேற்கொண்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.. சென்றவருடம் கொரோனா தொற்று பேரனர்த்தம் தொடங்கியபோது எமது வாசகர்கள் பெரும் நிதிஉதவிகளை வழங்கினார்கள். சென்ற மாதமும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு உதவும் பணிகள் மேற்கொள்வதற்கு எமது வாசகர்களின் 11 பேர் அன்பளிப்பாக 1246-91 யூரோ சேகரிக்கப்பட்டு 1000-00 யூரோ 6-7-2021 அன்று அனுப்பி வைத்தோம். அன்பளிப்புகளை வழங்கிய நல்லுள்ளங்களின் விபரங்களை 72 ம் பக்கத்தில் காணலாம்.

இந்த நிதிப் பங்களிப்பை நாம் கேட்காமலே சிலர் உதவி புரிந்துள்ளார்கள். இன்னும் சிலர் முகம்தெரியாத உறவுகள்கூட உதவிக்கரம் நீட்டியுள்ளனர். குறிப்பாக நிதி சேகரிப்பில் எமக்கு உதவிய திருமதி கலைவாணி ஏகானந்தராசா அவர்களுக்குப் பாராட்டுகள். நிதி உதவிபுரிந்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றிகள்!..

**-ஆசிரியர்-**

# கல்வி வழிகாட்டல் இல்லம்.

"கற்கை நன்று கற்கை நன்று, பிக்சை புகினும் கற்கை நன்று." கல்தோன்றி மண்தோன்றா முன் தோன்றிய எம் மூத்தத் தமிழுக்கு சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.எழுத்தாணி எடுத்து ஏடுகள் பல வடித்து, வானியல், வணிகம், பொருளாதாரம், கல்வி, ஆன்மீகம், சீராகிட முறை வகுத்த நமது முன்னோரை நினைவு கூருகின்றேன். இன்றைய தலைமுறை எதை நோக்கிப் பயணிக்கின்றது? "வழிப்போக்கன் எறிந்த கல்லிலே அகப்பட்ட வீட்டு நாயைப் போல" எமது மக்கள் எல்லாவற்றிலும் அடிபட்டு நொந்து கிடப்பதுதான் கவலைக்கிடமாகும்.

இன்றைய தலைமுறையை நான் எதற்கு ஒப்பிடுவேன்? கல்லா, நாயா அல்லது வழிப்போக்கனா? தொலைபேசி, தொலைபேசி என்று உங்களை விலை பேசி விற்கும் பேதையரே, போதையில் வீழந்து பாதையை மறக்கும் மாணவரே! ஆடம்பரத்தை நேசிக்கும் பெற்றோரே, விழித்தெழுங்கள். விடியல் நமதே!

இன்று எமது பிரதேசங்களில் சிறுவர்கள், மாணவர்கள் பொருத்தமான வழிகாட்டல் இன்றி அவதிப்படுவதை அதிகமான சந்தர்ப்பங்களில் அவதானிக்கின்றோம். நல்லதையே நேசித்தல், நல்லதையே யோசித்தல், நல்லதையே வாசித்தல், நல்லதையே எழுதுதல், நல்லதையே காணல், நல்லதையே கேட்டல், நல்லதையே சுவாசித்தல், நல்லதையே சுவைத்தல், நல்லதையே மனனம் செய்தல் இன்று அவசியமாகத் தேவைப்படுகின்றது.

சோர்ந்தது போதும். சேர்ந்து செயற்படுவோம்.
செத்தது போதும். வாழ்ந்து இடம் பிடிப்போம்,
எடுத்தது போதும். கொடுத்து, மகிழ்வுறுவோம்.
வீழ்ந்தது போதும். எழுந்து விடை கொடுப்போம்.

க.பொ.த சாதாரணதர பெறுபேறு ஆய்வு - நாடுதழுவிய ரீதியில் பெற்ற இடம்..
இலங்கையிலுள்ள 25 மாவட்டங்களில் பெற்ற இடங்கள்..

| | 2012 - | 2013 - | 2014 - | 2015 - | 2016 - | 2017 | -2018 | - 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 10 | 4 | 2 | 10 | 19 | 12 | 9 | 7 |
| யாழ்ப்பாணம் | 16 | 8 | 20 | 21 | 20 | 19 | 18 | 19 |
| வவுனியா | 7 | 3 | 7 | 16 | 16 | 18 | 15 | 21 |
| திருகோணமலை | 20 | 20 | 21 | 23 | 24 | 23 | 24 | 24 |
| கிளிநொச்சி | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |

தொடர்ச்சியா கிளிநொச்சி, திருகோணமலை மாவட்டங்கள் பின்தங்கிவருவது கவனிக்கத்தக்க விடையமாகும். இன்றைய நிலையில் போதையில்அகப்பட்டவர்களை மீட்டெடுத்தல், வறிய மாணவர்களுக்கு கல்வி, உணவு, உடை அளித்தல் பாதிக்கப்பட்டுவரும் மக்களுக்கு மறுவாழ் உதவித்திட்டங்களைச் செய்து வருகின்றோம்.

உத்தேசச் செலவீனம்:

1. மண்டபம் 600,000 ரூபா
2. தளபாடங்கள் 150,000 ரூபா
3. கணனி, இதரப்பொருட்கள் 125,000 ரூபா
4. ஆசிரியருக்கான பங்களிப்பு 125,000 ரூபா

மொத்தம் 1,000,000 ரூபா.

தனித்தோ அல்லது குழுவாக இணைந்தோ உங்களது அன்பளிப்பைத் தந்து ஊக்குவிப்பு நல்குமாறு இத்தால் உஙகளைக் கேட்டு நிற்கின்றோம்.
வங்கி இலக்கம்: 8005424173
வங்கியின் பெயர்: கொமர்சியல் வங்கி
வைப்பின் பெயர்: Change Charitable Trust

*Rev.Dr.D.V.Patrick, Omi*
*Director*
*CHANGE CHARITABLE TRUST*

நன்றி! வணக்கம்!

கலாநிதி டேவிற் வின்சன் பற்றிக் அ.ம.தி
இயக்குனர் ”மாற்றம்” அறக்கட்டளை

# அட்சயம்

(கரங்களை கொடுத்து தரங்களை உயர்த்துவோம்)

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| க.அருந்தவராஜா (மொழிக்குமரன்) | குகேந்திரன் சசிந்திரா |
| 21, Horowpathana Road, | 40/03, |
| Sinnaputhukkulam, Vavuniya, | Near Railway Station, Vavuniya, |
| Sri Lanka. | Sri Lanka |
| T.P No:- 0094 774248267 | T.P No:- 0094 772548047 |

06.01.2021

அன்புடையீர்! வணக்கம்

வவுனியா மாவட்டத்தில் பெரும்பாலான கிராமங்கள் வறுமைக் கோட்டுக்கு கீழேயே காணப்படுகின்றன. 2009இல் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் வடக்கு கிழக்கில் புனர்வாழ்வு என்பது இல்லாமையால் இக்கிராமங்கள் மேலும் பாதிக்கப்படுகின்றன. இப்போது கொராணாவின் தாக்கத்தால் பட்டினிச் சாவை எதிர்நோக்கி உள்ளனர். அன்றாடம் கூலி வேலைகள் செய்து குடும்பங்களை பாதுகாத்தவர்கள் இன்று மிகவும் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் இக்குடும்பங்களிலுள்ள மாணவர்கள் தமது கல்வியை தொடர முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

"அட்சயம்"என்னும் பொதுநிறுவனமாகிய நாம் எம்மால் முடிந்தவரை கிராமங்களுக்கு உதவுதல் என்ற வேலைத்திட்டத்தினை அரசியல், மதங்கள், பிரதேசங்களைக் கடந்து புலம்பெயர் தமிழ் மக்களின் உதவியுடன் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக செய்து வருகின்றோம். இம்முறை மாணவர்களுக்கு உதவுதல் என்ற அடிப்படையில் வவுனியாவில் உள்ள சிதம்பரநகர், மதுராநகர் என்னும் இரண்டு கிராமங்களை தெரிவுசெய்து உதவ முன்வந்துள்ளோம். அக்கிராமங்களில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "எழுச்சியின் கரங்கள்" என்னும் பெண்கள் அமைப்புகளினூடாகவே எமது உதவித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். அங்குள்ள 163 பிள்ளைகளுக்கு தேவையான கொப்பிகளை வழங்குதல் என்னும் எமது உதவித்திட்டத்திற்கு தங்களாலான உதவியினை செய்து மாணவர்களுக்கு உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உண்மையுள்ள

க.அருந்தவராஜா தலைவர் "அட்சயம்" தொடர்புகளுக்கு: தொலைபேசி: 0094774248267 email. rajah27@hotmail.com

பணத்தை உபயோகிக்க உள்ளோம் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தாங்கள் சரியான நேரத்தில் அனுப்பி வைத்த பணம் எங்களுக்கு பேருதவியாக இருந்தது. அதற்காக எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்து எமக்கிடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்வோம். வாழ்க மண் நிறுவனத்தின் மனிதநேயப்பணி. நன்றி

கலாபூசணம்.க.அருந்தவராஜா — Tel 0094774248267
தலைவர் — Email rajah27@hotmail.com
"அட்சயம்" - வவுனியா

**UNITED MIND**
Association for Sustainable Community Development
**(Non-profit organisation)**

Date: 30/06/2021

வ.சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை,
யேர்மனி.

**கோவிட்-19 நிவாரண பொருள்கள் வழங்குதல் தொடர்பாக.**

இலங்கையில் இரத்தினபுரி மாவட்டத்தில் எமது மலையக தமிழ் மக்கள் 58 தோட்டங்களில் 232 பிரிவுகளில் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களாகவே காணப்படுகின்றனர்.

நாட்டில் ஏட்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இணையவழி மூலம் zoom, whats App குழு வகுப்புக்கள் என்பன நடைபெற்ற போதும் தோட்டப் புறங்களில் இணைய வசதி இன்மை காரணமாகவும் கணினி வசதி மற்றும் ஸ்மார்ட் போன் வசதி குறைவு என்பதினால் எம் மாணவர்களுக்கு இவ்விணையவழி கல்வியின் பயனை அடைய முடியாதுள்ளது.

மேலும் ஊரடங்கு, பயணத்தடை காரணமாக அன்றாட வருவாய் இழந்த பொருளாதார வீழ்ச்சியின் விளிம்பு நிலையில் நிற்கின்ற இம் மக்கள்; பாரிய உணவு தட்டுப்பாட்டிற்குள்ளாகி உள்ளனர். மலையகத் தமிழர்கள் வசிக்கும் தோட்டப் பகுதிகளில் நிவாரண உதவிகள் கிடைப்பது மிக மிக அரிது அடையாளப்படுத்தப்பட்ட மக்களை காத்துக் கொள்ளவும் ஊரடங்கு மற்றும் இங்கு நிலவிவரும் அசாதாரண சூழ்நிலையை சமாளிக்கவும் எமது அமைப்பு எம் மக்களுக்கு நிவாரணப்பொருள்களை வழங்கிக் கொண்டி ருக்கின்றது.உலகமே முடங்கி இருக்கின்ற இந்த வேளையில் **தனக்கு மிஞ்சியதை தானமாய் வழங்க காத்திருக்கும் நல்லுள்ளங்கள் தங்களால் இயன்ற பொருள் உதவியை எங்களுக்கு அளித்தனர்.**

அது போல் தங்கள் பாரிய சேவையை நானறிவேன். அச்சேவை எமது மாவட்டத்திற்கும் கிடைக்க வேண்டி எதிர்பார்க்கின்றேன்.அவ்வாறு உதவி கிடைக்குமானால், தங்களுடைய அமைப்பின் பெயரிலேயே மக்களை சென்றடையும் என்பதையும் உறுதி அளிக்கின்றேன். மேலும் நன்கொடை கிடைக்கும் பட்சத்தில் அதற்கான கணக்கறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்பதோடு, **உதவிக்கரம் எம்பக்கம் நீட்டப்படும் என்ற எதிர்பார்ப்புடன்....**

**இவண்**
க. சிவராஜ்வளவன்
தலைவர்
ஐக்கிய சிந்தனை அமைப்பு
இலங்கை

**நன்றிகள்**

+94 45 449 4514, +94 766 161 522 | unitedmind.lk@gmail.com
No.72, Reservoir Road, Ratnapura, Sri Lanka.

# இலங்கைச் செய்திகள் சில..

-இலங்கையைச் சேர்ந்த 1.70.000 பேர் அவுஸ்திரேலியா நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குத் தொழில்புரிவதாகவும் அங்கு 12.000 இலங்கை மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள் எனவும் சபாநாயகர் தெரித்துள்ளார்.
2-இணையங்களில் குற்றங்களைத் தடுத்தல் செயற்பாட்டில் உலகிலுள்ள 160 நாடுகளில் எடுக்கப்பட்ட கணிப்பில் இலங்கை 69 வது இடத்தில் உள்ளது.
3-பத்து ஆண்டுகளின் பின் யாழ் குடாநாட்டில் இடம்பெயர்வு, வெளிநாடுகளுக்குச் செல்லல், பிறப்புவீதம் குறைந்தமை போன்ற காரணங்களால் மக்கள் சனத்தொகை குறைவடைந்தபடியால் 7 பேராக இருந்த யாழ்- கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தின் M P களின் எண்ணிக்கை 6 ஆகக் குறைவடைத்துள்ளது. 2010ம் ஆண்டில் 10 M P ஆகவும் 2014ம் ஆண்டில் 7 M P ஆக இருந்துள்ளது.
4-இலங்கையின் புதிய சட்டமா அதிபராக சஞ்சஜ் இராஜரட்ணம் என்பவர் நியமனம் பெற்றுள்ளார்.
5-கொரோனாத்தாக்கத்தால் புகைபிடிப்பவர்கள் தொகை குறைவடைந்தாலும் தினமும் இந்நோயினால் 35 - 40 பேர்வரை இறப்பு என சுகாதாரப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.
6-ஒரு புறம் கொரோனா மறுபுறம் டெங்குக் காய்ச்சல் 2021 தை தொடக்கம் வைகாசி வரையான 5 மாதத்தில் 7.674 பேர் பாதிப்பு 4 பேர் இறப்பு.
7-இலங்கையின் 25 மாவட்டங்களில் சுமார் 45 லட்சம் மாணவர்களுக்கு இணைய வசதிகள் கிடையாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
8-மதுபானச்சாலைகள் மூடப்படுவதால் தினமும் 100 கோடி ரூபா அளவில் அரசுக்கு நட்டம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
9-கடந்த 1.6.2021 - 6.6.2021 நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் 10 மாவட்டங்களிலுள்ள 4 லட்சம்பேர் பாதிப்பு. 20.000 பேர் இடம்பெயர்வு, 20 பேர் இறப்பு, 750 வீடுகள் சேதம்.
10-கடந்த 31.5.2021 வரை கொரோனா நிவாரணப் பணிகளுக்காக இலங்கை அரசுக்கு 28.600 கோடி ரூபா செலவு ஏற்பட்டதாக அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
11-சிறுநீரகப்புற்றுநோய் காரணமாக தினமும் 80 - 10 பேர்வரை இறப்பு வருடம் 2.38.000 பேர் நோயாளிகள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
12-தெற்காசியாவின் பாரிய சிறுநீரக வைத்தியசாலை ஒன்றை ஜனாதிபதி பொல்லநறுவையில் திறந்து வைத்தார்.
13-பயணக்கட்டுப்பாடுகளால் இலங்கை அரசுக்கு இதுவரை 45.000 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.
14-இலங்கை கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்காக உலக வங்கியும் ஐரோப்பிய யூனியனும் 1.600 கோடி ரூபாக்களை வழங்கியுள்ளன.
15-சுமார் 6 - 17 வருடங்களாக சிறைகளில் வைக்கப்பட்டிருந்த 93 அரசியல் கைதிகளுக்குப் போசன் பண்டிகை தினத்தில் ஜனாதிபதி விடுதலை செய்தார். இதில்16 தமிழ் அரசியல் கைதிகளும் அடங்குவார்கள்

# பண்ணாகம்.கொம் உலகளாவிய சிறுகதைப் போட்டி

# யேர்மனி 2021 - போட்டி முடிவுகள்.

பண்ணாகம்.கொம் தனது 15 வது ஆண்டு விழாவை முன்னிட்டு உலகளாவிய தமிழ் மக்கள் வாழும் 12 நாடுகளிலிருந்து 264 எழுத்தாளர்கள் பங்கு பற்றி எழுதி அனுப்பிய சிறுகதைகள் 5 நாடுகளிலிருந்து 6 நடுவர்களால் மிக சிறந்த முறையில் நடுநிலை செய்யப்பட்டு முதல் மூன்று இடங்களுக்குள் 6 கதைகள் தெரிவு செய்யப்பட்டது. அதில் 1ம் இடம் ஒருவருக்கும், 2ம் இடம் இருவருக்கும், 3ம் இடம் மூவருக்கும் வழங்கப்பட்டது.

1ம் இடம் பெற்ற கதை "உறவுகளின் வலி"
திருமதி .சுகுணராணி சண்முகேந்திரன் . யாழ்ப்பாணம் ,இலங்கை

2ம் இடம். பெற்ற கதைகள்
"சித்திரைப்பூ" திரு.அழகக்கோன் சந்திரகாந்தன். பிரான்ஸ்
"அகதி வாழ்வு" திரு. கே.எஸ். சுதாகர். அவுஸ்திரேலியா

3ம் இடம்பெற்ற கதைகள்.
" அம்மா என்றொரு சொல்" திரு.தங்கராசா செல்வக்குமார்.ஏழாலை ,இலங்கை
" பாத்திரம் அறி" திரு.க.சிறீதாஸ். கொலண்ட்
" கருமைநிற வண்ணத்தில்" செல்வி. வித்தியாசிறீ. தமிழ்நாடு ,இந்தியா

இதில் 225 கதைகளை எழுதிய எழுத்தாளர்களைத் தெரிவு செய்து சிறந்த எழுத்தாளர்கள் என சிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. இந்த சான்றிதழ்கள் இதுவரை கிடைக்கப்பெறாத போட்டியில் பங்கு கொண்ட எழுத்தாளர்கள் பண்ணாகம். கொம் நிர்வாக வாட்ஸ்அப் 0049 1737079149 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும். இந்த போட்டியின் போது ஊடக அனுசரணைவழங்கிய மண் சஞ்சிகை பிரதம ஆசிரியர் திரு.சிவராசா அவர்களுக்கு பண்ணாகம் இணைய பிரதம ஆசிரியர் திரு.இக. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நிர்வாகத்தினரும் நன்றிகளைத் தெரிவிக்கின்றார்கள்.

தகவல் கண்ணன்:-
Mr.E.K.Krishnamoorthy
""ஊடக வித்தகர்"" விருது 2017
""வாழ்நாள் சாதனையாளர்"" விருது 2.3.2019
""வாசகர் வட்ட விருது"" 15.9.2019
""உலக சாதனையாளர் விருது"" 2020, 2021
""செந்தமிழோன்"" 29.5.2021

Editor of Pannagam.com
former Editor of Namathu Ilakku
News paper-GERMANY
officeTel: 0049 293378252
mobil . 0049 17623826260
Office Handy - 0049 1737079149
www.pannagam.com

# தமிழ்ப்பெண் எழுத்தளர்கள் விபரத்திரட்டு!... யேர்மனிய தமிழ்ப்பெண்களுக்கு அரிய வாய்ப்பு!..



யேர்மனியில் வாழ்ந்துகொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்களின் விபரப்பட்டியல் இதுவரை காலமும் எவராலும் தயாரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்படவில்லை என்பது துர்அதிஸ்டவசமே. பெண்களில் திறமைகள், ஆளுமைகள், கல்விப்பணிகள், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ப் பணிகள், சமூகப்பணிகள் எனப்பல்வேறு பொதுப்பணிபணிகளைச் செய்துவரும் தமிழ்ப்பெண்களை உலகம்வாழ் நம்மக்களுக்கு அறியப்படுத்த வேண்டியது காலத்தின்கட்டாயாகும்.

யேர்மனியில் வாழ்ந்துவரும் தமிழ்ப்பெண்களில் பல பெண்கள் கவிஞர்கள், எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், இலக்கியவாதிகள், பேச்சாளர்கள், பொதுப்பணியாளர்கள், ஆன்மீகவாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல்வகை ஆளுமைமிக்கவர்களாகக் காணப்படுவது சிறப்பான அம்சமாகும்.

எனவே இப்பணிகளில் ஈடுபட்டுவரும் தமிழ்ப் பெண்களின் விபரத்திரட்டு ஒன்றைவெளிக் கொண்டுவரும் முயற்சியில், ஆவணப்பதிவு ஒன்றைத்தயாரித்து நூலாக உருவாக்கும் பணியில் ஈடுபட்வருகிறோம்.நீங்களும் உங்கள் தகவல்கள், தரவுகளைத் தந்து உதவினால் இப்பதிவில் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம். காலம் தாழ்த்தாது விரைவாகத் தங்கள் தகவல்களை அனுப்பி உதவலாம்... நன்றி!.. **திருமதி சாந்தினி துரையரங்கன்.** Essen - Germany.

மின்னஞ்சல் niruthiyam@hotmail.de
"மண்"சஞ்சிகை v.sivarajah@arcor.de

குறிப்பு:- யேர்மனியில் வாழும் ஆண் + பெண் எழுத்தாளர்களை ஆவணப்படுத்தும் முயற்சியில் யேர்மனி படைப்பாளர்கள் கழகத்தினரால் "படைப்பாளர்கள்" என்னும் நூலும் உருவாகி வருவது பாராட்டுக்குரிய விடயமாகும். எனவே யேர்மனிவாழ் படைப்பாளர்கள் தமது விபரங்களை கீழ்க்குறிப்பிடும் மின்னஞ்சலுக்கு அனுப்பினால் இந்த நூலிலும் தங்கள் விபரங்கள் பதிவாகும் என்பதனையும் அறியத்தருகிறோம்!..

மின்னஞ்சல்:- germantamilwriter@outlook.com



Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
Germany / Ausgabe 208




2021 ஐரோப்பிய கால்ப்பந்தாட்டப் போட்டியில் வெற்றிபெற்ற இத்தாலி நாட்டு அணியினர்...

**Union of European Football Champion ship - 2021 - Winner - Italy**

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |